தேவோபாசனைதீபம்

## தேவோபாசனாதீபம் முதற் பாகத்திற் கூறப்பட்டுள்ள விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| ஆஸ்திகம் ... | 1 |
| தெய்வவியல் ... | 3 |
| அதிசயமுதலிய பிரமத்தன்மை நான்கிற்கும் ஜீவான்மதிருட்டாந்தம் ... | 4 |
| ஷெடி ஷெடிக்கு தாட்டாந்தம் | 5 |
| ஷெடி ஷெடிக்கு பிரமாணம்.. | 6 |
| ஸ்தூலோபாசனை சூக்ஷ்மோபாசனைக்குச்சாதனம் . | 9 |
| வழிபாட்டிற்குப் பயிற்சியவசியம் .. | 11 |
| பொருளும் நினைப்பும் .. | 11 |
| ஸ்தூலவிக்கிரகம், மானதவிக்கிரகம் ... | 12 |
| மின்சாரதிருட்டாந்தம் ... | 14 |
| உபாசனை சூக்குமம் ஸ்தூலம் என்றிருவகை ... | 15 |
| அதீதோபாசனை ... | 15 |
| அருவோபாசனை .. | 18 |
| ரூபாரூபோபாசனை .. | 19 |
| கிறித்துவர் மானத விக்கிரகோபாசகர் ... | 22 |
| முகம்மதியர் மானதவிக்கிரகோபாசகர் .. | 25 |
| வைதிகர் விக்கிரகோபாசகரல்லர் ... | 26 |
| ஸ்தூலோபாசனை ... | 29 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| விசுவரூபோபாசனை ... | 32 |
| உலகிலெவ்வடிவைக் கண்டு வணங்கினும் பரமேசுரன் வடிவ வணக்கமேயாம் என்பதற்குக்காரணம் .. | 34 |
| விசுவரூபம் ... | 36 |
| லிங்கசப்தார்த்தம் ... | 39 |
| சதாசிவலிங்கம் (விசுவரூபம்) | 39 |
| அண்டலிங்கம் ... | 40 |
| பிண்டலிங்கம் (உருவம்)... | 40 |
| ஆன்மலிங்கம் (அருவம்) . | 41 |
| தாபரலிங்கம் (உருவம்) ... | 42 |
| ஞானலிங்கம் (அதீதம்) .. | 44 |
| ரூபகற்பனையின் கருத்து... | 44 |
| மூர்த்தோபாசனை ... | 45 |
| ஆலயவணக்கம் ... | 48 |
| வடிவில் வழிபாடு (அவிக்கிரகோபாசனை) ... | 48 |
| உறுப்புடைவடிவ வழிபாடு (அங்கவிக்கிரகோபாசனை) | 49 |
| ஆலயவணக்கத்தின் பயன் | 49 |
| கண்டோபாசனை (விக்கிரகோபாசனை)க்கு உதாரணம் ... | 54 |
| அபிஷேகாதி யுபசாரங்கள் | 56 |
| புருடாகிருதிவணக்கம் .. | 58 |
| பரமேசுர னொருவடிவுடையனன்று ... | 60 |

# தேவோபாசனாதீபம் முதற் பாகத்தில் உதகரிக்கப்பட்ட நூல்கள்.


| எண். | நூலின் பெயர் — உதகரிக்கப்பட்டிருக்கும்பக்கம் |
|---|---|
| | **வடமொழி** |
| 1 | ரிக்வேதம் 71. 73. 166. |
| 2 | எஜுர்வேதம் 72. 73. 74. 165. |
| 3 | சுக்லயஜுர்வேதம் மாத்தியந்தினசாகை 19. |
| 4 | பிரஹதாரண்யோபநிஷத் 4 5. 7. 18. 32. 39 41. 42. 46. 47. 95. 161 |
| 5 | சுவேதாசுவதரோபநிஷத் 5. 6 7. 17. 36. 47. 73. 161. 163. 166. |
| 6 | கடவல்லியுபநிஷத் 6. 42 |
| 7 | ஈசாவாஸ்யோபநிஷத் 167 |
| 8 | கைவல்யோபநிஷத் 7. 8. 72. |
| 9 | தைத்திரியோபநிஷத் 7. 19. 29. 38. 39. 72. 80 166. |
| 10 | சாந்தோக்கியோபநிஷத் 7 36. |
| 11 | முண்டகோபநிஷத் 17. 166. |
| 12 | தேஜோபிந்தோபநிஷத் 6. |
| 13 | ராமதாபினி உபநிஷத் 21. |
| 14 | பஸ்மஜாபாலோபநிஷத் 72. |
| 15 | பிரஹத்ஜாபாலோபநிஷத் 74. |
| 16 | கூர்மபுராணம் 3. |
| 17 | ஹடயோகப்பிரதீபிகை 6 |
| 18 | ஸ்மிருதி 46. 79. 170 |
| 19 | சூதசம்ஹிதை 53. 63. |
| 20 | அகோரசிவாசாரியர் பத்ததி 62. |
| 21 | பூஜாஸ்தவம் 88. |
| 22 | நிர்வசனபத்ததி 106. |
| | **தமிழ்** |
| 1 | திருநாவுக்கரசர் தேவாரம் 6. 8 19. 29. 39. 64. 65. 66. 70 80. 161. |
| 2 | திருஞானசம்பந்தர் தேவாரம் 6. 19. 59. 60. |
| 3 | சுந்தரமூர்த்திகள் தேவாரம் 60. 69. |
| 4 | தேவாரம் 16. 29. 70. 143 |
| 5 | திருவாசகம் 3. 6, 7. 58. 135. 162. |
| 6 | திருமந்திரம் 8. 81. 125. 139. 144. 162. |
| 7 | திருவாய்மொழி 144. |

# தேவோபாசனாதீபம் முதற் பாகத்தில் உதகரிக்கப்பட்ட நூல்கள்.

| நெ. | நூலின் பெயர் — உத்தரிக்கப்பட்டிருக்கும் பக்கம் | நெ. | நூலின் பெயர் — உத்தரிக்கப்பட்டிருக்கும் பக்கம் |
|---|---|---|---|
| 8 | சசிவர்ணபோதம் 16. 76. | 2 | Universal Religion Formulated 24. |
| 9 | சதாசிவரூபம் 37. | 3 | கொரான் 25. 158. |
| 10 | சிவஞானசித்தியார் 135. 144. | 4 | மஹாகனம் டாக்டர் வி யோமியூரின் தேர்ந்தெடுத்த எழுத்துகள் 28 41. 155. |
| 11 | தத்துவப்பிரகாசம் 144 | | |
| 12 | திருவள்ளுவர் குறள் 1 | | |
| 13 | தாயுமானவர் 2. 39. 75 81. 162. | 5 | அநுபவநூற்புலவர் டின்டால் 144. |
| 14 | கைவல்யநவநீதம் 75. | | |
| 15 | கிறிஸ்துவர் பழய ஏற்பாடு 22. 154. | 6 | டாக்டர் மில்லர் கூற்று 156. |
| 16 | புதியஏற்பாடு 22. 154 | | |
| | இங்கிலீசு | | ஆகப்பிரமாண நூல்கள் 44 வாக்கியங்கள் 120 |
| 1 | லூதரின் எழுத்துகள் 24 | | |

தேவோபாசனாதீபம் முதற்பாகத்தில் உதகரிக்கப்பட்ட நூல்கள் முற்றிற்று.

# Opinion.

FROM

*Brahmasree*

P. NARAYANA IYER AVL. B. A. B. L.,

HIGH COURT VAKIL,

*Secretary.*

Hall of Theosophy, Madura.

7—5—1907.

My dear Sivagnanaswamigal

I thank you for the pages on the Light of Divine worship, in Tamil. It is a very interesting and instructive pamphlet. Please Complete it.

Yours Sincerely,

P. NARAYANAN.

---

## சிறப்புப்பாயிரம்.

---

*விருதை ஸ்ரீ சிவஞான யோகிகள் இயற்றிய "தேவோபாஸனாதீபம்" என்னும் புஸ்தகத்தைப் படித்துப்பார்த்து மிகுந்த சந்தோஷமடைந்தேன்.*

*இது பெயருக்குத்தக்கவண்ணம் பலவகைப் பொருள்களையும் எளிதாகக்காட்டும் பெருமைவாய்ந்துள்ளது. விக்*

கிரஹாராதனம் வேண்டுவதில்லை யென்பவர்கள் இப்புஸ்தகத்திற் சிலபக்கங்களை ஊன்றிப்படிப்பார்களாயின் அங்ஙனங் கூறுதல் தவறென்றெண்ணுவார்களென்பது ஒருதலை இதிலுள்ள விஷய அமைப்பும் அழகானவாக்கியங்களும் சிறந்த மேற்கோள்களும் நூலாசிரியரது கல்விவன்மையை நன்கு புலப்படுத்துகின்றன.

சென்னை<br>
பிரசிடென்ஸிகாலேஜ்<br>
28—7—07

இங்ஙனம்<br>
வே. சாமிநாதையன்<br>
(மஹாமஹோபாத்தியாயர்)

---

## தேவோபாசனாதீபம்.

இந்தப் புஸ்தகம் இந்துக்களினது மதாசாரத்தில் ஒருபங்காகிய விக்கிரக ஆராதனையைப்பற்றி அந்நியமதத்தார் கொண்டிருக்கும் தப்பபிப்பிராயத்தைத் திருத்தும் நோக்கமாய் விருதை சுவாமி சிவஞானயோகி அவர்களால் செய்யப்பட்டது. கிறிஸ்துவர் மகம்மதியர் முதலிய அந்நியமதஸ்தர் இந்துக்கள் லிங்க முதலியவடிவங்களைவைத்து ஆராதனை செய்யும்போது அந்த வடிவங்களையே ஆதிதெய்வமாக நம்பிப் பூஜை செய்கின்றார்களென்று தப்பாகக் கூறுகின்றனர். பிரம்மசமாஜம் ஆரியசமாஜம் முதலிய நவீன மதஸ்தர் இந்துக்கள் அநுஷ்டிக்கும் விக்கிரக ஆராதனைக்கு வேதசாஸ்திரங்களில் ஆதாரம் இல்லையென்று கொள்கின்றனர். இவ்விரண்டும் தப்பென்றும், விக்கிரக

ஆராதனம் செய்வது கர்மம் யோகம், சமாதி முதலிய மோக்ஷ சாதனங்களுள் ஒன்றென்றும் அநேக ஆதாரங்களைக் கொண்டு ரூபிக்கப்பட்டிருக்கிறது. விவிலியமதம், மகம்மதியமதம், இவைகளிலின்றும் விக்கிரக ஆராதனைக்கு அநுகூலமான ஆதாரவாக்கியங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தப்புஸ்தகத்தில் இந்துமதாசார ரகசியங்கள் பற்பல சாஸ்திரங்களிற் கண்டபடி தொகுத்துக் காட்டப்பட்டிருக்கிறபடியால் இந்துமதாபிமானிகள் படித்து நலம்பெறக்கூடும். இந்துமதத்தில் குற்றங்கூறும் அந்நியமதஸ்தர் கொள்கைகளைக் கண்டிக்கவும் உதவக்கூடியதாயிருக்கின்றது. தற்காலம் இந்துக்களில் பலர் சர்வோத்கிருஷ்டமான வைதீகமதத்தின் கொள்கைகளையும் அவைகளின் பெருமைகளையும் அறியாது அந்நியரது போலி வாதங்களால் மயங்குகின்றனர். சிவஞான யோகிகளது "தேவோபாசனதீபம்" ஆகிய இவ்வருந்நூல் அவர்களது மயக்கத்தை நீக்கி சுவமதாபிமானத்தைப் புகட்டக்கூடியது.

15—8—07 ஜி. சுப்பிரமணிய ஐயர் பி. ஏ.

(சுதேசமித்திரன் பத்திராதிபர்)

அம்பாசமுத்திரந் தாலூகா அரிகேச நல்லூர்

பிரமஸ்ரீ பு. வ. முத்துசுப்பபாரதிகளாலியற்றப்பட்டது.

வெண்பா

முத்திப்புதைபொருளை முன்காட்டு மஞ்சனமாம்
பத்திக்குருவான பாவனையுஞ்—சித்திக்க
விக்கிரகாரா தனத்தின் மேலாம் விதியுரைத்தான்
தக்கசிவ ஞானமுனி தான்.

விருத்தம்.

பேருலகி லகந்தைநிலத் தினிற்குதர்க்க மரங்கண்மிகப்
ப்ரபலித் தோங்கும்
வேருடைய பேதமைக்காண் டவனத்தைச் சிவஞான
விஜயன் கல்விச்
சீருடைய பிரசங்கத் தீக்கணையா லெரித்தனதிற்
றெரித்த தான
வோர்பொறியே தேவோபா சனதீப மெனும்
பெயரோ டுயர்ந்ததம்மா.

சிவமயம்.

# தேவோபாசனாதீபம்.

## முதற்பாகம்.

# The Light of Divine Worship.

திருநெல்வேலிச் சிவாலயத்தில் 1904-ஆ ஜூலைமீ 3, 17, 24, உகளாகிய ஞாயிற்றுக்கிழமைகளில் விக்கிரகாராதனவிஷயமாய்க்கூடிய மகாசபையில் ஸ்ரீலஸ்ரீ. சுவாமி. விருதை. சிவஞானயோகிகள் செய்த பிரசங்கங்களின் சாரம்.

## ஆத்திகம்.

குறள் "அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு."

உலகில் ஜீவர் முற்றும் அறியாமலும் அறிதற்கேலாமலும் புரியாமலும் புரிதற்கேலாமலும் இருக்கும் ஆகாரங்களையும் அவைகளையுட்கொள்ளும் அவயவங்களையும்

அவைகளுட்சென்று பாகப்பட்டு இரசபேதங்களாகி சப்த தாதுக்களைவளர்த்து அவற்றால் மனமாதிகட்குப் பலமளித்துச் சரீரத்தானுகரக்கூடிய போகங்களை நுகர்தற்கேதுவாகவமைந்த கருவிகளையும், அவ்வமைப்புகளும் அவைகளின் அங்கப் பிரத்தியங்கங்களும் ஒன்றுக்கொன்று இன்றியமையாப் பிரயோசனத்தோடும் ஒற்றுமைப்பாடுமிருத்தலையும், யாம் உலகிற் காண்டலால், புகைகண்டுழி அதற்குக் காரணமாகிய தீயுண்டென்று அநுமானித்தல்போல, இவ்வரிய செயல்களை யறிந்தியற்றும் முற்றறிவும் அளவிலாற்றலுமுடைய பொருளொன்றுண்டென்று அநுமானித்தறிகின்றாம். அங்ஙன மநுமிக்கப்படும் காரணப்பொருளே தெய்வம்.

அது எல்லாம் வல்லதாய், சர்வஞானமுடையதாய், நித்ய முத்த புத்த சுத்த சித்துருவாய், எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் வியாப்பியஸ்தானமாயுடையதாய், அன்பர்க்கவாவியவண்ணம் அருளும் பரமகருணாநிதியாய், எல்லாப்பெருமைக்கும் நாமத்துக்குமுரியதாய், எல்லாராலும் வணங்கப்படுபவனும் வணங்கத்தக்கவனுமாகிய ஏகநாயகனாய், அனைவர்க்கும் பொதுவாய், பக்ஷபாதமற்றதாய், பற்பலமதத்தவர் தத்தந்தெய்வமெனக் கொண்டாடப்படுமொன்றாய் உள்ள பெரும்பொருள். அப்பொருள் (தாயுமானவர்) “ஜாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்தன்மை நாமம் ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்

நம் பிரிவற நின்றியக்கஞ்செய்யுஞ் ஜோதி " அதற்குத் (திருவாசகம்) " ஒருநாம மோருருவ மொன்றுமில்லார்க் காயிரந், திருநாமம்பாடி நாந்தெள்ளேணங் கொட்டா மோ " என்றபடி தத்தங்கருத்துக் கேற்றவாறு பலநாமங்க ளிட்டுக் கூறுகின்றனர்.

கூர்மபுராணம். हरस्सर्वस्य हरणाद्विभुत्वाद्विष्णुरुच्यते ।
सर्वज्ञस्सर्वविज्ञानादवनादोमिति स्मृतः ॥

"எல்லாவற்றையும் அழிப்பதால் அரன் என்றும், நிறைந்திருப் பதால் விஷ்ணு என்றும் கூறப்படுகின்றனன். எல்லாவற்றையும் அறிவதால் சருவக்ஞன் (முற்றறிஞன்) என்றும், ஓம்புதலால் ஓம் என்றும் எண்ணப்படுகின்றனன்."

அதனுண்மையை இன்னும் சுலபப்படுத்திக் கூறில் ஒரு மனிதசரீரத்தில் நிகழும் செயல்களைக்கண்டு அச்செ யல்களைச் செய்தற்குக் காரணமாகிய ஜீவன் அச்சரீரத்தி லுளதெனத் தெரிதல்போல உலகில் நிகழும் வியப்பான சிருட்டியாதி தொழில்களைக்கண்டு இவற்றையியற்றுபவன் ஒருவன் உளனென்பது அநுமானிக்கத்தக்கதாகின்றது.

## தெய்வவியல்.

அப்பிரமம் சருவவியாபியாதலின் அதன் வியாப்பியப் பொருள்களைப்பற்றி அதற்கு உருவம், அருவம் (= மூர்த்தம் அமூர்த்தம்)என்றிருவடிவங்கள்கூறப்படுகின்றன. பிரஹதா

4. 3. 1. **द्वे एव ब्रह्मणो रूपे मूर्तं चैवामूर्तं च।** "பிரமத்துக்கு உருவம் அருவம் என்றிரண்டே வடிவங்கள்" அதற்கு இவற்றோடு தன்னியல்பற்றி அதீதமும், தியான உருப்பற்றி அருவுருவமும் சேர்த்து நான்குதன்மைகள் கொள்ளப் படுகின்றன.

## திருட்டாந்தம்.

ஜீவான்மா சரீரத்தில் வியாபியாயுள்ளது. அஃது சிறப்புவகையால் விசாரித்து நிட்டைகூடி யுணர்வார்க்கன்றிப் பொதுவகையாலெண்ணி யித்தன்மையதென்றறியக் கூடாமையால் (சாமானியர்) அதீதமென்றும், சூக்குமசரீரம் பற்றியிருத்தலானும் அறிவுருவாதலானும் அருவமென்றும், ஒளிவடிவென்று நூல்கூறுதலானும், அவ்வடிவம்சமாதியில் ஞானக்கண்ணுக்குத்தோன்றியும் இயல்பிலூனக்கண்ணுக் குத்தோன்றுமலும் உண்மையாலும் ரூபாரூப மென்றும், உயிர் சரீரமுழுதும் நிரம்பி அதையே தானென்றபிமானித் தலானும், பார்ப்போரும் சரீரம்பற்றியே இவன் அறிவினன், தெளிவினன், தெளிவிலன் என்று ஆன்மத்தன்மையைக் கொள்ளலானும், இவ்வறிஞன் அழகன், வெண்மையன், குட்டையன், நெட்டையன் என்று ஆன்மாவை உடல்வடிவத்தாற் குறித்தலானும், நான் பருத்தேன், நானடித்தேன் என்று உடல்வேறு தான்வேறென்று பிரிவின்றி விவகரித்தலானும், உயிர்வசிக்கும் உடலுருவை உயிர் உருவாக்கொண்டு உருவன் என்றும் கொள்ளத்தக்கதாகின்றது.

## தாட்டாந்தம்.

இதைப்போலவே பிரமம் தற்போதமிழந்து அதுவாம் அநுபவநிலையில் அநுபவித்தறியப்படுவதன்றி மனம் வாக்குக் காயங்களுக்கெட்டாத தன்மையதாதலால் (1) **அதீதம்** என்றும், அறிவுரு, ஆநந்தவுரு, நாதவுரு சூக்குமபூதவுருக்களை அவன் உருவாகக்கூறலால் (2) **அருவம்** என்றும், உள் வழிபாட்டில் (தகரோபாசனையில்) தியானத்தின் பொருட்டுக் கொள்ளும் ஒளியுரு, சூரியாந்தர்வர்த்தியாகிய இரண்மயபுருடனுரு, விரூபாக்கவுரு முதலிய பராசத்தியாகிய ஞானத்திருமேனியுடையதாகத் தியானிக்கும் தியானவுரு ஊன்கண்ணுக்குத்தோன்றாததும் அறிவால் சங்கற்பித்தறியுருவும் ஆயிருத்தலால் (3) **ரூபாரூபம்** என்றும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டையும் தன்னுடலாயுடையன் ஈசுரனாதலால் அவற்றில் அருவுருவாகிய வாயு, ஆகாயம் ஆன்மா நீங்கிய வைந்தும் அவனது தூலவுருவமாதலால் (4) **உருவம்** என்றுங் கூறப்படுகின்றது.

## பிரமாணம்.

**அதீதம்** என்பதை

பிரஹதா 3—8—8. **निष्कलं निष्क्रियं शान्तं |**,, பகுப்பிலது, செயலிலது அமைதியது." சுவே-3-4 4. **विश्वाधिको रुद्रः |** உலகுக்கதிகன் உருத்திரன்,"

கடம் 6-12 नैव वाचा न मनसा प्राप्तुं शक्यो न चक्षुषा । अस्तीति ब्रुवतोऽन्यत्र कथं तदुपलभ्यते ॥ "வாக்கினாலும், மனதாலும், கண்ணாலும், அடையக்கூடியதன்று (=அறியக் கூடியதன்று) உள்ளதென்று சொல்லுகிறவனைக் காட்டிலும் வேறானவனால் எப்படி அது அறியப்படும். தேஜோபிந்தூபநிஷத் विश्वातीतं हृदिस्थितं । "எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது இருதயத்திலுள்ளது"

திருவாசகம்:—"சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க"
"சிந்தனைக்கரிய சிவமே போற்றி."

திருநா-தேவாரம்:-"அவனருளே கண்ணாகக் காணினல்லா,
லிப்படிய னின்னிறத்த னிவ்வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக்காட்டொணாதே"

திரு-நா தேவாரம்:-"குறிகளு மடையாளமுங் கோயிலு
நெறிகளு மவர் நின்றதோர் நேர்மையு
மறியவா யிரமாரண மோதிலும்
பொறியிலீர் மனமென்கொல் புகாததே.

திரு-ஞா-தேவா:-"உலகிறந்தொண்பொருளான்"

அருவம் என்பதை.

க-3-15 अशब्दमस्पर्शमरूपं "சப்தமிலது, பரிசமிலது, ரூபமிலது"

சுவேதா:—तदरूपमनामयम् "அது அருபம், நோயற்றது."
திருவா:-அருவம்............ஆனாய்போற்றி.

ரூபாரூபம் என்பதை

கைவல்யோ "उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं। உமைதுணைவன் பரமேசுரன், இறைவன், முக்கண்ணன், நீலகண்டன்.

தைத்திரி 4-6-22 नमो हिरण्यबाहवे । "பொற்றோளனுக்கு வந்தனம்.

திருவா:-" பாகம் பெண்ணுரு வானாய்போற்றி"
"நீளொளியாகிய நிருத்தா போற்றி."

உருவம் என்பதை.

சுவேதா-4-9 तस्यावयवभूतैस्तु व्याप्तं सर्वमिदं जगत् । "அவனது அவயவங்களாலேயே இவ்வுலகமெல்லாம் வியாபிக்கப்பட்டுளது."

சா. 3-14-1. सर्वं खल्विदं ब्रह्म । "இது எல்லாம் பிரமம்."

பிரஹ் 2-5-19 रूपं रूपं प्रतिरूपो बभूव । பலவடிவங்களாகிய எல்லா வடிவங்களுமானான்."

சா. 6-8-7. ऐतदात्म्यमिदं सर्वं तत्सत्यं स आत्मा "இது எல்லாம் (இவ்வுலகனைத்தும்) இவனது வடிவமாயுளது அவன் விகாரமற்றவன் அவன் ஆன்மா"

தைத்திரியோப 4-6-12 विश्वरूपाय वै नमः । "எல்லா வடிவனுக்கு வந்தனம்."

திருவா. "விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க"
"சிறப்பதுஞ் செல்வதுமானேன் காண்க."

திரு-நா-தே. "அனைத்தும் வேடமா மம்பலக்கூத்தனை."

இக்கருத்தனைத்தையும் கைவல்யோ 8.

आचिन्त्यमव्यक्तमनन्तरूपं शिवं प्रशान्तममृतं ब्रह्मयोनिं तदादि मध्यान्तविहीनमेकं विभुं चिदानन्दमरूपमद्भुतं – ध्यात्वा ।

" எண்ணமுடியாததும் விளங்காததும் (அதீதம்) அளவற்ற வடிவமுடையதும் (உருவம்) மிக்க சாந்தமுடையதும் அழிவிலதும் பிரமாவுக்குத் தோற்றமிடமும் அவனும் முதல் நடுவிறுதியற்றதும், ஒன்றாகியதும், எங்கும் நிறைந்தும் அறிவு ஆனந்தவடிவதும் இரண்டற்றதும் அருவமும், (அரூபம்) ஆகிய சிவனை (ரூபாரூபம்) தியானித்து என்று ஒருங்குகூறுதல் காண்க.

திருமந்திரம் முச்சொரூபம்.

" பெருவாய் முதலெண்ணும் பேதமே பேதித்
தருவாயுருவா யருவுருவாகிக்
குருவாய் வருஞ்சத்தி கோனுயிர்ப்பன்மை
யுருவாயுடனிருந் தொன்று யன்றுமே."

திருநா-காளத்தி-தே.

மனத்தகத்தான் றலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தா னிமையவர் தஞ்சிரத்தின் மேலான் (ரூபாரூபம்)
ஏழண்டத் தப்பாலான் (அதீதம்) இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் (ரூபம்)

காற்றினுள்ளான் (அருவம்)
கனத்தகத்தான் (உருவம்) கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியா னவனென் கண்ணுளானே. (ரூபாரூபம்)

தூலோபாசனை சூக்குமோபாசனைக்குச் சாதனம்.

அதீதம் அருவம் ரூபாரூபம் என்ற தன்மைகள் ஜீவான்மாவுக்குக் கற்பிக்கப்படத்தக் கனவாயினும் அவை கருதியறியத்தக்கன; கண்கூடாய்க் காணத்தக்கனவன்று. அதைக்காண்டல், உபசரித்தல் முதலிய செயல்கள் அவ்வான்மாவின் உறைவிடமாகிய சரீரம்பற்றியே செய்யப்படுதல் பிரத்தியக்ஷம், அதுவே அனைவருக்கும் அதிசுலபமுமாம்.

அங்ஙனமே பரமான்மாவிற்கு நான்கு தன்மைகளேற்படலால் அவன் வணக்கமும் கருதியுணரத்தக்க சூக்குமோபாஸனை நேரிற் பார்த்தறியத்தக்க ஸ்தூலோபாஸனை என்றிருபகுப்புட்பட்ட நால்வகைப்படும். அதீதம், அருவம், ரூபாரூபம் என்ற வழிபாடுகள் சூக்குமோபாசனையினும் உருவ வழிபாடுகள் ஸ்தூலோபாசனையினு மடங்கும். மனிதரின் கன்மமும் அதற்கியைந்த அறிவும் பல்வேறு பாடுற்ற நிலையினவாதலால் அதீதோபாஸனை செய்யச்சக்தியற்றவன் அருவோபாசனையையும், அதுவுஞ்செய்யச் சக்தியற்றவன் ரூபாரூபோபாசனையையும், அதுவுஞ்செய்யச்சக்தியற்றவன் தூலோபாஸனையாகிய உருவோபாசனையையும், செய்தல் வேண்டும். அதாவது உருவோபாசனைகள் ஒழுங்கிற்செய்து பயின்று மனம் நிலைக்கப்பெற்றவன் ரூபாரூபோபாசனையும்

அது முற்றியவன் அருவோபாஸனையும், அது முற்றியவன் அதீதோபாஸனையும் புரிதல்வேண்டும்.

இவற்றில் எவ்வுபாசனை முற்றித் தற்போதமிழந்து அதீதப்படினும், அதீதப்படுபவன் பரமேசுர னருளுக்குப் பாத்திரனாகி அதற்குறிய பலனை அடைவன். தூலோபாசனை கண்முன் கண்டபொருளிற் பார்வையை வைத்துவே றிடத்தில் மனஞ்செல்லாது பரமேசுரனிடத்தில் மனத்தைவைத்துச் செய்யும் வழிபாடு. சூக்குமோபாசனை தனித்த ஓரிடத்திலிருந்து இந்திரியங்களை யடக்கிக் கண்மூடி மனத்தை லக்ஷியத்தில்வைத்து யோகிருந்து தியானித்துச் செய்யத்தக்க வழிபாடு. ஆதலால் அது ஸ்தூலோபாசனையிற் பயின்று மனம் நிலைத்தபின் செய்யத்தக்கதாம். இந்தகைச் சூக்குமோபாசனை சருவசங்கபரித்தியாகஞ்செய்து மனோஜயமடைந்த யோகிகளால் செய்யத் தக்கதேயன்றி இடைவிடாதுலகவியவகாரங்களில் முயன்றுதிரியும் லௌகீகர்க ளனைவராலுஞ் செய்யத்தக்கதன்று. உலகிலுள்ளாரொருவரும் சகலலோக நாயகனாகிய கடவுளைத் தியானியாதிருத்தலுங் கூடாது. கடவுளை வழிபடற்குச் சூக்குமோபாசனை சிறந்தது. சூக்குமோபாசனை செய்யுந்திறமை யில்லாதார் தூலோபாசனையாவது அவசியம் செய்தல்வேண்டும்.

வினா. தெய்வத்தை உள்ளத்தில் நினைத்துத் தியானித்தலே சாலும், தூலோபாசனையிற் பயில்வதெற்றுக்கெனில் கூறுதும்.

## வழிபாட்டிற்குப்பயிற்சியவசியம்.

சிறுவர் விரலிறைகளைத் தொட்டுக் கணக்குக்கூட்டப் பயி ன்றபின்னர் எந்த இலக்கத்தையும் மனதிற்கொண்டுகூட்டல் வகுத்தல் முதலிய திறமையடைகின்றனர். அக்கரங்களை யொவ்வொன்றாய் ஒலித்து எழுத்துக்கூட்டப் பயின்றபின் னர் எழுத்தைக் கவனியாமலே அதிசுலபமாய் விரைவிற் படிக்குந் திறமையடைகின்றனர். அங்ஙனமே இடைவி டாது சலிக்கும் மனத்தைத் தூலோபாசனையிற் பரமேசுரனி டத்திற் செலுத்திப் பயின்றவனே மனம் பிறவிடங்களிற் செல்லாது இருத்திச் சூக்குமோபாசனை செய்யச் சத்தி யுடையவனாவன்.

## பொருளும் நினைப்பும்.

ஒருபொருளை அப்பொருளின் பொருண்மை, குணம் செயல்பற்றி நினைக்கவேண்டும். அங்ஙனம் ஒன்றும் பற் றாது ஒரு நினைப்புண்டாகமாட்டாது. அவற்றின் இன்மை கருதி இன்மை நினைப்புண்டா கலாம். அவற்றின் இன் மைகருதற்கும், அவற்றை முன்னொருக்காற் கருதி யறிந்தி ருக்கவேண்டும். தருக்கநூலார் திரவியம், குணம், கருமம் சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம், என மனதில் நினைத்து வாயாற் கூறத்தக்க பதார்த்தம் அதாவது பதப் பொருளாவன ஏழுஎன்று இக்கருத்தானே குறிக்கின்ற னர். உதாரணம், வெள்ளைமாடு வந்தது என்று ஒருவன் கூறினல் அதன் கால், கொம்பு உடல், முதலிய அவயவங்

களை மனதிற் கருதி மாடு என்றும், வெண்மைக் குணத்தை மனதிற்கருதி வெள்ளைமாடு என்றும், காலால் நடத்தல், ஓரிடத்திலிருந்து வேற்றிடஞ்சாரல் முதலிய செயலைக்கருதி வந்தது என்றும் அறிகின்றோம், அல்லது நினைக்கின்றோம், அத்தன்மைகள் பற்றியே அப்பதங்களும் உபயோகிக்கப் படுகின்றன.

இந்தியாயங்களால் ஒரு பற்றுக்கோடின்றி ஒரு நினைவுண்டாகமாட்டாது. எந்த நினைவும் ஒருபொருள் தன்மை அல்லது செயல்பற்றியே நிகழ்கின்றது என்பது தெளிவு. பொருள் குணம் செயல்களை நேரிற்காணாத பொழுதும் அவற்றை அவ்வவற்றிற்குரிய உணர்வுவடிவங்களால் நினைத்தறிகின்றோம். உணர்வுவடிவத்தையும் மெய், வாய், கண், மூக்கு, செவிஎன்ற ஐம்புலன்வழியாய் மனங்கவர்ந்தறியும். அவ்வறிவும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐவகைக் குணங்களைப்பற்றி நேரிலனுபவித்தறிவதும், முன்னநுபவித்தறிந்தவண்ணம் மனதிற்சங்கற்பித்தறிவதும் என்றிருவகைப்படும். இவை முதலியனவே மனநினைவுக்குப் பற்றுக்கோடுகளாம்.

வடிவம் கட்புலப்படும் தூலவடிவம் (தூலவிக்கிரகம்) மனதில் நினைத்தறியும் சங்கற்பவடிவம் (மானதவிக்கிரகம்) என்றிருவகைப்படும்.

ஆகையால் கடவுளையும் ஏதாவதொரு தன்மைபற்றியன்றி நினைக்கமுடியாது. நினைக்குந் தன்மையுடையபொ

ருள் என்று மனத்தையும், அறிதற்றன்மையுடைய தென்று அறிவையும், அசைதல், பரிசம் முதலிய தன்மை பற்றி வாயுவையும், வாயுவினுமதிநுட்பமானது இடந்தருவது எங்கும் வியாபித்துள பொருள் என்பது முதலியதன்மையால் ஆகாயத்தையும், அருவமானசக்தியென்று மின்சாரத்தையும் அறிகின்றோம். அங்ஙனமே கடவுளை எங்கும் வியாபித்துளது, சகல சக்தியுடையது, உலகந்தோன்றல், நிற்றல், அழிதலுக்குக் காரணமானது என்றும், ஞானமயமானது, சாந்தரூபமானது, கருணையுடையது என்றும், எங்கும் நிறைந்தெல்லாஞ் செய்யவல்லது, உருவன்று, அருவன்று, குறியதன்று, நெடியதன்று, எல்லாமறிவது, பொறிபுலனிலது என்றும், மனம், வாக்கு, காயங்களுக்கெட்டாத ஞானவடிவானதென்றும், சத்து. சித்து, ஆநந்தவடிவானது, ஜோதிவடிவானது, நாதவடிவானது என்றும், பரமண்டலத்தில் சிம்மாசனத்திலுளது, நீர் மேலாவிவடிவாயுளது. ஒளிவடிவானது என்றும், அறுசில் (சிம்மாதனத்தில்) ஒளிவடிவாயெழுந்தருளியுளது என்றும், புருடவடிவானது, உலகனைத்தையும் வடிவாயுடையது என்றும், உலகிற்பலமதத்தினர் பலவாறு பலதன்மைபற்றி யறிகின்றனரன்றி ஒரு தன்மையும் பற்றாது ஒரு மதத்தினருமறிகின்றிலர்.

பெரும்பாலும் ஒரு அருவப்பொருளைப் பலர்குறிக்கும் பொழுது அவ்வவர் உணர்விற்கேற்றபடி பலவாறுகூறநேரிடுகின்றது. உதாரணமாக மின்சாரத்தைப்பற்றிவிசாரிப்பாம்.

மின்சாரமென்பது ஒருசக்தி (Force). அது இயல்பி லெல்லாப் பொருள்களிலும், எல்லாவிடங்களிலும் எல்லா ச்சரீரங்களிலும் நிரம்பியுளது. அதின்உண்மை இயல்பை யெளிதிலுணரமுடியாது. ஆனால் இல்லாததுமன்று. அத்தன்மையை அதீதம் என்னலாம். முயற்சியால் வெளிப்படும் கவர்வலி (Positive) கழிவலி (Negative) களை செயலால் அறிகின்றோம். வலிமையுள்ளதாயும், கட்புலப்படாததாயும் உண்மைபற்றி அதை அரூபம் என்னலாம். பிளாற்றினம் முதலியவைகளோடு மின்சாரம் சம்பந்தப்படும் பொழுது ஒளியாய்த்தோன்றுகின்றது. இரும்பு முதலியவற்றிற்சாரும்பொழுது அதன் வடிவந்தோன்றவில்லை அதனாலும், பற்றிய பொருளின் வடிவமின்றித் தனக்கெனவொரு வடிவமுடைத்தாகாமையானும் அதை ரூபாரூபம் என்னலாம். அந்த வலியேறிய ஒரு இரும்புத்துண்டுக்கு காந்தம் (Magnet) என்றுபெயர். அது வடிவமுடையது. ஆதலால் அதை ரூபம் என்னலாம். இவ்வாறு கருதப்படும் மின்சாரசக்தி ஒன்றே, அறிதற்பேதத்தால் நான்குவகையாயறியப்படுகின்றது. செயற்காந்தம் இயற்காந்தங்களைக் காணும் ஒரு சிறுவன் முதலில் வடிவமாகவே காண்கின்றனன் (உருவம்) வலிகளின் சம்பந்தத்தால் உண்டாகும் தீப்பொறிவடிவமாகவும், பிளாற்றினத்திற் சம்பந்தப்படும்பொழுது ஒளிவடிவமாகவும் அறிகின்றனன். அவற்றுக்குக் காரணமான மின்சாரம் கவர்வலி, கழிவலி வடிவமாயுள ரூபமற்றவலி யென்றுமறிகின்றனன் (ரூபாரூபம்) அதன்மேலும்

உயர்ந்த நூல்கள்கற்று நுட்பமாய் விசாரிக்குமிடத்து அதன் இருப்பை எளிதிலுணரக்கூடாதபடி அது எங்கும் நிறைந்துளது, (அதீதம்) முயற்சியாற்றோன்றிற்படும்பொழுது வலிவடிவாய் வெளிப்படுகின்றது (அருவம்) என்றறிகின்றனன். இந்நான்குதன்மைபற்றி யறியப்படுவதும் மின்சாரமென்றே. அதன் அதீதத்தன்மையின் உண்மையையறிதற்கு உருவப்பொருளாகிய செயற்காந்தம் (Magnet) காரணமாயும், மிகச்சுலபவழியாயுமிருக்கின்றது. அதுபோலவே பிரமத்தின் உருவத்தன்மையை யறிந்து உருவவழிபாடியற்றல், அருவத்தன்மையறிந்து அருவவழிபாடியற்றற்குக் காரணமும் சுலபவழியுமாகின்றது.

## உபாசனை.

அதீதம், அருவம், அருபாருபம், உருவம் என்ற நான்கு தன்மைகளும் பிரமமொன்றுக்கேகூறுதலால் அந்நான்குதன்மைகள்பற்றிய உபாசனைகள் நான்கும் சூக்குமம், ஸ்தூலம் என்றிருவகைப்படும். அவ்விரண்டும் மனத்தொடு வழிபடல், மனமிறந்து வழிபடல் என்றிருவகைப்படும். உபாசித்தல், நிட்டைகூடல், வழிபடல், வணங்கல், தொழுதல், தியானித்தல், ஜெபித்தல் முதலியசொற்கள் தெய்வவணக்கத்தைக் குறித்து நிற்கின்றன.

## அதீதோபாசனை.

பரமேசுரன் மனம் வாக்குக் காயங்களுக் கெட்டாத அகண்டபரிபூரண சச்சிதாநந்த வடிவாம் சுட்டிறந்தபொருள். அதன் உண்மைவழிபாடு இயமம், நியமம், ஆசனம்.

பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற அட்டாங்கயோகத்திற் பயின்று சருவசங்க பரித்தியாகஞ்செய்து, பொறி புலன்வழிச்செல்லாது சித்த நிரோதமடைந்து, சாந்தியாதி குணசம்பன்னனுகிய ஞானி தற்போதமிழந்து திரிபுடியற்று, ஆன்ம சுத்தியெய்தி அநுவேதானுய்க் கரைந்து, அநுபவா நந்தத்தழுந்தி யநீதப்பட்டு அதில் நிலைக்கும் உபாசனை. தெய்வத்தைத் தற்போதங் கேட்டு மனமிறந்து அது வாகிவழிபடல் ஒரு ஸ்த்ரீயிடத்தில் அதிமோக முடையவன் அவளை மோகத்தாற் பார்த்துத் தன்னைமறந்து ததாகாரமாகி மனம் நிலைத்துப் பிரீதி செய்தல் போன்றது. சிற்றின்பந் துய்க்கு மார்க்கங்கள் பலவாறு விரித்துக்கூறினும் அநுபவத்தன்றி இன்பநிலை புலப்படாமைபோல இந்நிலையும் அநுபவத்தன்றித் தோன்றுது. இதையே அமனஸ்க யோகம்பற்றிச் செய்யும் நிராலம்பசமாதியென்று கூறுவர்.

ஹடயோகப்ரதீபிகை. 4-15 प्राणो मनो द्वयमिदं विलयं नयेद्यो मोक्षं स गच्छति।

பிராணன் மனம் இரண்டையும் எவன் இலயமாக்குகின்றுனே அவன் மோக்ஷத்தை யடைகின்றுன்.

சசிவர்ணபோதம்.

“ வினைவிற் பரத்தையறிவுறுதற்கவஸ்தை புலன்வினை மாறியே
நனவிற்சுழுத்திநிலை வரினப் பொருட்டிகழு நலமாகவே.”
தேவாரம். “ உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே.”
“ பாவனை யிறந்துநின்று பாவிக்கப்படுவதாகும். ”

தற்போதமிழந்தவன் அந்தக்கரணத்தையு மிழந்து விடுகின்றான். அப்பொழுது அவனெப்படி பிரமத்தைத் பிறந்தாநந்தாநுபவமடைவனெனில், அத்தகைப்பக்குவி பசுகரணங்கெட்டுப பதிகரணமெய்தி (சூரியனை நோக்கற்குச் சூரியகிரணமே காரணமாதல்போல்) அவன் ஞானசக்தியை ஒளியாய்க்கொண்டு ஞான நேத்திரத்தால் அவனை யறிந்தநுபவிப்பனென்க.

சுவேதா 2-15 यदात्मतत्त्वेन हि ब्रह्मतत्त्वं दीपोपमेनेह युक्तः प्रपश्येत् अजं ध्रुवं सर्वतत्त्वैर्विशुद्धं । ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः ।

"எப்பொழுது யோகியானவன் தீபம்போன்ற பிரமசொரூபத்தால் (பிரமத்தின்வடிமாகிய சிற்சக்தியால்) பிரமதத்துவத்தைப் பார்ப்பன் அப்பொழுது அஜனும், நித்தியனும், ஆகியதத்வங்களெல்லாங்கடந்த தேவனை அறிந்து எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுகின்றனன்"

(முண் 3. 1. 8) ज्ञानप्रसादेन विशुद्धसत्वस्ततस्तु तं पश्यते निष्कलं ध्यायमानः "பின்னர் பரிசுத்தமான சத்வகுணமுடையவன் தியானிப்பவனாகி ஞானவொளியால் நிஷ்களமாகிய அவனைப்பார்க்கின்றனன்."

சம்ஹிதியிற் பயின்று மனம் நிலைத்து சாந்தியார்ந்த சத்வகுணசம்பன்னனேயாயினும் நிஷ்களத்தில் மனம்பற்றாத யோகி அரூபோபாசனை செய்தல்வேண்டும்; அரூபோ

பாசனையிற்றேறின பின்னரே அதிதோபாசனை செய்யச்சக் தனுவனுதலின்.

## அருவோபாசனை.

ஸ்தூலோபாசனையில் உருவத்தில் லக்ஷியம்வைத்துத் தியானித்துப் பயின்று, பின்னர் சூக்குமோபாசனையாகிய ரூபாரூபோபாசனையிற் பயின்று மனம் நிலைத்தும் நிஷ்களத்தில் மனம் பற்றுந் திறம்பெறாத யோகிகள் பரமேசுரனது மூர்த்தம்; அமூர்த்தம் என்ற வடிவங்களில் அமூர்த்தவடிவாகிய அருவத்தைப்பற்றித் தியானிப்பது அருவோபாசனை. அஃது வாயு, விண், ஜீவான்மாக்களைச் சரீரம் அல்லது வடிவமாயுடையதாகப் பரமேசுரனைத் தியானிப்பது. பிராணன் மனம், அறிவு, (விஞ்ஞானம்) சர்வவியாபக சத்து, சித்து ஆனந்தம், சிதாகாசம், முதலிய வடிவமாகத் தியானித்தலு மிதிலடங்கும்.

பிரஹதா 5. 7. 7. यस्य वायुश्शरीरं, यो वायुमन्तरो यमयत्येष त आत्मान्तर्याम्यमृतः। எவனுக்கு வாயு உடல், எவன் வாயுவை உள்ளிருந்து ஆள்கின்றனன் அவன் உனக்கு ஆத்மா அந்தர்யாமி அமிருதன்.

பிரஹதா 5. 7. 8. यस्य द्यौश्शरीरं எவனுக்கு விண்சரீரம்.
பிரஹ 5. 7. 12 यस्याकाशश्शरीरं எவனுக்கு வெளி(சிதாகாசம்) சரீரம்.

பிரஹ 5.7. 16. यस्य प्राणश्शरीरं எவனுக்குப்பிராணன்சரீரம்.
பிரஹ 5. 7. 20. यस्य मनश्शरीरं எவனுக்கு மனம் உடல்,
சு-ய-மா य आत्मनि तिष्ठन्—यस्यात्मा शरीर எவன் (ஜீவ) ஆன்மாவிலிருக்கிறன்—எவனுக்கு (ஜீவ) ஆன்மா சரீரம்.

திருநாதே திருமறைக்காடு. "அட்டமூர்த்தியதாகியவப்பரோ"

திருஞா-தே. கழிப்பாலை-.
எளியா யரியாய் நிலநீரொடுதீ
வளிகாயமென வெளிமன்னியதூ
வொளியா யுனையே தொழுதுன்னுபவர்க்
களியாய் கழிப்பாலை யமர்ந்தவனே.

தை. 3. 6. आनन्दो ब्रह्म ஆநந்தம் பிரமம்.
தை. 1. 6. 2. आकाशशरीरं ब्रह्म வெளியுடலது பிரமம்.

அருவோபாசனையில் மனம் பற்றுந திறமையில்லாத யோகிகள் ரூபாரூபோபாசனையிற் பயிலவேண்டும்.

## ரூபாரூபோபாசனை.

இது யோகிகளாற் செய்யத்தககது, யோகம் என்ற பதம் युज् (பொருந்து) என்ற பகுதியினடியாய்ப் பிறந்த "ஒன்றுபடல்" என்ற பொருளுடைய சொல், அது மண், பெண், பொன் என்ற மூவாசைகளால் உலகிற் பலவிவகாரங்களிலுழன்று திரிகின்ற மனதைப்பிறவற்றிற் செல்லாது கடவுளிடத்தில் மாத்திரஞ் செல்லச்செய்யும பயிற்சி, மனம் உலக விவகாரங்களிற் செல்லுதற்கு வாயில் ஞானேந்திரிய

கன்மேந்திரியங்கள், மனம் இந்திரியங்களின் வழிச்செல்லுதல் பிரவிருத்தி, இந்திரியங்களின் வழிச்செல்லாதொழிதலும் சங்கல்பமுதலியதினின்றொழிதலும் நிவிர்த்தி.

சமமாயும் சுத்தமாயும், சிறுகற்கள், மணல், ஜலம், தீ, புகை, புழு, பூச்சி, கொசு, செள் முதலிய சிறுஜெந்துக்கள் இல்லாததும், மனிதர் மிருகங்களின் சஞ்சாரம் சப்தங்களில்லாததும், ஆசை, கோபம், பயம் உண்டாக்கும் உயிர்களில்லாததும் ஆன குகை, கொடிவீடு முதலிய மனதுக்கு ரம்மியமான தனித்த இடத்தில் தனக்குச் சுகமான ஆசனத்திலிருந்து, மனம் விவகாரங்களிற் செல்லுதற்கு முக்கிய கருவியாகிய கண்களைத் திறந்தாவது மூடியாவது இரண்டு புருவமத்தியில் லக்ஷியத்தை வைப்பது (கேசரி) கண்களசையாமல் மூக்கின் நுனியைப்பார்ப்பது (பூசரி) கண்களை மூடி நாசிமத்தியில் திருஷ்டிவைத்து நடுநெற்றியைப்பார்ப்பது (மத்திமை) இரண்டு கைகளாலும் கண்கள் நாசித்துவாரங்கள் செவிகள் வாய் இவைகளைமூடி வெளியில் லக்ஷியம் வைப்பது (சண்முகி) கண்களைத்திறந்து தசப்பிராணன்களையும் பதினான்கு இந்திரியங்களையும் ஜயித்து சிதாகாயத்தில் லக்ஷியம்வைப்பது (சாம்பவி) ஆகிய ஐந்தில் ஒரு முத்திரையிற்றரித்து, மனதை இந்திரியங்களிற் செல்லாது நிறுத்தி, பரமேசுரனைத்தான் கருதும் நாமத்தால் புருடவடிவமாக அல்லது ஜோதிவடிவமாக சகஸ்ரதளபதுமஸ்தானத்திற்கருதித் தியானிக்கவேண்டும். அவன் மனம் நிலைக்கில் பிராண

வாயுவும் ஆங்குச்சென்று பிரமரந்திரத்தையடையும், அடையவே அவன் தசநாதங்கள் கேட்கும், அந்த நாதத்தில்மனம் பொருந்திநிற்கில் உலகவாசனைகள் கெடும். அந்நாதத்தையும் கடந்துசெல்லில் பிந்து கலைகள் தோன்றும்: அவை ஆன்மதரிசனமாம். இவைகள் கதைகளன்று, குருமூலமாயுபதேசம்பெற்று யோகம் அநுஷ்டிப்போர் ஒவ்வொருவரும் தடையின்றி அநுபவத்தி லறியத்தக்க உண்மைகள். அவற்றையுங்கடந்து நின்று பரமேசுரனைத் தியானிக்கில் பிரமதரிசனம் உண்டாம். அத்தரிசனம் ஞானக்கண்ணுக்கன்றி ஊனக்கண்ணுக்குப் புலப்படத்தக்கதன்று. இயானப்பொழுதே தானாகி அதீதப்படில் அவனருளடைவர். உண்மையிலொருவடிவில்லாத பொருளுக்கு உபாசனையில் மனம் பற்றுதற்காகக்கற்பிக்கப்படும் ஹிரண்மயபுருடனுரு ஒளியுரு முதலியன ரூபாரூபமாதலால் அவ்வழிபாடு ரூபாரூபோபாசனை யென்னப்படும். வேதம் பிரமத்துக்குக் கற்பித்துக் கூறும் அமசவுரு (அன்னவடிவம்) சிம்சுமாரவுரு (முதலை வடிவம்) முதலியனவும் இதிலடங்கும்.

இராமதாபிநிஉபநிஷத் चिन्मयस्याद्वितीयस्य निष्कलस्याशरीरिणः उपासकानां कार्यार्थं ब्रह्मणो रूपकल्पना "ஞானவடிவமையும் இரண்டற்றதாயும், நிஷ்களமாயும், சரீரமற்றதாயும் இருக்கின்ற பிரமத்துக்கு உபாசகர்களின் உபாசனையின்பொருட்டு வடிவகற்பனை (செய்யப்படுகின்றது.)"

## கிறித்துவர்.

சமாதியிற் பயிலாத மனம் அகண்டவியாபகத்தைப பற்றி நில்லாது. சமாதிமார்க்கம் கிறித்துவர் பைபிளிற்கூறியுமின்று. கிறித்துவர் கடவுளின் அகண்ட வியாபகத் தன்மையைத் தியானிக்கின்றேமென்று கூறும் விண்வார்த்தையை விடுத்து 5-நிமிஷம் அல்லது ஒரு நிமிஷநேரம்மனதை நிறுத்தித் தியானித்துப்பார்த்தால் அது கட்டுப் படாது திரிதலையும், தெய்வத்தியானஞ் செய்யவெண்ணி பலதியானங்களில் மனம் செல்லுதலையும் தாமே யநுபவித்தறிவர். கண்ணால் ஒருவடிவத்தைக்கண்டு உபாசித்தல் உருவோபாசனை=ஸ்தூலவிக்கிரகோபாசனை. கண்ட வடிவம்போன்ற ஒரு வடிவத்தை மனதில் நினைத்துத் தியானித்தல்மானத விக்கிரகோபாசனை(சங்கற்ப விக்கிரகோபாசனை)இம்மானத விக்கிரகோபாசனைதான் கிறித்துவர் செய்கின்றனர். அதிலும் அவர்மனம் நிலைத்திருப்பதில்லை. (அதற்குரிய சாதனமின்மையால்) நிலைக்கச்செய்யு முயற்சியும் அவரறிந்திலர். அவர் நூலுங்கூறிற்றிலை. அவர் சங்கற்பவிக்கிரகோபாசகர் என்பதெதுபற்றியெனிற் கூறுதும்.

ஆதியாகமம் அதி 1 வாக் 26. "பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும், மனுஷனை உண்டாக்குவோமாக" வாக் 27 "தேவன் தம்முடைய வடிவமாக (In his own image)மனுஷனைச் சிருஷ்டித்தார்." *

---

* ஆதி. 18 1. கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே அவனுக்கு (ஆபிரகாமுக்கு)த்தரிசனமானார்.

பிலி. 3. 21. நம்முடைய (மனிதருடைய) அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

என்றவசனங்களாலும் பைபிளில் பலவிடங்களிலுள்ள "தேவன பார்த்தார்" "உலாவினுர்" "சொன்னுர்" "விரல்களாலெழுதினுர்". "பரமண்டலத்திலிருக்கின்றார்." சிம்மாதனத்தில் தேவதூதர் வணங்க வீற்றிருக்கின்றார் என்பது முதலிய கருத்தை விளக்கும் வசனங்களாலும் கிறித்துவர் தேவன் மனிதனைப்போல அவயவவடிவமும் சாயலுமுடையரென்று புலப்படுகின்றது. அவ்வசனங்களைப் பிரமாணமாகக் கொண்டு தெய்வத்தை அறியும் கிறித்துவர் அவரை நினைக்கும்பொழுது அத்தகைமானதவிக்கிரகியாக நினைப்பரன்றி வேறெவ்விதம் நினைப்பர.

ஒருவன் பிறந்தறிவடைந்த காலமுதல் சாம்வரை எவ்வளவு நன்னடையுடையனுகித் தெய்வமொன்றுளதென நம்பிப் பக்திசெய்யினும் அவன் ஏசுகிறிஸ்து என்ற நாமத்தால் அவரை நம்பாவிடில் ரக்ஷிப்படையான் என்ற ஞாயமில் விவகாரங்கூறும் கிறித்துவர், "கிறித்துநாதர் மனிதாவதாரஞ்செய்து சிலுவையிலறையுண்டிறந் துயிர்த்தனர். அவர் இரக்ஷகர். ஆதலாலவரை யவசியந் தொழவேண்டு" மென்று கூறி அவரைத் தியானிக்கின்றனர். அவரை நினைக்கும்பொழுது அவரவதரித்த மனிதவடிவமானதவிக்கிரகத்தைப் பற்றித்தான் தியானிக்க நேரிடுகின்றது. ஆதலால் எவ்வாற்றுனும் அவர் செய்யும் வணக்கம் பானதவிக்கிரக வணக்கமேயாகின்றது. *

---

* The followi g is Luther's own confession—:

"If then it is not a sin to have the image of Jesus

Christ in our heart, *it* is even right and salutary for us to have this image before our eyes"

"Luther's works, Vol. III, p 113, Jena, 1560. cited on page 159 op, cit.

அடியிற் கூறப்படுவது லூதர் என்பவரின் (புரோடஸ்டான்டு கிறிஸ்துமதஸ்தாபகர்) சொந்த உடன்பாடு.

"நமது இருதயத்தில் ஏசுகிறிஸ்துவின் வடிவத்தை வைத்திருப்பது பாவமன்றாயின், இந்த வடிவத்தை நமது கண்களுக்குமுன்னர் வைத்திருப்பது நமக்கு வியாயமும் சுகமுமாம்.

Universal Religion Formulated p. 24. ff.

"Who sees God in Christ's flesh and bone,

Can see God in our Templed Stone,

Who can't see God in wood and stone.

He can't see God in flesh and bone.

Who, in God-wor hip, God Names' helpfulness uphold;

To think on the Form, that Name suggests, they must make bold.

For Name and Form together stand.

*This* lost, *that* none can understand.

Whoe'er can pray, saying:—' Hallowed be Thy *Name*

Can also pray, saying:—"Hallowed be Thy *Form*

"கடவுளைக் கிறிஸ்துவின் மாமிசத்திலும் எலும்பிலும் (சரீரத்தில்) பார்க்கிறவன் நமது கோவிலிலுள்ள கல்லிலும் கடவுளைப்பார்ப்பான். மரத்திலும் கல்லிலும் கடவுளைப்பார்க்க வன்மையற்றவன், மாம்சத்திலும் எலும்பிலுங் கடவுளைப் பார்க்கமுடியாது, யாவர்

## † முகம்மதியர்.

குரானில் கடவுள் ஏழாவது வானத்தில் அறாசு என்னும் சிம்மாதனத்தில் எழுந்தருளியிருப்பதாகவும், அவரோடு பலர் சம்பாஷித்ததாகவும், கூறுகின்றது. முகம்மதுநபி பலதிரைகளைக்கடந்து அறாசையடைந்து அல்லாஹுத்தாலாவைக்கண்டு வணங்கியதாகவும், அவர் நபியவர்களோடு பேசியதாகவும், அவர் ஒளிமயமான வடிவாயிருக்கிறாரென்

---

கடவுள் வணக்கத்தில் கடவுள் பெயர்களின் உதவி அவசியமென்று கொள்கின்றார்களோ, அவர் அப்பெயர்கள் மனதிலுதிக்கச் செய்கிற உருவத்தை நினைக்கவேண்டும்:-ஏனெனில் பெயரும் உருவமுஞ் சேர்ந்திருக்கின்றன. இதை(உருவத்தை)இழந்துவிடில், அதை(பெயரை)ஒருவனும் அறியமுடியாது. (ஒரு பொருளையன்றி யொரு பெயருமுண்டாக மாட்டாது )

"உமது நாமம் பரிசுத்தமாவதாக" என்று பாடிக்கொண்டு யார் கடவுளைச் செபிக்கின்றார்களோ? (அவர்) "உமதுவடிவம் பரிசுத்தமாவதாக" என்று சொல்லிக்கொண்டும் ஜெபம் செய்யலாம்.

† THE KORAN. (TRANSLATED BY GEORGE SALE.)

Ch. 11. 8. "It is he who hath created the heavens and the earth in six days (but his throne was above the waters before the creation thereof),,

Ch. 69. 17. "And eight shall bear the throne of thy Lord above them on that day."

Ch. 2. 260. "When Abraham said, My Lord is he who giveth life, and killeth: he answered, I give life and I kill."

றும் மிருகுருசுபாலே முதலிய முகம்மதிய நூல்கள் கூறுகின்றன. இவைகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு அல்லா ஹுத்தாலாவைத் தியானிக்கும் முகம்மதியர் மனதில் ஒளிமயமான ஒருவடிவம் பற்றித்தான் நினைக்க வேற்படுகின்றது.

அதுவும் மானத விக்கிரகோபாசனையே யாகின்றது. ஆனால் அவர்மனம் அவ்வடிவத்தில் நிலைத்துத்தியானித்தற்குதவியாக இந்து சாஸ்திரங்களிற் பயின்று யோக சாஸ்திரங்களை விருத்திசெய்திருக்கின்றனர்.

முகம்மதுநபியை தியானிக்கும்பொழுது அவர் மனித வடிவத்தை நினைத்துத்தான் தியானிக்கின்றனர். அதுவும் மானதவிக்கிரகோபாசனையே.

## வைதீகர் விக்கிரகோபாசகரல்லர்.

வைதீகமதத்தவர் உண்மையில் பரமேசுரனுக்கொரு

---

## கொரான்.

அதி. 11. 8. ஆறுநாட்களில் வானங்களையும் பூமியையும் படைத்தது அவர் (ஆனால் அவர் சிம்மாதனம் சிருஷ்டிக்குமுன்னர் நீர்மேலிருந்தது.)

அதி. 69. 17. "அந்நாளில் (ஆகர்ஜமாவென்னும் நியாயத்தீர்ப்புநாளில்) உனது கடவுளின் சிம்மாதனத்தை எட்டுப்பெயர் (தேவதூதர்) அவற்றின்மேல் தாங்கிக்கொண்டிருப்பர்."

அதி. 2. 260. " எனது ஆண்டவனே! உயிரைக்கொடுப்பவரும், கொள்பவரும் நீர்தானென்று ஆபிரகாம் கேட்டபொழுது, அவர் (ஆண்டவன்) நான்தான் உயிரைக்கொடுக்கிறேன் கொல்கிறேன் என்று மறுமொழி சொன்னர்."

வடிவமுண்டெனக் கொள்பவரன்று. உண்மை வழிபாடாகிய அதீதோபாசனை செய்யச் சக்தியற்றவர் அதைச் செய்யச் சக்தியுடையராகப் பயிலுதற்பொருட்டு அவர் மனம்பற்றிய வடிவத்தைச் சங்கற்பித்துத் தியானிக்க விதிக்கப்பட்டுளது. அதிற்றேறி மனம் நிலைக்கப்பெற்றவர் அத்தகைவழிபாட்டை விடுத்து அதீதோபாசனை செய்தல் கடமை. வாகனத்திலூர்ந்து பிரயாணஞ்செய்யும் பிரபுவை வாகனத்திலேறுதற்கு வீட்டினுண்ணின்று வெளிப்போந்து வாகனமிருக்குமிடம் வரை நடந்து வருவதைக்கொண்டு கால்நடையாற் பிரயாணஞ்செய்பவன் என்று கூறமுடியாது; வாகனத்திற் செல்பவனென்றே கூறல்வேண்டும். அங்ஙனமே வழக்கம். அதுபோல உண்மை வழிபாடாகிய அதீதோபாசனை அடைதற்குச் சாதன நடையாக ரூபாரூபோபாசனை ரூபோபாசனைகளைப்பற்றி அஃதடைந்தவுடன் விடுத்து அதீதோபாசனையை முக்கியமாய்க் கொண்டுள்ள வைதிகமதத்தவரை விக்கிரகோபாசகர் என்று கூறல் பொருந்தாது.$

---

$ Select Writings, of the most Rev. Dr. Leo Meurin, S, J, Bombay Examiner Press. i. e. must look through nature up to Nature's God. Erasmus emphatically adds: " are not the flowers, the rivers, the sun, the stars, the night and the day, real images, which must therefore be destroyed to idealize worship? " P. 62. Id.

கிறிஸ்துவருக்கு அத்தகை மேலான வழிபாடொன்று மின்மையால் மானதவிக்கிரகோபாசனையைத் தான் தமக்குச் சிறந்த மார்க்கமாய்க் கொண்டுள்ளார். ஆதலால் உண்மையில் கிறிஸ்துவர்தாம் விக்கிரகோபாசகர் என்னத் தக்கவராகின்றனர்.

இத்தகை மானதவிக்கிரகோபாசனையும் ரூபாரூபோபாசனை யென்னப்படும். ஹிந்துவைதிக மதத்தினர் சர்வவியாபகமுடைய அகண்டாகார சச்சிதானந்தவடிவாகிய பிரமம் பக்தர்களுக்கு அநுக்கிரகிக்கும்பொருட்டுத் தரிசனந் தந்த அப்பிராகிருத ஞானசாதிமயவடிவத்தை வேதோபநிஷத்துக்கள் கூறுவதால் அவனரு அவ்வடிவத்தைத் தியானித்தல் ரூபாரூபோபாசனை யென்பர். இஃதும ‘ ऋषीणां हृदि दैवत” இருடிகளுக்கு இருதயத்தில் தெய்வம் ” என்று மிருதி கூறுகின்ற தகரோபாசனையிலடங்கும். அதீதம், அருவம், ரூபாரூபம் என்ற மூன்றுபாசனைகளும் டாகியத்திலின்றி உள்ள ஆலயத்திற் செய்யத்தக்கன வாதலால் தகரோபாசனையென்ற பொதுப்பெயராற் கூறப்படும்.

---

மஹாகனம்பொருந்திய டாக்டர், வியோமியூரின் ஏஸ்-ஜே. அவர்களின் தேர்ந்தெடுத்த எழுத்துகள் “ இயற்கைப்பொருளின் கடவுளை இயற்கைப் பொருளின் வழியாய்ப் பார்க்கவேண்டும். எராஸ்மஸ் என்பவர் வற்புறுத்திக் கூறுவதாவது, பூக்கள், ஆறுகள் சூரியன், நக்ஷத்திரங்கள், இரவு, பகல் ஆகிய இவைகள் (கடவுளின்) உண்மை வடிவங்களல்லவா? ஆகையால் மேலாம் உபாசனைக்கு அவைகள் நீக்கப்படவேண்டும். (அவ்வடிவங்களை விடுத்து அவற்றின் மூலமாய் அவற்றின் கடவுள் பற்றப்படவேண்டும்.)

ரூபாரூபோபாசனையிற் பிரம்மசொரூபத்தியானம் அடியிற்கண்டவாறு கூறப்படுகின்றது.

தைத் 4. 12. 6. ऋतं सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिंगळं ।
ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमः ॥

"வாய்மை, உண்மை, பரப்பிரமம், புருடன், கருமை பொன்மை கலந்தவன் (அர்த்தநாரீசுரன்) ஊர்த்தவரேதன், முக்கண்ணன் ஆகிய எல்லாவடிவன்பொருட்டு வணக்கம்." (இதன் உண்மைப்பொருளைச் சொரூபத்தியானம் என்ற பகுதியிற் காண்க)

தேவாரம் "உள்ளத்துளொளியுமாகு மொற்றியூருடையகோவே"

திருநா. தே. திருவதிகை வீ 'புந்தியாய்ப் புண்டரிகத்துள்ளாய்போற்றி"

ஒருமனிதன் கண்ணாற்கண்ட வடிவத்தைத்தான் மனதால் நினைக்கமுடியும். அதுபோலத் தூலோபாசனையிற் பயின்று நிலைத்தமனந்தான் சூக்குமோபாசனையாகிய ரூபாரூபோபாசனையிற் பற்றுமன்றி ஒரு உபாசனையிலும் பயிலாது விஷயாரூடப்பட்ட மனம் ஒருக்காலும் பற்றவே மாட்டாது ஆதலால் உபாசனையிற் பயிலத்துவக்குவோர் தூலோபாசனையிற் பயிலவேண்டும்.

## தூலோபாசனை.

மனம் ஒன்றே ஞானேந்திரியங்களின் வழியாய் அறிகின்றது, கன்மேந்திரியங்களின் வழியாய்த் தொழில் புரி

கின்றது, மனம் ஒரு இந்திரியவாயிலாய் ஒரு விஷயத்தில் திடமாய்ப்பற்றி நிற்கில் மற்ற இந்திரியங்களில் அது செல்லாமையால் அவ்விந்திரியங்களின் வியாபாரங்களும் நின்றுவிடும். எந்த இந்திரியத்தில் மனம் மிகுந்துச்சென்று பழகுகின்றதோ அந்த இந்திரியம் பலப்படுகின்றது. மிகுத்துப்பழகிய அந்த விஷயத்தில் பயிற்சியும், திறமையும், கவர்ச்சியுமுண்டாகின்றது. ஏனைய விஷயங்களிற் பழக்கங் குறைகின்றது. அதனால் பயின்ற விஷயத்தில் மனம்பற்றி நிற்பதோடு திறமையுமடைகின்றதென்பது எல்லாருமொப்பியவுண்மை.

ஒருபெண்ணினிடத்தில் மோகமடைந்தவன்கண் அவளுருவத்தைப் பற்றுகின்றது. அக்கண் வழியாய் மனமும் அவளைப்பற்றி நிற்கின்றது. மனம்பற்றி நிற்கும்பொழுது வேறொருவன் பேசினும் சரீரத்தி லெறும்புமுதலிய சிறுஜெந்துக்களூறினும், கடித்தாலும், அவன்முன் மற்றொருவன் சென்றாலும் அவன் அறிகின்றிலன். அதாவது வேறுவிடயங்களில் மனஞ்செல்லாது நின்றுவிடுகின்றது. அரியகணக்குகளை மனதிற்றீர்பவன் அல்லது ஒரு விஷயத்திலாழ்ந்த யோசனை செய்பவன் மனம் புறத்திற் செல்லாது அவற்றில் நிலைத்துநிற்கின்றது. “சாதனமின்றி யொன்றைச் சாதிப்பாருலகிலில்லை.”

ஆதலால் பலவிஷயங்களிலுழன்று திரியுமனத்தை யோரிடத்தினிறுத்திப் பழகுவதற்குத் தூலோபாசனை அத்

தியாவசியமானது. சூக்குமோபாசனையாகிய யோகத்தில் மனம் பலவாறு விரிந்து திரியாமல் கண்ணைக் கேசரிமுதலிய முத்திரைகளொன்றில் நிறுத்தி, மனத்தைப் பரமேசுரனிடத்தில் அதாவது அவன் தியானத்தில் வைத்துப், பழகுதல்போலக் கண் முற்படும்பொருளில் முத்திரையாகிய லக்ஷியம்வைத்து மனத்தைப் பரமேசுரத் தியானத்தில்வைத்துப் பயில்வது தூலோபாசனை. கண்முற்படும் பொருளனைத்தும் பரமேசுரனது தூலசரீரமாதலால் அதில் லக்ஷியம்வைத்துத் தியானித்தல் தூலோபாசனை யெனப்படுகின்றது.

தூலோபாசனையும் உபாசகர்களின் சித்தபரிபாகத்துக்குத் தக்கபடி பலவிதமாயுள்ளது. பரமேசுரன் (பிரமம்) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டுவடிவங்களுடையன், ஆதலால் அட்டமூர்த்தியெனப்படுகின்றனன். அப்பரமான்மா சராசராத்மகமான சகலப் பிரபஞ்சங்களையும் வியாபித்துத் தனதுடலாயுடைய மகாப்பிராணன். ஆதலால் அவனது தூலோபாசனை (1) எல்லாமவனுய்க் கண்டுபாசித்தல் (விசுவரூபோபாசனை)(2) தனித்தனி ஒரு மூர்த்தத்தில் அல்லது இயற்பொருளில்உபாசித்தல் (மூர்த்தோபாசனை) (3)செயற்பொருளில் உபாசித்தல் (விக்கிரகோபாசனை) என மூவகைப்படும். விக்கிரகோபாசனையும் அநங்கலிங்கம், அங்கலிங்கம், ஸ்தூலலிங்கம், பத்திரலிங்கம் முதலியவற்றில் வழிபடுமுறையாற் பலவகைப்படும்.

பிரஹ: 4-4-23 सर्वमात्मानं पश्यति எல்லாவற்றையும் பரமான்மாவாக? (பிரமமாக)ப் பார்க்கிறான்.

## விசுவரூபோபாசனை.

பொருள் (Matter) வலி (Force.) இரண்டின் நிறைவே உலகம். வலி ஒருபொருளைப்பற்றியன்றித் தனித்திருக்காது. குணம் குணியைப்பற்றி யன்றி இராமைபோல: ஆதலால் மின்சாரவலியும் ஒருபொருளைப்பற்றி யிருக்குமே யன்றித் தனித்திருக்காது. மின்சாரமாகிய காந்தசத்து (Magnet) வியாபித்திருக்கும் உருவுடைப் பொருளாகிய இரும்புத்துண்டைக் காந்தம் என்றே அறிகின்றோம். அது இரும்புத்துண்டேயாயினும் அதை இரும்புத்துண்டென்று காந்தசத்தின் வியாப்பியப் பொருளாதலால் காந்தமென்றே கூறும் வழக்கமுண்டாயிற்று. அதுபோலப் பிரமம் சர்வவியாபகப்பொருள், உலகனைத்தும் வியாப்பியப்பொருள், ஆதலால் பிரமவியாப்பியப்பொருளாகிய பிரபஞ்சம் பிரமமெனப் படுகின்றது. பிரபஞ்சத்தைக் காணும்பொழுது அது பிரமவியாப்பியப் பொருளாதலால் பிரமமென்றறிகின்றோம். ஆதலால் உலகவடிவாதல் பற்றி உருவம் என்றும் ஏனைய தன்மைகள்பற்றி அதீதம், அருவம், ரூபாரூபம் என்றும் தெய்வத்தை யறிகின்றோம். அந்நான்கும் அவ்வொன்றின் தன்மைகளேயாவதால் அவ்வொன்றே குறிக்கப்படுகின்றது. வியாப்தியால் உலகனைத்தையும் உடலாகக்கொண்ட பிரமத்தை உலகிற்

பொருளெல்லாவற்றையும் அவன் வடிவாகக் கண்டுவணங்கு தல் மற்றமூன்று தன்மைகளை யறிதற்குக்காரணமாயும் எல் லார்க்குஞ் சுலபமாயும், உண்மையிற் பிரமோபாசனையாயும் உலகத்துள்ள ஒவ்வொரு சராசரப்பொருள்களைக் காணுந் தோறும் உபாசனையை ஞாபகப்படுத்தி இடைவிடாது பிர மத்தியானத்திற் பழகச்செய்யும் சாதனமாயு முளது. இவ் வண்ணம் எங்கும் பிரமமுளதாயறியில் பிறரறியாது ஒரு தீங்கை பாவத்தை அல்லது அநுசிதமான செயலைச்செய்ய நினைக்கவாவது செய்பவாவது துணியான். அதீதம் அருவம் ருபாரூபம் என்ற வழிபாடுகள் மற்ற எல்லாவிருத்திகளையும் ஒழித்து ஒருகாலத்தில் ஒருசனி இடந்தேடிப் பயிலத்தக் கன. உருவோபாசனை உலகிற் பொருள்களனைத்தையும் காணுந்தோறும் எக்காலத்திலும்,எவ்விடத்திலும்,எத்தொ ழில்புரியும்பொழுதும் அவையனைத்தையும் பிரமமாகக்கண் டு செய்யத்தக்கது. இவ்வுபாசகன் எல்லாவற்றிலும் பிரம பாவனைபுரிவதால் பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்தி ரன் பஞ்சமன் சுவேதன் சீனன் துலுக்கன் கிறித்துவன் மிருகம் பக்ஷி நாய் கழுதை புழு மலம் கல் மரம் செடி பிரபு எழியன் நோயாளன் அன்பன்பகைஞன் ஞொதுமல் மேலோட் டி தாழ்ந்தவன் என்று மேன்மை தாழ்மை கருதாது எல்லா விடத்தும் சமதிருஷ்டிவைத்துப் பரமேசுவரவடிவமாக உ பாசிப்பன். அங்ஙனஞ்செய்யில் இவ்வுபாசகனுக்கு அவற்றில்

வைக்கும் விஷமதிருட்டியாலுண்டாம் பகை நட்புகளும், காமக்குரோதங்களும் இன்பதுன்பங்களும், மகிழ்ச்சி விசனங்களும் ஆகிய இன்னன பலவற்றிலொன்று முண்டாகாது. ஆதலால் இவர்விருப்பு வெறுப்புகளற்று எல்லாம் பிரமமாக உன்னி இடைவிடாததியானத்தி லழுந்திப் பரிபூரணாநந்த பரவசராவார். இவர் தூலோபாசனையி லறிதப்படும் ஞானிகள்.

ஒருவனை வணங்கும்பொழுது அவன் உடலிற் பார்வையைவைத்து உள்ளத்தை அர்ச்சரீரியிடத்தில்வைத்து வணங்குதல்போலச் சராசரப் பொருள்களனைத்தையும் தன்னுடலாயுடைய விசுவரூபனாகிய பரமேசுரனை அவன் சரீரத்தில் நம் கண் முற்படும்பகுதியில் பார்வையைவைத்து அதை அவன் வடிவமாகக்கண்டு வணங்குதல் அவன் வணக்கமேயாம். அவன் சரீரத்தில் அவனை வணங்குதல் சாக்ஷாத் உபாசனையாமன்றி அவனுக்காக வேறு விக்கிரகத்தை வணங்கும் வணக்கமாகாது.

எல்லாமவன் வடிவாதலுண்மையாயினும் வியஷ்டியாகிய ஒருபகுதியைக்கண்டு சமஷ்டியாகிய சருவப் பிரபஞ்சவடிவனைக் குறித்தல் எங்ஙனம் பொருந்துமென்னில்.

இமயமலையை ஒருவன் மற்றொருவருனுக்குக் காட்டவெண்ணி இது இமயமலையென்றுகூறி அவன் கண்முன் எதிர்ப்படும் இமயமலையில் ஒருபகுதியைக் காட்டுகின்றான். அப்பொழுது கேட்போன் அவன் காட்டும் ஒருபகுதியை இமயமலையென்று காண்கின்றான். உண்மையில் இமயமலை 1000

மயில்நீளமும் 150மயில்அகலமும்5½மயில்உயரமுமுள்ளது.

அவ்வுருவம் முழுவதையுமொருவன் ஒரு பார்வையிற் பார்க்கமுடியுமா? முடியாது. ஒருகணத்தில் ஒருபகுதியைத்தான் காணமுடியும். ஆயினும் அவன்கண்ட அப்பகுதி இமயமலையின் ஒருபாகமாயிருத்தலால் அப்பாகத்தை இமயமலையென்றறிகின்றான். இந்துமகாசமுத்திரம், மதராஸ், ஐக்கோர்ட்டு, திமிங்கிலம், யானைமுதலியவற்றின் ஒரு பகுதியைக்கண்டு அவற்றின் முழுமையையும் அவ்வப்பெயரால் தெரிகின்றோம். அதுபோல உலகிலெல்லாப்பொருள்களும் விராட்பிரமத்தின் சரீரமேயாம். ஆதலால் உலகில் எப்பகுதியைக் காணினும் பிரமமென்றறிவதும் வணங்குவதும் ஞாயமே

இமயமலையைப்பார்ப்போன் அதைப்பார்க்கும்பொழுது மலையின் பகுதியாகிய கல் மண்முதலியனவும், அவற்றிலுள்ள மரம் செடி புல் பூண்டு மிருகம் பாம்பு புளு பக்ஷிமுதலியனவும், கண்ணிற்படினும் அவற்றைத் தனித்தனி அது அதுவாக வறியாது அவையனைத்தையும் அவற்றைத் தன்னிடத்துடைய இமயமலையாகத்தான் காண்கின்றனன். அவ்வப்பொருளாகக் காண்கின்றிலன். அங்ஙனமே உலகில் எவ்வெப்பொருளைக் காண்கினும் அவ்வப்பொருளாகக் காணாது அவையனைத்தையும் அவற்றைத் தன்னிடத்துடைய அதாவது தன்வடிவாயுடைய பரமேசுரன் வடிவாகக்கண்டுபாசிப்பதே சால்பு. அதுவே விசுவரூபோபாசனை.

अस्यावयवभूतैस्तु व्याप्तं सर्वमिदं जगत् சுவே 4-10, " அவன்து அவையவங்களாலே இவ்வுலகனைத்தும் வியாபிக்கப் பட்டுளது.

सर्वात्मानं सर्वगतं विभुत्वात् (சுவே. 3-21) வியாபகத்தன்மையால் எல்லாவடிவனும் எங்கும் உள்ளவனும்(அறிகின்றேன்).

ऐतदात्म्यमिदं सर्वं—स आत्मा (சாந். 6-8-7) இவ்வுலகனைத்தும் அவன் சரீரம்—அவன் ஆன்மா (சரீரி).

सर्वं खल्विदं ब्रह्म तज्जलानिति शान्त उपासीत (சா. 6.14.1) அதில் (பிரமத்தில்) தோற்றம் ஒடுக்கம் ஜீவித்தல் உண்டாதலால் இவ்வுலகனைத்தையும் பிரமம் என்று சாந்தனுகி உபாசிப்பாயாக.

விசுவரூபம்.

பரமேசுரன் சகல பிரபஞ்சங்களையும் சரீரமாயுடைய சரீரியாதலால் அவன் விசுவரூபன், விராட்புருடன், புருடன், சதாசிவன் என்னப்படுகின்றனன். அவனுக்குருவம் கூறில் பாதாளலோகங்கள் பாதங்கள், மத்யலோகங்கள், உடல், திக்குகள் கைகள், விண்ணுலகங்கள் சிரசு, சூரியன் சந்திரன் அக்கினி நேத்திரங்கள், ஆகாயஞ்செவி, நக்ஷத்திரங்கண் முடியணிகள், சமஷ்டி வாயு சுவாசம், சமஷ்டி உள்ளம் அவன் மனம், இவ்வாறு சப்தவியாகிருதிகளாகிய, பூலோக, புவர்லோக, சுவர்லோக, மஹர்லோக, ஜனலோக

தபோலோக, சத்யலோகமுதலிய சகலத்தையு முடலாயு டைய விசுவரூபனை கண்முற்படும் பொருளாற் கிரகித்து வணங்கலை விசுவரூபோபாசனையெனினும் பொருந்தும்.

இதனையே மற்றொருவாறு சாந்தியதீதகலை திருமுடி சாந்திகலைமுகம், வித்யாகலைமார்பு, பிரதிஷ்டாகலை குய்யம் நிவிர்த்திகலை முழந்தாளும் பாதங்களும், புவனங்கள் (புவனத்துவா) ரோமம், வர்ணங்கள் தோல், மந்திரங்கள் உதிரம், பதங்கள் நரம்பு, தத்துவங்கள் என்புந்தசையும், என்று சதாசிவமூர்த்திக்கு வடிவமாகப்பாவித்து வணங்கலும் விசுவரூபோபாசனையாம்.

சதாசிவமூர்த்தியினுண்மை வடிவமிவ்வாறாதலால் ஆலயத்தில் சதாசிவமூர்த்தியைத் தரிசிக்குங்கால் அவ்வடிவத்தில் இப்பாவனை செய்து வணங்கலே சிறப்பு. கண்முற்படும்பொருளில் விராட்டுவடிவமாகிய சதாசிவமூர்த்தியைத் தியானித்தலும் விசுவரூபோபாசனையேயாம்.

சதாசிவரூபம்.

அவயவங்கலைகளாகு மாய்புவனமுரோமஞ்
சுவையுறு துவக்குவன்னஞ் சோரிமந்திரமதாகும்
தவமுறுபதநரம்பு தத்துவந்தாதுவாகும்
சிவமுயர்சதாசிவற்குச் சிறந்தவாறுறுப்புத்தானே.

இத்தகைச் சமஷ்டி தூலோபாசனை நான் பெரியவன் பிராமணன் சுத்தன் இழியன் எழியன் ஊழியன் தோட்டி, அவள் தாசி வேசி கள்ளி அழகிலள் ரோகி, அது நாய் மலம்

கபம் மூத்திரம் புழு என்றவிஷமதிருட்டியும் அவற்றில் விருப்பு வெறுப்புக்களும் உடையார் செய்யத்தக்கதன்று. அன்னவர் அந்த வகுப்பில் மாணுக்கராதற்கு யோக்கியரு மன்று. சமதிருஷ்டி வந்தயோகிகளே அவ்வுபாசனையிற் சக்தராவர். இதோ இச்சபையிலிருக்கும் B. A. B. L. M. A. பரீக்ஷையிற்றேறினவர், செல்வர், புத்திசாலிகள், தெய்வ பக்தர், சாஸ்திரக்ஞர், தீக்ஷிதர் என்ற தன்மையடைந்த யாராவது சமதிருஷ்டியாற் செய்யத்தக்க விசுவரூபோபா சனையை எல்லவருஞ்செய்யச் சக்தியுடையவரென்று முன் வர முடியுமா? முடியாது. அதனுல் சமதிருஷ்டியில்லாத மற்றவர்கள் ஈசுரோபாசனை செய்யாதிருக்கலாமா? கூடா து. ஆதலால் விஷமதிருஷ்டியுடையவர் அதாவது உலகிற் பொருள்களை அவ்வப்பொருளாய்ப்பகை உறவு மேன்மை தாழ்மையினவாக அறிபவர் பரமேசுரனது எட்டு மூர்த்த ங்களில் பெரிதும் சிறந்ததும் மனம் பற்றுவதுமான ஏதா வதொரு மூர்த்தத்தில் அம்மூர்த்தத்தை அல்லது இயற் பொருளைச் சரீரமாயுடைய ஞகவவனை வணங்கல்வேண்டும்.

विश्वं भूतं भुवनं चित्रं बहुधा जातं जायमानं च यत् सर्वो ह्येष रुद्रस्तस्मै रुद्राय नमोऽस्तु ॥ தைத். 4. 15.

ஜடசேதனவடிவமான உலகமும், அதில் வேறுபாடு ற்ற பலவகையாய் உண்டானதும் உண்டாகிறதும் ஆகிய எல்லாப்பிரபஞ்சமும் இந்த உருத்திரனே.(சகலவடிவனுன) அவ்வுருத்திரன் பொருட்டு நமஸ்காரம்.

பிரஹ 5. 7-15 यस्य सर्वाणि भूतानि शरीरं ॥ எவனு க்கு எல்லாப்பூதங்களும் சரீரம்"

தை. 4-6-12. " विश्वरूपाय वै नमः ॥ எல்லாவடிவனு க்கு வந்தனம்"

திருநா. தே. ஒன்றாயுலகனைத்து மானார்தாமே"

தாயுமானவர். "அண்டரண்டம் யாவுநீ கொண்டுநின்ற கோலமே."

தாயு. "கண்டனவெலா மோனவுருவெளியதாகவுங் கருதியஞ்சலி செய்குவாம்"

## லிங்கம்.

இனி லிங்கம் (லிக்=சித்திரி) என்றபதம் எல்லாவற்றையும் சித்திரிப்பது அதாவது சர்வலோககாரணன் எனப்பொருள்பட்டுப் பரமேசுரனைக் குறிக்கின்றது. அப்பரமேசுரன் சர்வவியாபகனாதலால் அவனது வியாப்பியஸ்தானமாய் அவனை உபாசித்தற்கிடமாயுள்ள பொருள்கள் அனைத்தும் அவனேயாகக் குறிக்கப்படலால் அவையனைத்தும் லிங்கம் எனப்படும். அவைவருமாறு:—

### (I) சதாசிவலிங்கம் (விசுவரூபம்.)

சுத்தாசுத்தாத்துவாக்கள் சம்பந்தமான சகல புவனங்களையும் அங்கம் பிரத்தியங்கம் தாதுக்களாயுடைய அல்லது கற்பிக்கப்படுகிற வடிவம் சதாசிவலிங்கம் அவ்வாறு அவ்வடிவனைத்தியானித்து அத்தியானத்தில் திரிபுடியற்று அதீதப்படல் சதாசிவலிங்காராதனம்.

## (2) அண்டலிங்கம்.

பூமண்டலமே ஆவுடையார், ஆகாயமே இலிங்கம், ஆகக் கொள்ளல் அண்டலிங்கம். இவ்விலிங்கத்துக்குத் திக்குகளே பரிவட்டம், மலைகள் சோலைகள் புஷ்பமாலை, நக்ஷத்திரங்கள் இரத்தினாபரணங்கள், கடல் திருமஞ்சன சாலை, மழைபெய்தல் அபிஷேகம், விருக்ஷ செடிகொடிகள் புஷ்பஞ்சொரிதல் புஷ்பார்ச்சனை, வாயு சலித்தல் விசிறியிடல், மேகம் கடல் பக்ஷி வண்டுகளின் ஒலிகள் வாத்தியங்கள், உலகத்தார் செயலெல்லாம் அவன் பணி, உலகிற் ஜீவர் கொள்ளும் ஆகாரமனைத்தும் அவனுக்கு நைவேத்தியம், உலகினர் பேசுதல் படித்தல் பாடல்களிலுண்டா மொழியனைத்தும் அவன் தோத்திரம், நினைப்பவையனைத்தும் அவனது தியானமென்று காண்பன நினைப்பன துய்ப்பன அனைத்தும் அவனுருவாகவும் அவனாராதனமாகவே கண்டு தானும் அவ்வண்டத்துட்பட்டவனையாதலால் தனனையு மதுவாகவே கருதித்தானற்று அவன் செயலன்றித் தனக்கெனச் செயலற்றுத் தியானத்திலதீதப்பட்டு நிற்பது அண்டலிங்காராதனம். இதுவும் விசுவரூபோபாசனையி லொருபேதமாம் இவ்வுபாசனை உலகிலெப்பொருளை எச்செயலைக் காணினும் புரியினும் பரமேசுரன் ஞாபகமும் தியானமு முண்டாதற் கேதுவாகின்றது.

## (3) பிண்டலிங்கம் (உருவம்)

மனிதராக்கை வடிவமே பிண்டலிங்கம். அடியவரை

அல்லது குருவைக்கண்டு பரமேசுரனுக வணங்கல் பிண்ட லிங்காராதனம். தனது சரீரத்தைப் பரசரீரமாகத் தியானித்தலும் இதினுட்படும்.

(4) ஆன்மலிங்கம். (அருவம்)

ஜீவான்மாவில் அந்தரியாமியாயுள்ள பரமேசுரன் ஆன்மலிங்கம். * யோகத்தால் ஆறுதாரங்களைப் பூஜித்து அப்பாற் சென்று சகஸ்ரதளபதுமத்தில் ஜீவான்மாவைத் தரிசித்து அதில் பிரமோபாசனைசெய்வது ஆத்மலிங்காராதனம்.

பிரஹ. 2-1-13. यएवायमात्मनि पुरुष एतमेवाहं ब्रह्मोपासइति ॥

"எவன் இந்த (ஜீவ) ஆன்மாவில் (அந்தரியாமியாயுள்ள)

---

*Select Writings. p..33:—Admits this doctrine in the following words-There is not even the least contradiction implied. when we say that god, the Immense exists substantially in our Soul like (sic) our Soul does in our body, and that consequently, three different substances are present in one and the same place, viz god, our soul, and our body;

தேர்ந்தெடுத்த எழுத்துகள்—அடியிற்கண்ட சொற்களால் இக்கொள்கையை யொப்புக்கொள்கின்றனன். நமது உடலில் நமது உயிர் (ஜீவான்மா) இருத்தல்போல நமது உயிரில் எல்லையற்றவராகிய கடவுள் முக்கியமாய் இருக்கிறார். ஆகையால் ஒரே இடத்தில் வெவ்வேறு மூன்று பொருள்களிருக்கின்றன. அவை கடவுளும், நமது உயிரும், நமது உடலும் என்று நாம் கூறும் பொருளுக்குச் சற்றும் மறுப்புக் கருதப்படுகிறதில்லை.

புருடன் இவனையே யான் பிரமமாக உபாசிக்கின்றேன்.
பிரஹதா 4-4-23. आत्मन्येवात्मानं पश्यति தன்னிடத்தினே (ஜீவான்மாவினிடத்தினே)பரமான்மாவைப்பார்க்கின்றனன்
கட. 2. 5. 12. सर्वभूतान्तरात्मा சகல ஜீவான்மாக்களுக்கும் அந்தரான்மா (உள்ளுறையான்மா)
க. 2. 5. 13. तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरास्तेषां शान्तिः शाश्वती नेतरेषां எந்த அறிஞர் ஜீவான்மாவிலிருக்கிற அவனைப்பார்க்கின்றனரோ அவர்களுக்கு நிலையானசுகம்;மற்றையர்க்கின்று.

## (5) தாபரலிங்கம். (உருவம்.)

சத்தியும் சிவமும் சரீரமும் சரீரியுமாயுள்ளன. அச்சரீரிஒருவடிவற்ற பரிபூரணமென்றுணரும்படியாயுள்ள வடிவம் தாபரலிங்கம் அதாவது இலிங்கம் ஒரு பிண்டவடிவாயிருக்கினும் கால் கை கண் காது முதலிய வுருப்பின்றியிருத்தலால் ஈசுரன் சருவப் பிரபஞ்சவடிவனாயிருககினும் அவன் தனக்கென ஒரு வடிவிலன் என்பதைக் குறித்தற்குச் சாதனமா யுள்ளது தாபரலிங்கம். அகண்டபரிபூரண சச்சிதாநந்த பிரமத்தைக்குறித்து ஆலயங்களிற் செய்யப்படும் லிங்கார்ச்சனையாகிய உருவோபாசனையே தாபரலிங்காராதனம்.

இனி ஆலயமே தாபரலிங்கம், கோபுரம் விமானம் ஸ்தூலலிங்கம், (அசலலிங்கம்) பலிபீடம் பத்திரலிங்கம், துவஜம் ஊர்த்வலிங்கம், கர்ப்பக்கிரகத்திலுள்ள இலிங்கம் சூக்குமலிங்கம் (பரார்த்தலிங்கம்) எனப்படும், வாண

லிங்கம் இரத்தினலிங்கம் முதலியன சலாசலலிங்கம், வேதிகையில் மண்டலமிட்டுப் பூசிக்கப்படும் அநந்தவிசய முதலிய தொண்ணூற்றாறு மண்டலலிங்கங்கள் அசலசலலிங்கம், தன் விருப்பப்படி இருதயத்திற் கற்பித்து மானதபூஜை செய்யும் லிங்கம் சலனலிங்கம். ஒருவன் பூஜைசெய்தற்காக அப்போதப்போது மண்முதலியவற்றால் கற்பித்துக் கொள்ளல் க்ஷணிகலிங்கம், தன் பூஜைக்காக வைத்துக் கொள்ளப்படும் பாணமுதலியன ஆன்மார்த்தலிங்கம் எனவும் பெறும். மண்வடிவாய்ப் பாவிப்பது பார்த்திவலிங்கம், நீர்மயமாய்ப் பாவிக்கப்படுவது அப்புலிங்கம், அக்கினியுருவமாய் எண்ணப்படுவது தேஜோலிங்கம். காற்றின் ஆகாரமாய்க் கருதப்படுவது வாயுலிங்கம். விண்ரூபமாய் உன்னப்படுவது ஆகாசலிங்கம். இவற்றை நினைப்பூட்டும் தலங்கள் திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் என ஐந்து. இனிக்கல்லாற் செய்யப்பட்டது சிலாலிங்கம், நீலரத்தினத்தால் செய்யப்பட்டது இந்திரநீலலிங்கம், பளிங்காற் செய்யப்பட்டது ஸ்படிகலிங்கம், செம்பாற் செய்யப்பட்டது தாம்ரலிங்கம், பொன்னாற் செய்யப்பட்டது ஹேமலிங்கம், வெள்ளியாற் செய்யப்பட்டது இரசதலிங்கம், பாதரசத்தாற் செய்யப்பட்டது ரசலிங்கம், மரத்தாற் செய்யப்பட்டது தாருலிங்கம், சாணத்தாற் செய்யப்பட்டது கோமயலிங்கம், மலைவடிவானது பருவதலிங்கம் எனவும் படும். பரார்த்தலிங்கம் சுயம்பு லிங்

கம், காரணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானிடலிங்கம், என ஐவகைப்படும். இனிப்பீடமும் சிவலிங்கமுமாயிருப்பது அவ்வியக்தலிங்கம்' கைகால் முதலிய அவயவங்களெல்லாம் விளங்குவது வியக்தலிங்கம், சந்திரசேகரர், உமாமகேசர் முதலிய இருபத்தைந்து அறுபத்துநான்கு மூர்த்தங்களும் வியக்தலிங்கங்களேயாம். முகம் கழுத்து தோள் முதலமட்டும் விளங்குவது வியாக்தாவியக்தலிங்கம் எனவும் படும்.

## (6) ஞானலிங்கம்—அதீதம்.

உருவாயும் அருவாயும் அருவுருவாயும் கூறத்தக்கதாயினும் உண்மையில் மனம் வாக்குக்காயங்களுக் கெட்டாததாய் நின்ற பரம்பொருளே ஞானலிங்கம். அதை உபாசித்தல் அதீதோபாசனை, இவற்றினுட் பிரிவுகளையும் விரிவையும் ஆங்காங்குக் காண்க.

## ரூபகற்பனையின் கருத்து.

மேற்கூறிப் போந்தவற்றாற் பரமேசுரன் குறிக்கத்தக்க ஒரு வடிவுமற்றவன் உபாசித்தற்கிடமாயினவே அவன் வடிவாகக் கொள்ளப்படுகின்றன என்பதும், உபாசகன்மனம்பற்றிநிற்றற்கு அவை பெரிதும்வேண்டற் பாலனவென்பதும், எல்லாமவன் வடிவாதலால் எல்லாவற்றையும் அவன் வடிவாக வணங்கல் பொருத்தமுடையதே என்பதும் தெளிவாம்.

## மூர்த்தோபாசனை.

இவ்வுபாசனை பரமேசுரன் அட்டமூர்த்தங்களில் சூரியன், சந்திரன், அக்கினி முதலிய ஈனமற்றதும், பெரிதும், சிறந்ததும், ஆம்பொருள்களில் மனம்பற்றும்லொன்றில் அதை வடிவம் அல்லது இடமாயுடையனாக அவனை (பிரமத்தை) வணங்குதல், அல்லது பஞ்சபூதங்களும் அவன் மூர்த்தத்துட்பட்டனவாதலால் பௌதிகவடிவங்கள் அதாவது இயற்பொருளாகிய மணல், அரிசி, அன்னம், மண், கோமயம் (சாணம்)வெண்ணெய், பழம், மா, சந்தனம், தருப்பை, புஷ்பமாலை, சர்க்கரை, ருத்திராக்ஷம், பஸ்மம், தளிர் இவைகளில் அல்லது இவற்றின் பிண்டங்களில் அவ்வவ்வடிவமாக அவனை வணங்கல் வடிவமாயிருக்கின்றது. இயற்பொருள்களைப்போலவே க்ஷணிகலிங்கமர்களைத்துபாசிக்கப்படுதலால் இயற்பொருளால் செய்யப்பட்ட மா முதலிய செயற்பொருள்களும் இதிற் சேர்க்கப்பட்டது. பாணம் சாளக்கிராமம் என்ற இயற்பொருள்களிலும் அங்ஙனமே உபாசிக்கப்படுகின்றனன். பரமேசுர பத்தர்களைப் பரமேசுரனைப் பாவித்து வணங்கலும் மூர்த்தோபாசனையிற் பட்டதே.

தாழ்ந்தனவும், அனுசிதமானவுமாகிய எல்லாப்பொருள்களிலும் சமதிருஷ்டிவைத்து ஈசுரபாவனை செய்யச்சக்தியற்ற விஷமதிருஷ்டியும், ஈசுரன் எங்கும் எல்லாவற்றிலும் இருக்கின்றனன் என்ற அறிவுமுடையார்க்கு இவ்வுபாசனை உரியது. இவ்வுபாசனைக்குரிய மூர்த்தங்களையும் பொருள்

களையும் அவற்றில் தியானிக்கும் முறைகளையும் ஊகிக்கில் ஈசுரன் சர்வவியாபகன், அவன் சரீரத்திலெப் பகுதியில வனைத் தியானிக்கினும் அவன் வணக்கமேயாம் என்பது நன்கு புலப்படும். இவ்வுபாசனையில் மனம் திடப்படுதற் காகப் பல நியமங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இவற்றைச் சங்கரஹித்து अग्नौदेवोद्विजातीनां இரு பிறப்பாளர்க்குத் தெய்வம் அக்கினியில். என்றுஸ்மிருதி கூறுகின்றது. முதன்மைபற்றி அக்கினி கூறப்பட்டது.

பிரஹ 2. 1 2. य एवासावादित्ये पुरुष एतमेवाहं ब्रह्मोपास इति
"இந்தச் சூரியனிற்புருடன் யாவன் இவனையே நான் பிரம மாக உபாசிக்கின்றேன்."

பிரஹ 2. 1. 3. य एवासौ चन्द्रे पुरुष एतमेवाहं ब्रह्मोपास इति
இச்சந்திரனிற் புருடன் யாவன் இவனையே நான் பிரம மாக உபாசிக்கின்றேன்.

பிரஹதா 2. 1. 7. य एवायमग्नौ पुरुष एतमेवाहं ब्रह्मोपासइति
இவ்வக்கினியிற் புருடன் யாவன் இவனையே நான் பிரம மாக உபாசிக்கின்றேன்.

பிரஹ 3 7. 9. यस्यादित्यश्शरीरं य आदित्यमन्तरो यमयत्येषत आत्मान्तर्याम्यमृतः எவனுக்குச் சூரியன் சரீரம், எவன் சூரியன் உள்ளிருந்து ஆளுகின்றனன் அவன் உனக்கு ஆன்மா அந் தரியாமி அமிருதன்.

பிருஹ 3 7. 11· यस्य चन्द्रतारकं शरीरं "எவனுக்குச் சந்திரன் நக்ஷத்திரம் உடல்."

பிருஹ 3, 7. 5. यस्याग्नि श्शरीरम् எவனுக்குத் தீசரீரம்.

சுவே 2-17. यो देवो अग्नौ यो अप्सु यो विश्वंभुवनमाविवेश ।
य ओषधीषु यो वनस्पतिषु तस्मै देवाय नमोनमः ॥

"எந்தத்தேவன் அக்கினியிலுள்ளவன் எவன் நீரிலுள்ளவன் எவன் எல்லாப்புவனங்களிலும் பிரவேசித்தான் எவன் ஓஷதிகளிலுள்ளவன், எவன் மரங்களிலுள்ளவன் அந்தத் தேவனுக்கு நமஸ்காரம்."

திருநா-தே "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெரியுங் காற்றுமாகி, யருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமாகி யட்ட மூர்த்தியாகிப், பெருநலமும் குற்றமும் பெண்ணு மாணும் பிர ருருவுந் தம்முருவுந் தாமேயாகி, நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர் புன்சடை யடிகணின்றவாறே"

இவ்வுபாசனைக்கு இடநியமமின்று. அவ்வவ்விடங்களிலுள்ளார் பற்பல விவகாரங்களிற் முயன்றுகொண்டிருப்பர். அவற்றின் நாப்பணிருப்பவன் மனம் அவ்விவகாரங்களிற் செல்லும், ஆதலால் அவற்றில் மனம் உழலவிடாமற் குறித்தவிடத்தில் மனத்தை நிறுத்தியுபாசிக்கும் திறமையுடையாரே இவ்வுபாசனைசெய்ய வல்லவராவர். அத்திறமை நிரம்பப்பெறாதவரும், ஈசுரபத்தியிற் சிறவாதவரும், ஈசுரோபாசனையிற் பயிலாதவரும், அத்தன்மைகளை யடைந்துய்தற்பொருட்டு ஆலயவணக்கம் செய்தல்வேண்டும்.

## ஆலயவணக்கம்.

ஆலயவழிபாடு வடிவில்வழிபாடு உறுப்பில்வடிவவழிபாடு, உறுப்புடை வடிவவழிபாடு என மூவகைப்படும்.

### வடிவில்வழிபாடு (அவிக்கிரகோபாசனை.)

அருவோபாசனையில் அல்லது அருபாரூபோபாசனையில் பற்றியராகியும், விவகாரக்குழுவின் நாப்பண்ணிருந்து தியானிக்க மனம் நிலைக்காத தன்மையராயினோர் தெய்வவணக்கஞ் செய்தற்கேற்பட்ட ஆலயத்திற்சென்று அவன் புகழ்படித்துப்பாடி நினைந்து தியானித்து வணங்கல் வடிவில்வழிபாடாம். இதனைத் திருப்பெருந்துறைச் சிவாலயம் சிதம்பர இரகசியமுதலிய விடங்களில் விளங்கக்காணலாம். ஒவ்வொரு சிவாலயங்களிலும் லயக்கிரகம் என்ற பள்ளியறையில் தினந்தோறும் விக்கிரகமின்றி பீடங்களை மாத்திரம் வைத்து அவற்றில் சிவம் சக்திகளைப்பாவித்துத் தியானித்து வணங்குதலும் இவ்வழிபாடேயாம்.

### உறுப்பில் வடிவவழிபாடு (அநங்கவிக்கிரகோபாசனை.)

காட்சியிற்படும் பொருள்களை யெல்லாம் சமதிருஷ்டியாற் பரன்வடிவாகக்கண்டு வணங்கும் வன்மையற்றாரும், இலௌகிக விவகார நாப்பண்ணிருந்து ஒருவடிவத்தில் மனமொருமித்து வணங்கும் வன்மையற்றாரும், அவர் மனம் நிலைத்துப் பற்றுதற்பொருட்டு தெய்வந்தொழற்கென்று கௌரவமாகக் குறிக்கப்பட்ட பரிசுத்தமான ஆலயத்தில் கை, கால், கண், தலை முதலிய அவயமற்ற ஒருருவினை

(இலிங்கத்தை) அமைத்து அது பரமேசுரன் சமஷ்டி சரீரத்தினொருபகுதியாதலால் அதைப் பிரமவடிவமாகக் கருதி வழிபடல் அநங்க விக்கிரகோபாசனை. லிக் (சித்திரி) என்ற பகுதியினடியாய்ப் பிறந்த லிங்கம் என்றசொல் உலகனைத்தையும் சித்திரிப்பது அதாவது படைப்பதுஎன்ற பொருளுடையது. ஆதலால் இலிங்கம் சர்வலோககாரணன். அவனை அப்பகுதியிற் குறிந்து வணங்குவது லிங்கோபாசனை.

உருப்புடைவடிவவழிபாடு (அங்கவிக்கிரகோபாசனை)

இடைவிடாது விடயங்களிற் பயின்று தெய்வ உபாசனையில் மனம்பழகாத அறிவிற் சிறவாதவர்க்கு, சருவவியாபகனாகிய பரமேசுரன் அடியார் பக்திக்கிரங்கி இவ்வடிவொடு தோற்றியருள் புரிந்தனன் என்று அவன் அருண்மிகுதியை ஞாபகப்படுத்திப் பத்தியை விளைவிக்கின்ற சோமாஸ்கந்தர் நடராஜர் முதலிய வடிவங்களை பரமேசுரன் வடிவமாகக் கருதி வழிபடல் அங்கவிக்கிரகோபாசனை.

(ஆலயவணக்கத்தின் பயன்.)

ஆலயத்திற் செய்யும் அங்கவிக்கிரகோபாசனை, அநங்கவிக்கிரகோபாசனை, அவிக்கிரகோபாசனை என்ற மூன்றும் ஒன்றுக்கொன் றுயர்ந்தனவே. இம்மூன்று வழிபாட்டையும் நாடோறும் புரிந்துவரில் அங்ஙனம் புரிபவர்க்கு ஒன்றுக்கொன்று வேறுபட்ட பலவகையாகப் பரமேசுரனை வணங்குகின்றோமே அவற்றில் எவ்வகை சிறந்தது; அவனுக்குண்மைவடிவந்தான் யாதுஎன்ற ஐயம் பிறக்கும். பிறக்கவே

அறிஞரிடம் அல்லது நூல்களின் மூலமாய் விசாரிக்கப் பிரவிருத்திப்பன். அங்ஙனம் பிரவிருத்திப்பவன் பரமேசுரனின் லயம், உத்யுக்தம், அதிகாரம், என்ற மூன்று தன்மைகளைக் குறிக்கும் நிட்கள, சகளநிட்கள, சகள வழிபாடுகளில் லயக்கிரமமாகிய பள்ளியறையில் அவிக்கிரகோபாசனை (=நிட்களோபாசனை) செய்தல் பரமேசுரன் ஒருவடிவிலன் சருவப்பிரபஞ்சங்களையும் தன்னிடத்தொடுக்கும் பிரபஞ்சாதீதன் என்பதை உணர்த்துகின்றது. அங்கவிக்கிரகமாகிய லிங்கோபாசனை (=சகளநிட்களோபாசனை) செய்தல் பிரபஞ்சப் பிராணனாகிய பரமேசுரன் சருவப் பிரபஞ்சங்களையும் தனதுவடிவாயுடையனாயினும் தனக்கென ஒருவடிவிலன் என்பதையுணர்த்துகின்றது. அங்கவிக்கிரகோபாசனையாகிய மூர்த்தியுபாசனை (=சகளோபாசனை) செய்தல் அவன் சருவாந்தரியாமியாதலால் எல்லாவடிவுந்தன்வடிவாயுடையன் என்பதை உணர்த்துகின்றது என்று விசாரணையா லறிகின்றனன்.

அவ்விசாரணையின் பலத்தால் ஈசுரன் வியாபகத்தால் சருவப் பிரபஞ்சாகாரனாயினும் உண்மையிலொருவடிவுமிலனென்றும், உண்மைவழிபாடாகிய சூக்குமோபாசனையில் மனம் நிலைத்தற்கு வடிவவழிபாடாகிய தூலோபாசனை படியாமென்றும், உணர்ந்து தனக்குச் சாத்தியமான வழிபாட்டில் உறுதியாய் முயல்வன்.

இவ்வாலயவழிபாடு இடைவிடா துலகவிவகாரத்திற்பட்டுழன்று திரிவார்க்கு ஆலயங்களைக் காணுந்தோறும்

தெய்வ ஞாபக முண்டாக்குகின்றது. ஆலயத்தில் ஸ்தூல லிங்கம் என்னப்படும் கோபுரம் அதிக உன்னதமாயிருப்பதால் அதிதூரத்திலுள்ளார்க்கும் அது பார்வையிற்படும் போதெல்லாம் தெய்வஞாபகத்தை யுண்டாக்குகின்றது. தினம் பூஜாகாலங்களில் ஆலயத்திற்செய்யப்படும் வாத்திய ஒலி பேரிகைஒலி மணிஒலிகளும் தெய்வஞாபகத்தை யுண்டாக்குகின்றது. தினம் பூஜாகாலங்களில் விசேடமாய் சாயரக்ஷையில் மாதவிசேட வருடவிசேடங்களில் செய்யும் உற்சவங்கள்பலரை ஆலயத்துக்குப் போம்படி தூண்டுகின்றது. பலர் ஆலயத்துக்குப்போதலைக் காணலும், பலர் ஆலயத்துக்கழைத்தலும், தெய்வஞாபகத்தை உண்டாக்குகின்றது. ஆலயத்தில் பலர் சிவா சங்கரா மஹாதேவா ஜெகந்நாதா பக்தவத்சலா பரமேசுரா சருவேசுரா என்றன்பொடு தேவநாமங்களைக் கூறலையும், பகவத் தோத்திரபாக்களைக் கூறலையும், ஓதுவார்கள் தேவாரம்பாடலையும், வேதசுரகாள் வேதமோதலையும், அர்ச்சகாள் அஷ்டோத்தரசதம், திரிசதம், சகஸ்ரநாமம் முதலிய நாமங்கள் படித்தலையும் கேட்குந்தோறும் தெய்வஞாபக முண்டாகின்றது. காயகாள் பரமேசுரப்பிரபாவங்களை பாடலையும், கணிகையர்பரமேசுரனைப்பாடி, ஆடலையும், கேட்குந்தோறும் பார்க்குந்தோறும் பரமேசுரன் பெருமையே ஞாபகத்துக்கு வருகின்றது. பக்த சின்னங்கள் தரித்த பக்தர்களைக்காணுந்தோறும், அவர்கள் பிரதக்ஷிணஞ்செய்தல் நமஸ்காரஞ்

செய்தல் பரனைப் பாடி ஆடல் முதலியவற்றைப் பார்க்குந்தோறும் தெய்வசிந்தனை நிகழ்கின்றது.

விசுவரூபனாகிய பரமேசுரனைக் குறித்து அவன் சரீரத்தின் ஒருபகுதியாகிய ஒருகுறியில் உபாசிப்பவர் ஈசனிடத் தவர்கொண்ட அன்பின்மிகுதியால் அன்பை விளக்கும் வாசனைத்தைலம் சந்தனம் களபம் கரும்பிரசம் மாம்பழரசம் முதலிய நறிய இனிய பொருள்களை அபிஷேகஞ்செய்து, பன்னீர் இளநீர் நன்னீர் கொண்டு ஆட்டி, புஷ்பம் சந்தனம் புனுகு சவ்வாது கஸ்தூரி குங்குமப்பூ பச்சைக்கற்பூரம் முதலியவாசனைத்திரவியங்களை யணிந்து, அப்பகுதியை வஸ்திரம் ஆபரணங்களாலலங்கரித்து, தூப தீப உபசாரங்கள்செய்து, தோத்திரித்தலைக் காணுந்தோறும் கடவுள்பால் அன்பும் இடைவிடாத ஞாபகமுமுண்டாகின்றது.

தரிசனம் செய்வார் பரமேசுரனைத் தியானித்துக்கொண்டு பிரதக்ஷிணம் வருவதும், அஷ்டாங்க பஞ்சாங்க திரியங்க நமஸ்காரம் செய்வதும், தோத்திரப்பாக்களைப் படித்தலும், அவருக்கு பரமேசுரபக்தியை வளர்த்து வேறுவிடயங்களில் மனம் செல்லாது காக்கின்றது. விக்கினேசுராலயம் சுப்பிரமணியாலயம் தேவியாலயம் விஷ்ணுவாலயங்களிலும் இப்படியே தெய்வஞாபகமுண்டாகின்றது. வேத வேதாந்தங்களிற் கூறப்படுஞ் தெய்வம் பிரமமொன்றே. அது உலகனைத்தையும் தன்னடிவா யுடைமையால் காப்பு

கடுக்கன் சங்கிலி முதலிய தனித்தனிப் பெயர் கூறினும் பொன்னென்றே அப்பெயரனைத்தையு முடையதாதல்போலப் பிரமா விஷ்ணு ருத்திரன் அக்கினி சூரியன்முதலிய பெயர்களால் பிரமபாவனை செய்யினும், அப்பெயரனைத்துக்குமுரிய சருவாந்தரியாமியாகிய பிரமமே அப்பெயர்களால் வணங்கப்படுகின்றனன். ஆதலால் எவ்வடிவத்தில் எம்மூர்த்தியில் அல்லது எவ்விடத்தில் பிரமத்தியானஞ் செய்யினும் அவையனைத்தும் பிரமோபாசனையே யாகின்றது.*

ஆதலால் சதாதெய்வத்தியானபரராளாகிய யோகியரல்லாத அனைவர்க்கும் ஆலயவழிபாடு மிகவும் அவசியமானதே

* சூதசம்ஹிதை. க. 1. அத். 8. 39.

यां यां मूर्त्ति समाश्रित्य ब्रह्मभावनयाजनाः । आराधयन्ति सर्वे तं क्रमाज्जानन्ति शंकरम् ॥

एवं मूर्त्यभिधानेन द्वारेणैव मुनीश्वराः । प्रतिपाद्यो महादेवः स्थितस्सर्वासुमूर्तिषु ॥ (48)

“மனிதர் எந்தெந்த மூர்த்தியைப் பற்றிப் பிரமபாவனையுடன் ஆராதிக்கின்றனரோ அவரனைவரும் வரிசையாய் அந்த (அவ்வெல்லாவடிவனை) சங்கரனையே அறிகின்றனர்.

முனீசரரே! இவ்வாறு (பிர்மா விஷ்ணு ருத்திரன் அக்கினிசூரியன் முதலிய) மூர்த்தியின் பெயர்வாயிலாகவே, எல்லாமூர்த்திகளிலும்(வடிவங்களிலும்), அந்தரியாமியாயிருக்கின்ற மஹாதேவனென்னும் பிரமமே கூறப்படுகின்றது.

இதுபற்றியே ஔவையார், "ஆலயந்தொழுவது சாலவு நன்று" என்று கூறினர் கிறிஸ்துவர் முகம்மதியர், பிரம சமாஜத்தர் சமணர் பௌத்தர் முதலிய அநந்த மதஸ்தர் ஆலயத்திற்சென்று வழிபாடுபுரிதலும் வேறுவிடயங்களிற் செல்லாது தெய்வத்தினிடத்திலேயே மனஞ்செல்லுதற் பொருட்டாயதே.

## கண்டோபாசனை.

பரமேசுரன் சருவ வியாபியாயிருத்தலால் கண்முற்படும் எல்லாப்பொருள்களையும் சமதிருட்டியால் வணங்கல் பொருந்தும். ஓரிடத்திலுள்ள ஒருபொருளை குறியை அல்லது வடிவத்தை (விக்கிரகத்தை) அவனுகக்கண் டுபாசித்தல் அவன் வணக்கம் ஆமாலோவெனில் ஆம்.

## உதாரணம்.

மனிதனுயிர் உடல்முழுதும் நிறைந்துளது. உயிரோடு கூடிய கால் கை கண்டம்முதலிய எல்லா அவயவங்களின் சமஷ்டியே மனிதன். அவன் அவயவங்களில் யாதானு மொன்று கண்ணிற்பட்டு மற்ற உறுப்புகள் கண்ணிற்படாது மறைவிலிருக்கினும் மனிதன் ஞாபகமே வந்து அங்கு மனிதன் உளனென்றே அறிகின்றேம். ஆதலால் அவயவங்களனைத்தும் சேர்ந்த சமஷ்டியே மனிதன் ஆயினும் கண்முற்படும் முகம் பிற்பகுதி அல்லது மற்றொருபகுதியைப் பார்த்து அதனுல் முழுவதுக்கும் பெயராகக் குறிக்கும் மனித

னைக் கிரகிக்கின்றோம். அங்ஙனம் அவனதொருபகுதியை நோக்கி மனிதனெனக் கொள்ளல் அப்பகுதி அவன் சரீரத்தி லொருபங்காதல் பற்றியேயாம். மனிதனென்று குறிக்கப்படுவது அவ்வுடல் முழுதினும் நிறைந்து நான் மனிதன்என்று விவகரிக்கும் உயிர். மனிதன் காலில் நமஸ்கரிப்பது அவ்வுடன்முழுதும் நிறைந்து நின்ற அருவப்பொருளாகிய ஜீவனைக்குறித்தா? அல்லது அங்ஙனங் குறித்தற்கிடமாய்க் காலென்னப்படும் என்பு தோல் நரம்புகளோடு கூடியமாம் சபிண்டத்தைக் குறித்தா? மாம்சபிண்டத்தைக் குறிந்தன்று. அந்த மாம்சபிண்டத்தையும் மற்ற பகுதிகளையும் வியாபித்து அவற்றைத் தனது சரீரமாயுடைய ஜீவனைக் குறித்தே நமஸ்காரஞ் செய்யப்படுகின்றது. அந்த ஜீவன் தனது வியாப்பியப்பொருளாகிய உடலின் ஒருபகுதியில் தன்னை வணங்கியதால் தன்னை வணங்கவில்லை ஒரு மாம்சபிண்டத்தை வணங்குகின்றான் என்றெண்ணுகின்றனனோ! அல்லது அருவமாகிய தன்னை ரூபத்தில் வணங்குவது தன்னைத் தாழ்த்தி யவமானப்படுத்திய குற்றமென் றெண்ணுகின்றனனோ? அல்லது சரீரம்பற்றி இக்கரியன் புத்திமான் வித்வான் குணக்ஞன் தருமசாலி என்று உயிர்க்குணத்தைப் புகழ்ந்து கூறலைத்தன்னையன்று சரீரத்தைப் புகழ்கின்றனன் என்றிகழ்ந்து சந்தோஷியாது விடுகின்றனனோ? இல்லை. தன்சரீரத்தை எதிராக்கி அல்லது பற்றிப் புகழ்தலையும்

வணங்கலையும் தன்னைப் புகழ்தலாகவும் வணங்கலாகவும் கொண்டு சந்தோஷிக்கின்றனன்.

## அபிஷேகாதியுபசாரங்கள்

ஒருவனை அவன் சரீரத்தில் வணங்குவது சாக்ஷாத்வணக்கமாதலால் அது அவனுக்காக அவன்போன்ற ஒருவிக்கிரகத்தை வணங்குவதாகாது. ஒருவன் அவன் பாதத்தைப் பரிமள தயிலந்தேய்த்துப் பனிநீராலாட்டிப் பட்டுவஸ்திரத்தாலொற்றி புனுகு ஜவ்வாதுகளை யணிந்து புஷ்பங்கொண்டு அர்ச்சித்துப் பொன் இரத்தினுபரணங்களாலலங்கரித்துத் தலைமேற்கை கூப்பி பிரபுவே? என்னையாண்டவனே? கருணை யுள்ளானே? அறிஞரேறே? கவிஞனே? என்று புகழ்ந்து வணங்கில், அவன் வணங்குபவன் தன்னிடத்து வைத்த அன்பின் மிகுதியா லிங்ஙனஞ் செய்கின்றனனென்றறிந்து அவனிடத்து விசேட பிரீதியும் தயவுஞ் செய்வதன்றிக் கோபங்கொள்ளவே மாட்டான் என்பது திண்ணம். இஃது அநுபவத்துங் கண்டுளோம்: அங்ஙனமே பரமேசுரன் சர்வப்பிரபஞ்சவடிவனுதலால் அவன் சரீரத்தில் நம் கண்முறப்படும் பகுதியை அவன்வடிவமாகக் கண்டு வணங்குதல் அவன் சாக்ஷாத் உபாசனையேயாமன்றி அவனுக்காக அவன் போன்ற வேறு விக்கிரகத்தை வைத்து வணங்கும் வணக்கமாகாது. ஆதலால் ஆலயத்திலுள்ள குறியும்(இலிங்கம)அல்லது வடிவமும(விக்கிரகம்) அவன் சரீரத்தி னொருபகுதியேயாவதால் அவற்றில் அவனை வணங்குவதும் அவன் சாக்ஷாத்

உபாசனையே யாகின்றது. அவ்வடிவத்திற் செய்யப்படும் அபிஷேகம் அலங்காரம் நைவேத்திய முதலிய வெல்லா உபசாரச் செயல்களும் அங்ஙனம் புரிபவன் மனதைத் தெய்வத்தினிடத்தில் நிலைக்கச்செய்து பக்தியை விளைக்கின்றது. பரமேசுரனும் தன்னைக்குறித்து அவன் அபிஷேகாதியுபசாரங்களாற் செய்யும் அன்புக்கிரங்கவே செய்வன். அஃதன்றியும் அபிஷேகமுதலிய தூலோபாசனையிற் பட்ட செயல்கள் மேற் செல்வார்க்குச் சூக்குமோபாசனையில் இஃது இதற்கறிகுறியாமென்று அவற்றின் உட்கருத்தைப்பின்னர் ஆலய தத்துவம் என்ற தலைப்பின்கீழ்க் கூறுதும் ஆங்கு காண்க. பிறவிடங்கள் பற்பல விவகாரங்கள் நிகழுமிடங்கள். ஆலயம் தெய்வ வணக்கத்துக்கென் றேற்பட்டு அதன் சம்பந்தச்செயல்களை நிகழுமிடம். ஆதலால் ஆலயத்துட் சென்று வழிபடுவோன் கண்கள் அவன்வடிவத்தைக் காண்கின்றன. கைகள் வந்தனஞ்செய்கின்றன. தலைவணங்குகின்றது. காதுகள் அவன் திருப்புகழ்ப்பாடல்கள் கேட்கின்றன. வாய் அவன்திருநாமங்களைக் கூறுகின்றது. உடல் அவன் வழிபாட்டில் நிலைக்கின்றது. மூக்கு அவனுக்கர்ப்பித்த திவ்ய கந்தங்களில் லயிக்கின்றது. இவ்வாறு இந்திரியங்களெல்லாம் பரமேசுரனையே குறித்து நிற்றலால்மனம் வேறு விடயங்களில் செல்லாது அவனையே கருதித் தியானித்து வழிபடுகின்றனன். இவ்வாறு பழகப்பழக மனம் நிலைப்பட்டுத் தெய்வ பத்திமிகுகின்றது. ஆதலால் இவ்வழிபாடு அறிவிற்

சிந்தா பரமசாத்தியானத்தில் பயிலாதார்க்கும் அவ்வந்நி யானத்தில் நிலைப்பட்டார்க்கும் அத்தியாவசியமானது.

## திருவாசகம் சதகம் 26

"சிந்தனை நின்றனக் காக்கி நாயினேனாற்றன் கண்ணிணை
நின் திருப்பாதப் போதுக் காக்கி வந்தனையு மம்மலர்க்கே
யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கியைம்புலன்களார
வந்தனை யாட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை மாலமுதப்
பெருங்கடலே மலையே உன்னைத் தந்தனை செந்தாமரைக்கா
டனையமேனித் தனிச் சுடரேயிரண்டு மில்லித் தனியனேற்கே"

## புருடாகிருதி வணக்கம்.

அவன் எங்கும் வியாபகனா யிருத்தலால் ஏதாவதொரு வடிவில வணங்கலாம். ஆதலால் ஒருகுறிப்பு மற்றகுறியில் (இலிங்கத்தில்) வணங்குவதும் அங்ஙன மொப்பத்தக்கதே. மனிதவடிவஞ்சார்ந்த பலவேறுவடிவங்களை வைத்து அவ்வற்றில் அவனை வணங்குவது எங்ஙனம் அவன் சாக்ஷாத்வடிவ வழிபாடாமெனில்: பாலபருந்தும் ஆகாரமுமாவதுபோலும், தீ ஒளியும் குளிர்மாற்றுதலும் ஆவதுபோலும், வஸ்திரம் இரகசியத்தானத்தை மறைக்கும் உடையும் அலங்காரமும் ஆவதுபோலும், உருப்படுசனுடைய வடிவோபாசனை (விக்கிரகோபாசனை) பரமேசுரனிடத்தில் பக்தியை விளைப்பதும் அவனையுபாசிக்க அவன் சரீரத்திலோர் பகுதி அல்லது உறுப்புமாகின்றது. ஆதலால் இவ்வடிவம் இர

ண்டு பயனுடையதாகின்றது. ரூபாரூபோபாசனையிற்போல வடிவோபாசனையில் பஞ்சேந்திரியங்களையும் செலுத்திமனத்தையு மவனை நிறுத்திப்பதிலேமலிட்டு அநீதப்பட்டு மனமிறந்து தியானிக்கும பத்தர்களுக்கு இரங்கி அவர்கள் ஞானநேத்திரத்தாற் றருசிக்கத் தரிசனந்தந்தருளிய வடிவங்களைக் காணுந்தோறும் காண்பவர்க்கு அவ்வடிவத்தால் அடியவர்க் கிரங்கிச்செய்த கருணை ஞாபகத்துக்கு வருகின்றது. வரவே அத்தகையருள் தனக்குஞ் செய்வான் அவனைத் தொழு மனம் நெகிழ்கின்றது. (இது பத்திவிளைத்தல்) மனம் நெகிழவே கசிந்து அன்பு பெருகி அவ்வடிவில் இலக்ஷியம் வைத்து அவனைத் தியானிக்கின்றனன். இங்ஙனம் அன்புபெருகித் தியானித்தற்காகச் சோமாஸ்கந்தர் சபாபதி உமாமகேசுரர் சூலகாலர் திரிபுரசம்மாரமூர்த்தி லிங்கோற்பவர் முதலிய அருள்வடிவங்கள் ஆலயங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் இவ்வடிவங்கள் பரமேசுரனிடத்தில் அன்புசிறவாதவர்க்கு அன்பையுண்டாக்குதற்குக் கருவியும் உபாசித்தற் கிடமுமாகின்றன. இவையும் பரமேசுரன்வடிவிலொவ்வொருபகுதியேயாவதால் அவற்றில் அவனைக் கருதி வணங்கிவந்தும் அவன் சாக்ஷாத் உபாசனையேயாம்.

தேவாரம், ஞா.

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியா னுயிரை வெளவேலென் றடற் கூற்றுதைத்த

பொன்னடியேபரவி நாளும் பூவோடு நீர் சுமக்கும்
நின்னடியாரிடர்களையாய் நெடுங்களமேயவனே.

தேவார. ஞா. ஆவதுறை.

இடரினுந்தளரினு மெனதுறு நோய்
தொடரினு முன்கழ றொழு தெழுவேன்
கடறனி லமுதொடுகலந்த நஞ்சை
மிடற்னிலடக்கிய வேதியனே.

இச்சுருதி நஞ்சை மிடற்றிலடக்கி யடியாரைக் காத்த தால் என் இடர் நோய்களையும் எப்படியாவது நீக்கிக்காப்பா யென்று உனையடைந் தேனென்று குறித்து நிற்கின்றது.

தேவாரம். சு.

அந்தணாளனுன்னடைக்கலம் புகுதவவனைக்காப்பது காரண மாக
வந்தகாலன்ற னாருயிரதனை வவ்வினாய்க்குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியிலிவன்மற் றென்னடி யானெனவிலக்குஞ்
சிந்தையால் வந்துன்றிருவடி யடைந்தேன் செழும்பொழிற் றிருப்புன் கூருளானே.

பரமேசுரனொருவடிவுடையனன்று.

கைகால்முதலிய உறுப்புகளுடைய ஒருமனிதவடிவசம் பந்தமான உமாமகேசுரமுதலிய வடிவத்தையே வணங்கிவ

ருவதால்அது அவனுக்குரிய சொந்தவடிவமென்ற ஞாபகமுண்டாகித் திடப்பட்டு ஈசுரன் மனிதன்போன்றகண்டாகாரனென்றதீர்மான முண்டாகாதோவெனில் அங்ஙன முண்டாகாது. ஒரு ராஜாவை மனிதவடிவுடைய னென்றறிந்துள்ளவன் அவனை நேரிற்கண்டால் வணங்குவான், அல்லது அவனிடத்தில் விசேடபக்திவைத்தவன் அவனுடைய படத்தைக்காணும் பொழுதும் கௌரவப்படுத்துவன்; அன்றி அவனில் முற்றும் வேறுபட்ட கல் மண் மரம் தீகளையும் அவனாக வணங்குவனா? அவ்வரசனாக அவைகளை வணங்க அவன் மனமொருப்படுமா? படாது. ஈசன்விடயத்தில் அங்ஙன மன்று. ஆன்மார்த்த பூஜையில் ருத்திராக்ஷம் அரிசி சர்க்கரை சந்தனம் மண் வெண்ணெய் மணல் முதலியவற்றின் பிண்டங்களையும் திருமுறையேட்டையும் பரமேசுரனாக வணங்குகின்றனன். ஆலயத்துக்குச் செல்வோன் முதலில் ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்தைப் பரமேசுரனாக வணங்குகின்றனன். பின்னர்ப் பலிபீடத்தைப் பரமேசுரனாக வணங்குகின்றனன். துஜஸ்தம்பத்தைப் பரமேசுரனாக வணங்குகின்றனன். சிவலிங்கத்தைப் பரமேசுரனாக வணங்குகின்றனன். சோமாஸ்கந்தர்முதலிய இருபத்தைந்து மூர்த்தங்களை அல்லது அறுபத்தினாலு மூர்த்தங்களையும் திருவிளையாடல்செய்த பலமூர்த்தங்களையும் அவ்வடிவங்களெழுதிய படங்களையும் பரமேசுரனாக வணங்குகின்றனன். திரிசூலத்தைப் பரமேசுரனாக வணங்குகின்றனன், இங்ஙனம் ஆன்மார்த்த

பரார்த்த பூஜை செய்பவன் அட்டமூர்த்தங்களி லொன்றும் தானும் பரமேசுரன் வியாப்பியப்பொருளேயாதலால் தன்னையும் பரமேசுரனாகப் பாவித்துப் பின்னர் அவ்விலிங்கங்களில் பரமேசுரனைப் பாவித்து வணங்கல் வேண்டும். ஆன்மார்த்த பூஜையில் தன்னைப் பரமேசுரனாகப் பாவிக்கும்பொழுது பரமேசுரனுக்கு ஐந்துமுகங்களைக் கற்பித்து அவ்வைந்துமுகங்களையும் தனது உச்சி முகம் இருதயம் குய்யம் பாதங்களாகப் பாவித்து வந்தனங் கூறுகின்றனன். பின்னர்ப் பரமேசுரனது இருதயம் சிரம் சிகை கவசம் நேத்திரம் அஸ்திரங்களைத் தன்னவயவங்களிற் பாவிக்கின்றனன். முன்னைய பாவனை கூறும் மந்திரத்துக்குப் பஞ்சப்பிரமமந்திரமென்றும், பின்னைய பாவனை கூறுவதற்கு சடங்கமந்திரமென்றும் பெயர். இக்கருத்தை ஆகமங்களிலும் பத்ததிகளிலும் தெளிவாய்க்காணலாம்.

### அகோர சிவாசாரியர்பத்ததி சிவபூஜாவிதி.

ॐ हां—शिवो दाता शिवो भोक्ता शिवस्सर्वमिदं जगत् ।
शिवो यजति सर्वत्र यश्शिवस्सोहमेव तु ।

ஓம் ஹாம், சிவனே கொடுப்பவன், சிவனே அநுபவிப்பவன். இந்தஜகத்தெல்லாம் சிவனே, பூஜிப்பவனும் சிவன், எங்குமுள்ளவன் சிவன், நானும் சிவனே

ஆன்மார்த்தப் பூஜைசெய்வோரும், ஆலயங்களில் பரார்த்தப்பூஜைசெய்வோரும் முதலில் அந்தரியாகஞ்செய்தபின்

ளர் அநுக்ரஹமுகுதியால் இப் புறப்பூஜை செய்யவேண்டு மென்பது விதி. ஆதலால் புறப்பூஜைகள் அதிகாரியாக மென்னும் குக்குப்பூஜை செய்யத் தகுதியுடையவராதற்கு அதில் பலம் நிலைக்கப் பழகுதல் சாதனமா மென்றறிக.† அந்தரியாகவிப்ரத்திறத்து அந்தர்யமின் கீழ்க் காண்க. இது வைதிக சைவர்ளு கட்டாயமுடைமை சங்கரிகருத்தும் ஆம். இங்ஙனம் பலபொருள்களையும் பலவடிவுகளையும் பரமேசுரனுக்கு வடிவாக்குதல் பரமேசுரன் வடிவத்தில் ஒருவடிவன் அல்லன் அவன் அனைவடிவுகளையும் அவற்றிற் பிறவற்றையும் தன்வடிவா

† சூதசம்ஹிதை. க. 1. அத். 5.

अथाभ्यंतरपूजायामधिकारोभवेद्यदि। त्यक्त्वा बाह्यामिमां पूजामाश्रयेदान्तरं बुधः॥ 10.

पूजाचाभ्यन्तरापि द्विविधा परिकीर्तिता। साधारा च निराधारा निराधारा महत्तरा॥ 11

10. பின்னர் உட்பூஜையில் (ஆத்மோபாசனையில்) அதிகாரமுண்டானபொழுது, இந்தப் புறப் பூஜையை (த்வதோபாசனையை) விடுத்து அறிஞர் உட்பூஜையைப் பற்றுவாராக.

அவ்வுட் பூஜையும் சாதாரம் (பற்றுக்கோடுடையது) என்றும், நிராதாரம் (பற்றுக்கோடிலது) என்றும், இரண்டுவிதமாகக் கூறப்படுகின்றது. நிராதாரம் மிகச்சிறந்தது.

சாதாரம் = அரூபோபாசனை, ரூபாரூபோபாசனை எனஇருவகைப்படும். நிராதாரம் = அதீதோபாசனை.

யுடைய சருவவியாபகன் என்று ஊகித்து விசாரித்துணர் தற் கேதுவாவதுமன்றிப் பலதடவைகளில் பரமேசுரனை நினைந்து அவன்பாற் பத்திவிளைத்தற்கு மேதுவாகின்றது. கண்முற்படும் இமயமலையின் ஒரு பகுதியைக்கண்டு சமஷ்டிபருவதத்தைக் கிரகித்தல்போல இந்துவைதிகமதத்தவன் ஒரு ஆலயத்திலுள்ள இலிங்கம் அல்லது சோமாஸ்கந்த முதலியவடிவங்களைப்பார்த்துச்சருவப்பிரபஞ்சாகாரமாகிய சமஷ்டிவடிவத்தையே தியானிக்கின்றனன். அதாவது சகலபூதங்களும் பௌதிகங்களாகிய உலகங்களும் உயிர்களும் தன்னுடலாகக்கொண்டு எங்கும் வியாபித்திராநின்ற அதீதனும் அரூபனுமாகிய சருவகாரணனென்று அவன் வடிவத்திலொருபகுதியாகிய தான்காணும் இலிங்கம் அல்லது வடிவை(விக்கிரகத்தை)த் தியானித்தலேயன்றித் தான் காணும் சிலை அல்லது வடிவையே தெய்வமென்று வணங்குவதின்று. அவன் உலகிலொருபொருள்வடிவனாய் ஒருபொருளாய் அல்லது ஒருபொருளைப்போன்றவனா யில்லாமையால் சருவப்பிரபஞ்சகாரணனும் மனமொழி உடல்கட்கெட்டாத பரமேசுரனும் ஆகிய மகாதெய்வத்தையே இங்கு இவ்வடிவத்தில் வணங்குகின்றேன் என்றறிந்து உபாசித்தலே வைதிகமதத்தவர் கொள்கை.

தேவாரம் ௩௱.

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி, மயானத்தான் வார்சடையான் மாசொன்றில்லான், ஒப்புடையனல்ல

ஞெருவனல்ல ஞேரூரனல்ல ஞேருவமனில்லி, அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல் லால், இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென் றெழுதிக்காட்டொணுதே."

திருக்கச்சிமயானத்தில் உமாமகேசுரவடிவமாகி யிருக் கும் இவன் குற்றமொன்று மில்லாதவன். ஒன்றை யொப் புடையவனல்லன். (எல்லாமாயிருத்தலால்) ஒருவனல்லன் (அநந்த வடிவங்களாயிருத்தலால்) ஓரூரிலிருப்பவனுய்க் குறிக்கத் தக்கவனல்லன். (எங்கு முள்ளவனுதலால்) தன்னைப் போன்றேருருவமையில்லன். அவன் உண்மைவடிவம் அவன் அருள் வடிவாம் சிற்சத்தியாகிய கண்ணுல் தரிசிக்கத்தக்கதே யன்றி ஏனையவாற்ருல் இந்நிறமுடையவன் இவ்வடிவுடைய வன் இத்தகையன் என்று குறிக்கமுடியாது. ஆதலால் அதீ தப்பொருள் என்பது கருத்து.

தேவாரம். ௩௱.

பண்ணிஞர் பாடலாகிப் பழத்தினி லிரதமாகிக்
கண்ணிஞர் பார்வையாகிக் கருத்தொடு கற்பமாகி
யெண்ணிஞ ரெண்ணமாகி யேழுலகனைத்துமாகி
நண்ணிஞர் வினைகடீர்ப்பார் நனிபள்ளியடிகளாரே.

இப்பொழுது யான் தரிசித்து வணங்கும் திருநனிபள் ளியிலிருக்கும் சிவலிங்கப்பெருமான் பண்ணிடூெபொருந் தியபாடலாயும், பழத்தினுள்ளிரதமாயும், கண்ணிற்பொருந் துகின்ற காட்சிப்பொருளாயும், (கட்புலப்படுகின்ற சகலவடி-

வங்களாயும்)உள்ளமாயும், உள்ளத்திற் சங்கற்பிக்கும் வடிவாயும், எண்ணுபவர் சங்கற்பமாயும், பூலோகமுதலிய ஏழுலகங்களும் அவற்றில் வேறும்பொருள் முழுதுமாயுமிருக்கின்றவர். (அவர்) தன்னைச் சரண் அடைகின்றவர்கள் வினைகள் தீர்ப்பார் என்பது கருத்து.

தேவாரம் நா.

கூற்றுவன்காண் கூற்றுவனைக் குமைத்தகோன்காண் குவலயங்காண் குவலயத்தி னீரானான்காண், காற்றவன்காண் கனலவன்காண் கலிக்குமின்காண் கனபவளச் செம்மேனி கலந்தவெள்ளை, நீற்றவன்கா ணிலாவூருஞ் சென்னியான்காண் நிறையார்ந்த புனற்கங்கை நிமிர்சடைமே, லேற்றவன்காணெழிலாரும் பொழிலார் கச்சியேகம்பன்காண வனென்னெண்ணத்தானே.

தேவாரம், நா.

ஒன்றாயுலகனைத்து மானார்தாமே யூழிதோறூழி யுயர்ந்தார்தாமே, நின்றாகியெங்கு நிமிர்ந்தார்தாமே நீர்வளி தீயாகாசமானார்தாமே, கொன்றாடுங்கூற்றை யுதைத்தார்தாமே கோலப்பழனை யுடையார்தாமே சென்றாடுந் தீர்த்தங்களானார்தாமே திருவாலங்காட்டுறையுஞ் செல்வர்தாமே.

வடிவவழிபாட்டால் கடவுள்வடிவனென்ற யெண்ணமுண்டாகாது.

இலிங்கம் அல்லது விக்கிரகங்களைச் சருவப்பிரபஞ்சாகாரமாகிய பரமேசுரன் வடிவமென்று நினைத்துத் தரிசித்து

வணங்கினும் பலதடவைகளில் அஃதை இலிங்கம் அல்லது விக்கிரகங்களையே பார்த்துவணங்கும் பழக்கமிருத்தியால்உண்மையி லொருவடிவுமின்றி வியாபகத்தால் எல்லாவடிவமாகிய பரமேசுரன் இவ்வடிவாயு மிருக்கின்றனன் என்பதை மறந்து இவ்வடிவந்தான் பரமேசுரன் அதாவது பரமேசுரனுக்கு இதுவே வடிவமென்ற மனத்தடிப்புண்டாய்விடும்: ஆதலால் அது கூடாதெனில் ஒருக்காலும் அத்தகையமனத்தடிப்புண்டாகாது. பிருதிவி பூதமாகிய மண்ணின் உபக்கிரமத்தை நோக்கில் அது ஆகாயத்தை மூலகாரணமாயுடையது, அது மாயையை மூலகாரணமாயுடையது; ஆதலால் மண்ணின் அநீதம் அருவத்தன்மைகளை அவற்றிற்குக் கூறலாம். பிருதிவியின் நித்யவடிவம் பரமாணுரூபம் அதை ரூபாரூபமென்னலாம். தூலவடிவம் உருவம் இந்நான்கு தன்மைகளும் பிருதிவிக்கேற்றலாம். பிருதிவியை அடிக்கடி பார்த்தறிதலால் அதற்கு நித்தியவடிவம் பரமாணுரூபம் என்பது மறந்து தூலத்தன்மையே அதற்கு நித்தியவடிவம் என்ற நிச்சயமுண்டாகாது. இனி நம் கண்ணுக்குத் தோற்றுவதும் பற்பல நிறம் வடிவம் தன்மைகளையுடையதும் ஆயிருக்கின்ற மண்ணின் சமஷ்டியே பிருதிவி பூதம்(மண்ணுலகு). அதைத் தரை, கரை, மேடு, பள்ளம், மலை, சுவர், பானை, சட்டி, உண்டைமுதலிய வடிவங்களாகக் காண்கின்றோம். அவ்வடிவங்களனைத்தையும் மண்ணென அல்லது மண்ணின் வடிவெனக் காண்பதன்றி மண்ணின்வடிவம் சட்டியேதான்

அல்லது உண்டையேதானென்று அறிவாரொருவருமின்று. அறிவின்மிகக் குறைந்தாரும் அங்ஙனம் அறிகின்றிலர். அங்ஙனமே செயற்பாட்டுக்குத் தக்கபடியன்றி பொன்தனக்கென ஒருவடிவம் அல்லது ஆகிருதியுடையதன்று. பொன் மோதிரம், கடுக்கன், கடகம், மாலை, கடிகாரம் சங்கிலி, பவுன், பாத்திரம்முதலிய வடிவங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றது. அவற்றிலொவ்வொன்றையும் பார்ப்பவன் அவற்றைப்பொன் என்றறிகின்றனன். எத்துணைநாள் ஒரு பொன்னகையைப் பார்த்துப் பழகினும் அந்நகைவடிவந்தான் பொன்னின் வடிவம் என்றொருவனும் நினைக்கின்றிலன். ஒருவன் ஒரு பொற்சங்கிலியைக்கண்டு ஆய்ந்துழிக் கடுக்கனும், கடகமாயும், மோதிரமாயும், பாத்திரமாயும், மற்ற பணிகளாயுமிருக்கும் பொன்னே இந்தச் சங்கிலியாயுமிருக்கின்றதென்றே அறிவன். ஆதலால் அதீதமாயும் அருவாயும் சருவகாரணமாயும் சகல பூதங்களாயும் உலகாயும் உயிராயும் ஒருவமையற்றவனுயும் ஓரிடங் குறிக்கப்படாதவனுயும் பாற்பாகுபாடற்றவனுயும் உலகிற் பொருள் அல்லது வடிவம் ஒன்றன்றாயும் இவ்வடிவன் இந்நிறத்தன் இத்தகையன் என்று குறித்தற்கெட்டாதவனுயும் இருக்கின்ற பரமேசுரனுக்கு எல்லாம் வியாப்பியஸ்தானம் ஆதலால் அனைத்தும் அவன் வடிவமெனப்படுகின்றது. அதுபற்றி அவனை இவ்வடிவமும்(விக்கிரகமும்)என்றே வைதீகமதத்தவர் கண்முற்படும்வடிவை வணங்குகின்றனர்: ஆதலால்

வைதிகமதத்தவர்க்கு இலிங்கம் அல்லது விக்கிரகாராதனை யில் ஈசுரனைக்கண்டத்துவமுடையசிலையாக அல்லது ஒரு விக்கிரகமாக நினைக்கும் இழுக்குண்டாகவே மாட்டாதென் றோர்க.

தேவாரம். சு.

மண்ணீர்தீவெளிகால் வருபூதங்களாகி மற்றும்
பெண்ணோடாணலியாய்ப் பிறவாவுருவானவனே
கண்ணாருண்மணியே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதே யெனக்கார்துணை நீயலதே.

இச்சுருதி கடவூரினுள்ள சிவலிங்கப்பெருமான் மண் முதலெல்லாந்தன் வடிவாயுடைய பரமேசுரன் என்று விள க்குதல் காண்க.

இனித் திருநெல்வேலியிலிருக்குஞ் சிவன், மதுரையி லிருக்குஞ் சிவன், சிதம்பரத்திலிருக்குஞ் சிவன், காளத்தி யிலிருக்குஞ் சிவன் என்றுபல விடங்களிலிருக்கும் சிவலிங்க மூர்த்திகளை வெவ்வேறு மூர்த்திகளாக நினைந்து வழிபடு கின்றனர். அதனால் அவ்வத்தலத்திலுள்ள மூர்த்திகளை வேறு பிரித்தறிகின்றனரன்றோவெனில், வெவ்வேறிடங்களிலுள்ள வெவ்வேறுபொற்பணிகளை வெவ்வேறு பெயருடைய வெவ் வேறு வடிவமாயறியினும் அவையனைத்தையும் பொன்னே யாக வறிவதுபோல எத்தலத்தில் எப்பெயரால் எம்மூர்த்தி யாகக் கருதினும் அவையனைத்தையும் பரமேசுவரனொரு வன் வடிவமாகக் கருதுகின்றனரன்றி வேறுபொருள் வடிவ

மாகக் கருதுவாரொருவருமின்று; ஆதலால் பலவிடங்களில் பலபெயராற் கருதினும் பிரித்தறிகின்ற வேற்றுமையுணர்வு சற்று மின்றென்றோர்க.

தேவாரம்.

"பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி"
"ஏழுலகனைத்துமாகி" "எல்லாவுலகமுமானாய் நீயே"
"எங்கும் நிமிர்ந்தார் தாமே" முதலியவாக்கியங்களும்,

தேவாரம். ௩ா.

"தில்லைச்சிற்றம்பலமுஞ் செம்பொன் பள்ளி தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர், கொல்லிக் குளிரறைப் பள்ளிகோவல் வீரட்டங் கோகரணங் கோடிகாவு, முல்லைப்புறவமுருகன் பூண்டிமுழையூர் பழையாறை சத்திமுற்றங், கல்லிற்றிகழ் சீரார்காளத்தியுங் கயிலாயநாதனையே காணலாமே"

முதலிய க்ஷேத்திரக்கோவைகளும் எல்லாவடிவங்களும் சிவனொருவன் வடிவமே. எல்லா க்ஷேத்திரங்களிலுந் தரிசிக்கப்படுவன் சிவனொருவனே என்று தெளிவுறுத்தல் காண்க.

வைதிகமதத்தவர்செய்யும் ஏனைய அநுட்டானங்களும் ஈசுரத்தியானம் அடிக்கடியுண்டாக்குதற்கேதுவாயினவாகவே யிருக்கின்றன. திருட்டாந்தமாக வைதிகசைவர் மூன்று சந்திகாலங்களிலும் சூரியோதயாஸ்தமன காலங்களிலும் உண்ணற்கு முன்னும் பின்னும், தூங்கு

முன்னரும், விழித்தபின்னரும், வேர்த்தபொழுதும், குழித்தவுடனேயும், மலசலவிசர்ச்சனத்தின் பின்னரும், பாவி ரோகி நாய் பூனை எலி முதலியவற்றைத் தீண்டியபொழுதும், வெளியிற்போம்பொழுதும், பூதியணிக என்ற விதியும், ஆகாரத்தையும், ஜலத்தையும், பழத்தையும், துய்த்தற்குரிய மற்றப்பொருள்களையும், ஈசுரனைத்தியானித்து அவனுக்கற்பித்தன்றி நுகர்தல் கூடாது, அவனுக்கர்ப்பித்தன்றிப் பானஞ்செய்யக் கூடாது என்னமேலும் அவனுக்கர்ப்பித்தன்றிச் சுகந்தங்களை முகரக்கூடாது என்ற விதியும், எதைத் துய்க்கும்பொழுதும் எத்தொழில் புரியும்பொழுதும் பரமேசுரனிடத்தில் ஞாபகம் நிகழத்தூண்டுகின்றன. ஆதலால் ஒருநாள் வைகறையில் விழிப்பதுமுதல் இரவில் நித்திரை செய்யும்வரை வைதிகமதத்தவர்க் கேற்பட்டிருக்கும் ஸ்நானம், ஜபம், ஓமம், கிரியை, பூஜை, படித்தல், தானம், பிரதிக்கிரகம், உண்ணல், குடித்தல், தரித்தல், செல்லல்முதலிய சகல விவகாரங்களும் ஈசுரத்தியானத்துக்குச் சாதனமாகவே யிருக்கின்றன வென்பது தெளிவு

<u>மூர்த்தங்களைப்பற்றிய பிரமாணம் வருமாறு.</u>

இலிங்கம்

ரிக். 3. 8. 16. "तव श्रिये मरुतोमर्जयन्त रुद्र ॥ உருத்திரனே உம்முடைய விபூதி (அடைதற்)பொருட்டுத் தேவர் அருச்சிக்கின்றனர்"

பஸ்மஜாபாலம். "लिंगरूपिणं मां संपूज्य चिंतयन्ति ॥ இலிங்க வடிவமாகிய என்னை நன்கு பூஜித்துச் சிந்திக்கின் றார்கள்"

எஜுர். ஆ. அநு. 16. "हिरण्यलिंगाय नमः, दिव्यलिंगाय नमः, भवलिंगाय नमः ॥ பொன்லிங்கத்துக்கு வணக்கம் தெய்வலிங்கத்துக்கு வணக்கம், பவனாகியலிங்கத் துக்கு வணக்கம்"

உமாமகேசுரன்.

தைத்தி. 4. 6. 18 "नमो हिरण्यबाहवे, अंबिकापतय उमाप-तये ॥ வணக்கம் பொற்றோளனுக்கு——அம்பி காபதிக்கு, உமாபதிக்கு,"

தைத். 4. 6. 10. कृष्णपिंगळं । ऊर्ध्वरेतं, विरूपाक्षं, नमो नमः ॥ கருமை பொன்மை கலந்த(வடிவ)து ஊர்த்துவ ரேதசுடையது, முக்கண்ணது" (ஆகிய எல்லாவடிவ னுக்கு) வந்தனம், வந்தனம்.

கைவல்யோ. "उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशांतं । உமைதுணைவன் பரமேசுரன் இறைவன், முக்கண்ணன், நீலகண்டன், மிக்கமைதியன்"

யஜு, ருத்திரம். "नमस्सोमायच । உமையோடுகூடியவனுக்கு வணக்கம்,"

### சதாசிவன்.

தைத். "ब्रह्मशिवो मे अस्तु सदाशिवों சதாசிவமாயும் பிரணவப்பொருளாயும் இருக்கின்ற பிரமமாகிய சிவன் எனக்கு(அருளற்கு) இருக்கட்டும்."

யஜு, ருத்திரம். "सदाशिवाय च । " சதாசிவனுக்கு " இஃது வேதாகமங்களை உலகுக்கருளிய அருளை விளக்குகின்றது.

### சரபமூர்த்தி.

ரிக். "शरभाय ऋषिबन्धवे ரிஷிகளுக்குப் பிதாவாகிய சரபமூர்த்திக்கு"

### திரிபுரசம்மாரமூர்த்தி.

யஜு. சம். 6 2. 3. महापुरं जयंतीति स इषु समस्कुर्वता रुद्रः । மகாபுரம் என்றதிரிபுரத்தை ஜயித்தற்காக அவன் பாணத்தை யேற்படுத்தினன்.—ருத்திரன்."

யஜு, ருத்தி. त्रिपुरान्तकाय" முப்புரத்தை அழித்தவனுக்கு.

### காலாந்தகமூர்த்தி.

சுவே. 6. 16 "कालकालो गुणी सर्वविद्यः காலகாலன் நற்குணமுடையவன், எல்லாவித்தைகளாலு மறியப்பட்டவன்."

இஃது யமனை உதைத்து மார்க்கண்டனைக்காத்த கருணையை விளக்கி நிற்கின்றது.

## நீலகண்டமூர்த்தி.

யஜு॰, ஸ்ரீருத்திரம், नमो नीलग्रीवाय च शितिकण्ठाय च

"வணக்கம் நீலகண்டனுக்கு கறைக்கண்டனுக்கு" பரமேசுரனுக்கர்ப்பித்தன்றி யொன்றையுந் துய்த்தல் கூடாது என்பது.

ஜாபாலோ. " रुद्रभुक्तं भुंजीत, रुद्र पीतं पिब्येत, रुद्राघ्रातं जिघ्रेत மஹாருத்திரனுக்கு நைவேத்தியஞ் செய்யப்பட்ட பிரசாதத்தைப் புசிப்பாயாக, ருத்திரனுக்காராதனஞ்செய்யப்பட்ட நீர், பால் முதலியவற்றைக் குடிப்பாயாக. ருத்திரனுக்காராதனஞ் செய்யப்பட்ட சந்தனம் புஷ்பம் முதலியவற்றை முகர்ந்தனுபவிப்பாயாக." முதலிய சுருதிகளால் விளங்குகின்றது.

## ஆலயம்.

ஆலயம் = இலயிக்குமிடம். ஆன்மாக்களின் மனம் ஒடுங்குமிடம் அதாவது பலவிடங்களிற் பலவிடயங்களில் விரிந்துழன்று திரியும் மனம் ஒடுங்கித் தெய்வத்தினிடத்தில் லயிக்குமிடம். கல்விகற்கவிரும்பிய அறிவிற் சிறவாத சிறுவர் முதலில் நெடுங்கணக்கெழுத்துகளையும், முதற்பாட முதற் பல சிறுபுத்தகங்களையும், வாசித்துப்பின்னர் அரியநூல்களைக்கற்று அறிவிற்சிறந்து வித்வான்கள் ஆவர். அங்ஙனம் பயின்று விருத்தியடைதற்குச் சாதனமாகிய இடம் பாடசாலை: அவ்வாறே தெய்வபக்தியிலிளைஞர் தெய்வோபா

சனையிற் பயின்று தேருதற்குறிய பாடசாலைபோன்ற இடம் ஆலயம். பாடசாலைபுகுந்து நெடுங்கணக்குத் தொடங்கிப் படியாதவன் சாஸ்திரங்களைப்படிக்கத்தக்கவன் ஆகாதது போல இத்தகைத் தூலோபாசனைசெய்து மனம் பழகாதவன் சூக்குமோபாசனை செய்யத்தகுதியுடையவனாகான். ஒருவனுக்குத் துவக்கத்திலேயே சூக்குமோபாசனையில் மனம் பற்றுமேயானால் அவன் முன்ஜென்மத்தில் ஸ்தூலோபாசனையிற்பயின்றவனென்பது திண்ணம்.

தாயுமானவர்.

விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே.
யோகியர்க்கே ஞானமொழுங் காகுமற்றைத்
தாகியரும் யோகமுன்னே சார்ந்தோர் பராபரமே.

கைவல்யம்.

ஞாதன விவேகியுள்ளில் நுழையாது நுழையுமாகிற்,
பூதஜென்மங்கள் கோடி புனிதனும் புருடனாமே.

உலகத்தி லெல்லாமதத்திலுமுள்ள பெரும்பாகத்தார் இடைவிடாது உலக விவகாரத்தில் முயல்பவரும், சமதிருஷ்டியில்லாதவரும், விஷமதிருஷ்டி யுடையவரும், இடைவிடாது தெய்வவிசாரம் அல்லது தியானஞ் செய்யாதவரும், அந்தரங்கத்தில் மற்றையர் அறியாது பாவஞ்செய்யப் பயப்படாதவரும், தெய்வபக்தி சிறக்காதவருமா யிருக்கின்றனர். அத்தகையர் அறிவிற் குறைந்தவர் அதாவது அறிவு சிறக்காதவர் என்பதிற்றடையின்று. மேலோர் கீழோர் உயர்பொருள் தாழ்பொருள் ஈனப்பொருள் என்கின்ற பேதமின்றிஎங்

கும் பரமேசுரனை வணங்கும் சமதிருஷ்டி இச்சபையிலுள்ள உயர்தர வித்யாபட்டம் பெற்றாரும் அறிஞருமாகிய ஒருவருக்குமின்று. ஆதலால் நாமெல்லாரும் அவ்விஷயத்தில் அறிவு குறைந்தாரே. நம்மினும் உயர்ந்த படிப்பாளிகளும் விவகார ஞானமுடையாரும் பெரும்பாலும் இவ்விஷயத்தில் இத்தகையுடையராகவே இருக்கின்றனர். அத்தகையர் மேற்கூறியவாறு சிறிதுசிறிதாய்ப் பயின்று பக்திமுதிர்ந்து ஞானமடைதற்குச் சாதனமாக ஆலய வழிபாடேற்பட்டிருக்கின்றது. அத்தகையர் அகண்டபரிபூரண சச்சிதாநந்த பிரமம் அடியார்க் கருள்செய்ய ஞானத்திருமேனியோடு தோன்றியருளிய அருண்மிகுதியையறிந்து பக்திசெய்தற்கு ஞாபகசின்னமாகவே அத்தகைவடிவங்கள் அமைத்து ஸ்தாபிக்கப்பட்டுளது. இக்கருத்தையே " प्रतिमास्वप्रबुद्धानां " "பிரதிமைகளில் (தெய்வம்) சிறந்தபுத்தியில்லார்க்கு" என்று ஸ்மிருதி கூறியது. ஆதலால் உண்மையில் பிரமசொரூப விசாரஞ்செய்து உலகப்பொருள் சுகங்களில் இச்சை யொழித்து சமதிருட்டியெய்திய ஞானிகளே அறிவிற்சிறந்தாராவர் அல்லாதவரனைவரும் அறிவிற் சிறவாதவரே *ஆதலால் அன்னவர் ஆலோபாசனை செய்தலவசிய மென்பது கன்மேலிட்ட எழுத்தாகின்றது.

---

* சசிவர்ணபோதம்.

இயலறிவ திசையறிவ தினமறிவ துளவாம்
அயலறிவ தறிவதல வறிவறிவ தறிவே

இலண் அறிவு = ஒருவனுணர்த்த வுணர்தலின்றித் தானே முழுதும் அறிந்தாங்கறியும் பேரறிவாகிய பிரமம். அவ்வறிவை அறி[illegible] சிறந்த அறிவு ஏனையவற்றை அறியும் அறிவு சிறப்பில்லறிவு.

## அங்கங் கற்பித்தலின் கருத்து.

இனிப் பரமேசுரனுக்கு வடிவத்தையமைத்து வணங்குதலும் முகம் சிகை கை கால் முதலியவற்றை மனிதர்க்குப் போல கை கால்முதலியவாக நினைத்துத் தியானிக்கக் கூடாது. ஞானமே சிகை, சருவவியாபகத்துவமே முகம். இச்சா ஞானக்கிரியாசத்திகளே முக்கண்கள், வேதாந்தப் பொருளாதலே பூணூல், நான்கு வேதங்களே நாற்கால் மான், முத்தொழில் செய்பவர்க்கு மூலம் ஆதலே திரிசூலம், எல்லாம் அறியும் அறிவே சந்திரன், தருமமே இடபம் ஆகத்தியானிக்கும்படி ஆகமங்கள் விதிக்கின்றன. ஒவ்வொரு அங்கம் பிரத்தியங்கம் உபாங்கங்களும் இஃதிஃது இதை யிதைக் குறிக்கின்றன வென்பதை ஆகமங்களிற் காண்க. இன்னும் விசாரிக்கில் சோமாஸ்கந்தமுதலிய 25-மூர்த்தங்களை அல்லது 64-மூர்த்தங்களை வணங்கலில் அவனது பெருமைகளையும் அரியதன்மைகளையும், அங்கப் பிரத்தியங்கங்களாகத் தியானிக்க ஆகமங்கள் கற்பிக்கின்றனவேயன்றி அவனுக்குரிமை வடிவமொன்றுள தென்றும் அதைப்போன்ற ஒருவடிவம் அமைத்துவைத்து வணங்குகவென்றும் கற்பிப்பதாயின்று. ஆதலால் இவ்வடிவோபாசனையும் அவன் அருளையும் பெருமையையும் அறிந்து அன்பு பெருகி யுய்யச்செய்தற்குச் சாதனமாகவே யுபயோகப்படுகின்றது. வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம் முதலியமத

சம்பந்த ஆலயங்களும் இவ்வாறே பரமேசுரனை அவ்வம் மூர்த்தி வடிவமாக வுபாசித்தற் குபயோகப்படுகின்றன.

ஈசுவரன் இவ்வடிவினன் இவ்வண்ணத்தன் என்று (அவனுக்குரிய வடிவமிது என்று) ஒருவடிவங் குறிக்கக் கூடாதபடி எல்லா வடிவினன். ஒருவன் இளமைப் பருவத்தில் காமமுண்டாகாமைபற்றி அதன் இன்பம் இனைத்தெனை அறியாமையால், காமம் நுகர்கின்ற ஆடவர் காமக்கிளத்தியரை முத்தமிடல், முகர்தல், ஆலிங்கனஞ்செய்தல், அவர் சல்லாபத்தின் மகிழ்தல் முதலியவற்றைப் பார்த்து இச்செயல்கள் பயனற்றன, அறிவின்றி மாம்சப்பகுதிகளை ஸ்பரிசித்தல் முகர்தல் முதலியவற்றால் மகிழ்கின்றனன் என்று கூறுகின்றனன். பருவமெய்திக் காமாநுபவ வின்பமுணர்ந்தவன் அவற்றால் சுகமடைகின்றனன். அங்ஙனமே விக்கிரகோபாசனையின் கருத்தையும் பயனையும் விசாரித்து உண்மைப் பக்தியோடு அவ்வுபாசனையிற் பயில்வார் பிறவிடங்களில் மனஞ்செல்லாது நிற்றல், விக்கிரகவடிவங்களால் ஈசுரன் அடியவர்க்கருளிய கருணை ஞாபகத்துக்கு வந்து அவ்வாறு தமக்கும் அருளவேண்டி மனம் பரமேசுரனிடத்து நிகழ்தல், மனம் இந்திரிய விடயங்களாகிய உருவம் ஒலி முதலியவற்றை அல்லது மானதசங்கற்ப வடிவங்களைப்பற்றியன்றி நிகழாதாதலால் நேத்திரேந்திரியத்துக்கு விடயமாகிய அழகிய வடிவத்தைப்பற்றி நிலைத்துப் பரமேசுரனை நினைத்தல், அவனிடத்துப் பக்திபெருகல் முதலியவற்றால் மன

மொருமைப்பட்டு தெய்வசிந்தனையில் தேருவர். அங்ஙனம் பயின்றநுபவித் தறியாதவர் விக்கிரகத்தில் தெய்வத்தை வணங்கல் கூடாது அங்ஙனம் வணங்குவது கடவுளின் சருவ வியாகபத்தன்மையை மறந்துபோதற் கேதுவாகின்றது என்பது முதலிய வீண் அறியாமை வாதங்களைக் கூறுகின்றனர்.

விக்கிரகாராதனையின் கருத்தை யுணர்ந்து உண்மைப் பக்தியோடும் அதற்குரிய விலக்கணங்களோடும் விக்கிரகத்திற் பரமேசுரனை வணங்குபவர் அதனாலுண்டாம் பயனையும் மனோசுகத்தையும் நன்கு அடைந்து மகிழ்கின்றனர்.

பரமேசுரனுக்கு ஒருவடிவம் (விக்கிரகம்) குறிக்கமுடியாது. ஆதலால் வைதிகசமயத்தவர் விக்கிரகாராதனம் என்பது அவன் வடிவம்போன்ற ஒருவடிவத்தை வணங்கல் என்ற கருத்தாலல்ல எல்லாவடிவு மவனதாய் அவனுக்கந்நியமாய் ஒரு வடிவின்மையால் அவனை அவன்வடிவத்தில் வணங்குதல் என்ற கருத்தாலாம். இந்நான்குவகை உபாசனைகளையுஞ் சங்கிரகித்து,

अग्नौ देवो द्विजातीनां ऋषीणां हृदि दैवतं । प्रतिमास्वप्रबुद्धानां सर्वत्र समदर्शिनां ॥

(இ-ள்) தெய்வம் இருபிறப்பாளர்க்கு அக்கினியில் (இதில் மூர்த்தங்களி லுபாசித்தலாகிய ஸ்தூலோபாசனை சங்கிரகிக்கப்பட்டது.) இருடிகளுக்கு இருதயத்தில் தெய்வம் (இதில் அதீதம், அரூபம், ரூபாரூபம், ஆகிய சூக்கு

மோபாசனைகள் சங்கிரகிக்கப்பட்டன.) விக்கிரகங்களில் சிறந்த புத்தியில்லாதவர்க்கு (கண்டஸ்தாலோபாசனை) சமதிருட்டியுடையார்க்கு எங்கணுந் தெய்வம் (அகண்டஸ்தாலோபாசனை = விசுவரூபோபாசனை) என்று ஸ்மிருதி கூறுகின்றது. இந்நான்குதன்மைகளுமுடைய பொருளொன்றேயாதலால் வணக்கஞ்சொல்லுமிடங்களில் நான்குதன்மைகளையும் கலந்து நூல்கள்கூறித் தோத்திரிக்கின்றன.

தைத். 4, 12, 1 " ऋतं सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिंगळं ।
ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमः ॥

வாய்மை உண்மையது (அதீதம்) மேலாம் பிரமம் (எங்குஞ் செறிந்தது) (அருவம்) புருடன் கருமைபொன்மை கலந்த வடிவது, உயர்வெண்பாலது, முக்கண்ணுடையது (ரூபாரூபம்) ஆகிய எல்லாவடிவன் (உருவம்) பொருட்டு வணக்கம்.

தேவாரம். நா.

அரியானை (அதீதம்) அந்தணர்தஞ் சிந்தையானை அருமறையினகத்தானை அணுவை (அருவம்) யார்க்குந் தெரியாததத்துவனைத் (அதீதம்) தேனைப்பாலைத் (உருவம்) திகழொளியைத் தேவர்கடங் கோனை (ரூபாரூபம்) மற்றைக் கரியானை நான்முகனைக் கனலைக்காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற பெரியானைப் (அருவம்) பெரும்பற்றப் புலியூரானைப் (உருவம்) பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.

## தாயுமானவர்.

அங்கிங்கெனுதபடியெங்கும்பிரகாசமா யாநந்தபூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாம்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த் தழைத்ததெது
(அருவம்)மனவாக்கினிற்
றட்டாமனின்றதெது (அதீதம்) சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மென்றெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது (ரூபா
ரூபம்)எங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா யென்றைக்குமுள்ளதெது(அருவம்) மேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெது(அதீதம்)வது கருத்திற்கிசைந்ததது வே
கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்(உருவம்),
கருதியஞ் சலிசெய்குவாம்.

திருமந்திரம். ஞானலிங்கம். "உருவுமருவு முருவோடருவும்
மருவு பரமசிவன்."

சிறப்புப்பாயிரம். 32 " தாவுபிரான் றன்மைதானறிவா
ரில்லை"

## கிறிஸ்துவர்.

யாத்திராகமம். 25, 35, 36, 37, 40-வது அதிகாரங்களில் யேகோவா விதித்தபடி மோசே ஆலயங்கட்டி அதில் சாட்சிப்பெட்டியும் அதின்மேல் மத்தியில் பொன்னால் கிரு

பாசயமும், இருபக்கங்களிலும் கெரூபிகளென்ற விக்கிர கங்களும்செய்து அமைத்து, அந்தப்பெட்டிக்குட் சாட்சிப் பத்திரத்தை வைத்துப் பிரதிஷ்டைபண்ணி அந்தப்பெட்டிக்கு ஆராதனைசெய்துவந்தன ஆரோனும் அவன் ஸந்ததியாரும் தலைமுறைதோறும் . அதை ஆராதனைசெய்து வந்தனர் என்ற விபரங்கள் கூறப்படுகின்றன. அவ்வாராதனையில் அபிஷேகம் தூபம் தீபம் தந்து தோத்திரஞ்செய்து பலிகாணிக்கைகள் செலுத்திவந்ததாக வெளிப்படுகின்றது.பொன் ஆடு மாடு வஸ்திரம் இரத்தினம் ஆபரணம் முதலியன காணிக்கையாக ஆலயத்திற்செலுத்தப்பட்டன. சாட்சிப்பெட்டி ஆவுடையாரையும் கிருபாசனம் இலிங்கத்தையும் சாட்சிப் பத்திரம் இலிங்கத்தடியில் வைக்கும் மந்திரங்களடங்கிய எந்திரத்தையும் ஒத்தன ஆதலால் அது சிவலிங்க ஆராதனைபோன்றது. கிறிஸ்துவரிற் சிலவகுப்பார் இப்பொழுது அவ்வாராதனைகளை விடுத்து ஆலயத்தில் சிலசடங்குகளை மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

கத்தோலிக்கிறிஸ்தவர் ஏசு மரியம்மை முதலியவிக்கிரகங்களை ஆலயத்தில்வைத்து வணங்கிவருகின்றனர். சில விடங்களில் இரதோற்சவ முதலிய விழாக்களுஞ்செய்துவருகின்றனர்.

## முகம்மதியர்.

மக்காவில் முகம்மதுநபிபெருமானின் சமாதியை வணங்குகின்றனர். சுவர்க்கத்திலிருந்து வந்ததாய்க் கூறப்படுமொருகல்லை முத்தமிட்டு வணங்கிவருகின்றனர்.நாகூர் மீரா

சா ஆலயத்தில் தூபம்தந்து சருக்கரை நிவேதனம் செய்து அவாசமாதியை வணங்கிவருகின்றனர். பத்து நோன்பில் பீர் என்ற கைபோன்ற பொன் வெள்ளிகளாற்செய்த வடிவங்களைவைத்து தூபநைவேத்யங்கள் செய்து வணங்கி வாத்தியங்களுடன் அவ்வடிவங்களை வியானம் குதிரைமுதலிய வற்றில் எழுந்திருந்துச்செய்து விழாவியற்றி வருகின்றனர்

இனி வைதிகமதத்தவர் ஆலயவழிபாட்டி னுண்மைக் கருத்தைச் சற்று விசாரிப்பாம.

## ஆலயதத்துவம்.

### அண்டாலயம்.

சருவப் பிரபஞ்சங்களையும் வியாபித்துத் தனதுசரீரமாய் அல்லது வியாப்பியஸ்தானமா யுடைமையால் பரமேசுரன் விசுவரூபன் என்னப்படுகின்றனன். அங்ஙனம் அவன் இருத்தற்கிடமாம் சருவப்பிரபஞ்சமும் அண்டாலயம் என்னப்படும் இதுவே விராட்புருட வடிவம். விசுவரூபோபாசகர்க் கிவ்வாலயம் பயன்படுகின்றது.

### பிண்டாலயம்.

விராட்புருடன் அல்லது அண்டத்தைப்போல சுத்த மாயாஜன்னியமான வாக்காதிகளும், அசுத்த மாயாசம்பந்தமான சூக்குமஸ்தூலபூதஜன்னியமாகிய சூக்குமஸ்தூல தத்துவங்களும், நிறைந்துளதாய், ஆராதாரமுதலிய தேவதாஸ்தானங்களை யுடையதாய், கண்ட பஞ்சகிருத்தியங்கள் நிகழுமிடமாய், சகலதேவதாமூர்த்தங்களை நியமிக்கு மங்கங்களு

டையதாய், பரமேசுரனை சாக்ஷாதுபாசனை செய்தற்குரிய முக்கியஸ்தானமாய், பிண்டமாயிருத்தலால் ஜீவசரீரமனைத்தும் பிண்டாலயமென்னப்படும். நால்வித வுபாசனை செய்தற்குமிது பயன்படுகின்றது. அதீதமுதல் மூன்றுமிதிற் ஜீவன்செய்வன. உருவம் இதையே சிவமாய்ப் பாவிப்பது.

இதிலிருக்கும் லிங்கம் ஆன்மா. அவ்விலங்கத்தி லுபாசிக்கம்படும் ஆன்மாந்தரியாமி பரமேசுரன். பிண்டாலயம் அண்டம் போல்வதாகலின் அதில் அண்டத்திலுள்ள பூதங்கள் சுடர்கள் பொருள்கள் தேவதைகள் அனைத்தையும் நியசித்து அண்டம்போற் பாவித்தலுமுண்டு.

உலகில் தெய்வோபாசனைக் குரிமைபூண்ட ஜீவர்களிற் சிறந்த இனத்திற் பட்டமனிதர் செய்யத்தக்க தேவோபாசனைகளிற் சிறந்தன ஞானம் (அதீதம்) யோகம் (அருவம் ரூபாரூபம்) பற்றிய உபாசனைகள். இவ்வுபாசனைகள் பக்தன் சரீரத்திலுள்ள ஆராதாரங்களிலும் அப்பாற்பட்ட சகஸ்ராரத்திலும் செய்யத்தக்கன. ஆதலால் அவ்வுபாசனைகள் செய்தற்கிடமாகிய உடல் தேகாலயம், சராலயம், நடமாடுக்கோவில், என்னவும்படும். இத்தேகாலயத்தில் மகாமண்டபஸ்தனமாகிய மார்பிலுள்ள உள்ளக்கமலாலயத்திற் செய்யு உபாசனை தகரோபாசனை யென்னப்படும். சீவசரீரத்தை சிவசரீரமாகப் பாவித்தல் சகளீகரணம். ஜீவனைச் சிவமாக பாவித்தல் சோஹம்பாவனை,

மனிதசரீரத்தில் ஆராதாரங்களிலும் அப்பாற்பட்ட மீதானமாகிய துவாதசாந்தத் தலத்திலும் செய்யப்படும் யோகஞான உபாசனைகள் உபாசகன் சித்தபரிபாகத்துக்குத் தக்கபடி பலவகைப்படும். அவற்றுள் பரமேசுரனுக்கு ரூபாரூபசிந்தனை கலந்த யோகமாகிய அந்தரியாகம், இருதயம் புருவமையம் (விந்துஸ்தானம்=ஆக்ஞை) சகஸ்ரதளபத்மம்(துவாதசாந்தம்) என்ற மூவிடங்களிலுஞ்செய்யப்படும். இவ்வுபாசனா பேதங்களெல்லாம் அந்தர்ப்பூஜை (உள்வழிபாடு) என்னப்படும். இவைகட்குச் சாதனமாயும் அறிகுறியாயும் ஆத்மார்த்தமாய் (தன்பொருட்டு) இஷ்டமான விடத்திற் செய்யப்படுவதும் பரார்த்தமாய் ஆலயங்களிற் செய்யப்படுவதுமாகிய உபாசனைகள் பகிர்ப்பூஜை (புறவழிபாடு) எனப்படும். அந்தரியாகம் மானதபூசை யென்னவும்படும். இவ்வந்தரியாகமியற்றியே அதற்கறிகுறியாகிய புறப்பூஜை யியற்றவேண்டு மென்பதுவிதி, அந்தரியாகத்திற்றேர்ந்தார்க்குப் புறப்பூஜை அத்தியாவசியமன்று. இகழத்தக்கதுமன்று. அந்தரியாகத்திலும் பகிர்ப்பூஜையிலும் பயின்றுவந்து முதலிற் பகிர்ப்பூஜையில் மனம் நிலைத்துப் பின் அந்தரியாகத்தில் மனம் நிலைக்கப்பயின்ற பின்னரே பகிர்ப்பூஜை யவசியமற்றதாம். அங்ஙனம் அந்தரியாகத்திற் றேரினுருக்கும், பகிர்ப்பூஜை பகிர்முகப் பட்டகாலத்தில் மனம் வேறுவிடங்களிற் செல்லாது தடுத்தற்குஞ் சாதனமாகின்றது. ஆதலால் பகிர்ப்பூஜை கொள்ளத்தக்கதேயாம். புறப் பூ

ஜைகுறிக்கும் அந்தரியாகத்திற் சிலவிதம் இவண் கூறுதும்.

## அந்தரியாகம்—அந்தர்யஜனம்.

மனதினாற் பாவிக்கப்பட்ட இருதயகமலமென்ற ஆலயத்தில், அக்கமலத்தின் கர்ணிகையென்ற கிரியாசத்தியாகிய பீடத்தில், பரநாதத்தை வடிவமாயுடைய ஞானமாத்ரமான பிரமத்தை லிங்கமாகப் பாவனைசெய்து தாபித்து, மூலக்கனலைப் பிரமரந்திரமாகிய சந்திரமண்டலத்திற் செலுத்தி, அச்சந்திரமண்டலத்தில் சுசும்நாநாடியாகிய கலசத்திலிருந்து பெருகுகின்ற அமிர்தமாகிய பாலாலும் இகலோகபரலோக சுகங்களில் நிராசைசெய்யும் வைராக்கியமாகிய சந்தனத்தாலும் அபிஷேகஞ்செய்து, அஹிம்சை இந்திரிய நிக்கிரகம் சாந்தி தயை ஞானம் தவம் சத்யம் சத்பாவம் ஆகிய அட்டபுஷ்பங் களாலர்ச்சித்து, மனமாகிய பாத்திரத்தில் பிராணன் ஆகிய அக்கினியில் அகங்காரமாகிய பொருள் புகையச்செய்கின்ற ரேசக பூரக கும்பக ரூபமான பிராணாயாமமென்ற தூபந்தந்து, புத்திபிரகாசித்தலாகிய தீபாராதி சமர்ப்பித்து, பாகியவிஷயங்களிற் செல்லும் இந்திரியங்களை அங்ஙனஞ் செல்லாதிழுத்து உண்முகப்படுத்துகின்ற பிரத்தியாகாரமென்னும் சோமஹவிசை(அதாவது பாகியவிருத்திகெட்டு மனத்தை உண்முகப்படுத்தலாலுண்டாம் சுகமாகிய அமிர்த ஹவிசு என்னும் பாயசத்தை)நிவேதித்து, பிராணன் இடைபிங்கலைகளிற் செல்லலையொழித்துச் சுழுமுனையிற் செலுத்தலாகிய செபஞ்செய்து, மூலாதார சுவாதிஷ்டான மணிபூரக அநாகத விசுத்தி ஆக்ஞையென்ற ஷடாதார கம

லங்களில் மனதை நிறுத்தி அவற்றில் அவ்வம்மூர்த்திகளைத் தாபித்துத் தாரணைசெய்து, அம்மூர்த்திகளைக் காரணமூர்த்தியிலொடுக்கிச் சருவகாரணனாகிய பரம்பொருளைச் சத்தியனும் பரப்பிரமமும் புருடனும் சத்தியோடு கூடினவனும் ஊர்த்துவரேதனும் விருபாக்கனும் விசுவரூபனும் ஆகத்தியானிக்கின்ற தியானமாகிய ஆபரணங்களா லலங்கரித்து, சோஹம் பாவனையாற் சமரசபாவமடைந்த ஜீவன் அணுவாகிய தன்னையே நிவேதனமாகச் சமர்ப்பித்து, பரிவாராதனஞ்செய்க.

அந்தர்ஹோமம் (அக்கினி காரியம்.)

நாபிஸ்தானத்திலிருக்கும் (ஜாடராக்கினியாகிய) அக்கினிகுண்டத்தில் பரமேசுரவடிவமான (தியானமாகிய) அக்கினியில் சந்திரமண்டலத்திலிருந்து பெருகுகின்ற அமிர்தமாகிய ஆஜ்யத்தால் ஹோமஞ்செய்து.

சமாதி.

நாதந்தோன்றுங் கந்தங்களாகிய இருதயாகாசம் விசுத்தாகாசம் புருவமத்தியாகாசஸ்தானங்களைக்கடந்து, ஊர்த்துவகந்த மென்னும் பிரமரந்திரமாகிய சிவஸ்தானத்தைப் பிராணன் அடைந்தபொழுதுண்டாகின்ற நாதசிகையால் அதாவது நாதாநுசந்தானத்தால் சித்தவிலயமுண்டாகித்தற்போதமிழந்து நாதமயமாய்ப் பவித்தலால் பிரமரந்திரத்துக்கு மேலுள்ள பரமாகாசஸ்தானத்தில்(பரநாதவடிவமாகிய) சருவவியாபகமான(சுவபரப்பிரகாச சருவசாக்ஷியாகிய)சிவ

ஜோதியில் இரண்டற்று நின்று பரமானந்தமாகவே அறிந்து ஞானநந்தமயமாய் விளங்கலாகிய சமாதிசெய்க.

இதன் கருத்து.

இகபரவைராக்கியமெய்தி, இயமநியம ஆசனப்பிராணாயாம பிரத்தியாகார தாரணைகளையடைந்து, இதயகமலத்தில் பரநாதவடிவமான ஞானமய லிங்கத்தைச் சிந்தித்து, அதில் அப்பரம்பொருளை கிருஷ்ணபிங்களன் ஊர்த்தவரேதன் விரூபாக்கன் என்ற வடிவமாகத் தியானித்து, பிரமரந்திரத்தையடைந்து அங்குண்டாம் சந்திராமிர்தத்தைப் புசித்து, அவண்டோன்றும் நாதாநுசந்தானஞ்செய்து, அதில் லயித்துத் தற்போதமிழந்து பரமாகாச ஸ்தானத்திலுள்ள சுவபரப்பிரகாச ஜோதியில் இரண்டற்று அதுவாய் விளங்குதலாகிய சமாதிசெய்தல் வேண்டுமென்பது.

இக்கருத்தை பூஜாஸ்தவம் அந்தர்யாகம்.

(1) हृत्पद्माख्य शिवालये मनसिजे तत्कार्णि काख्ये क्रिया ।
पीठे ज्ञानमयं विशुद्धमनसा संस्थाप्य नादात्मना ॥
लिंगं तच्च सुधामयेन पयसा संस्नाप्य सम्यक् पुनः ।
वैराग्येण च चंदनेन वसुभिर्पुष्पै राहिंसादिभिः ॥ १ ॥

(2) प्राणायामभवेन धूपविधिना चिद्दीप दानेनयः ।
प्रत्याहार मयेनसोम हविषा सौषुम्नजापेनच ॥

तच्चित्ते बहुधारणाभि रमलध्यानो द्भवैर्भूषणै ।
स्तत्साम्याणु निवेदनेन यजते धन्यस्स एवामलः ॥ २ ॥
(3) चन्द्रस्राव सुधामयेन हविषानाभिस्थ कुण्डेनलं ।
सन्तर्प्येशमयं शिवास्पद गतव्योम्निस्थिते सर्वगे ॥
कन्दोद्भूत शिवाणुनाद शिखया प्रत्यात्मसंवेदनं ।
शैवेज्योतिषियः करोतिपुरुषो मुक्तस्सएवाक्षयः ॥ ३ ॥

பதவுரை.

(1) மனதாற் செய்யப்பட்ட, இருதயகமலமென்ற சிவாலயத்தில், அதன் கர்ணிகையென்ற கிரியா(சத்தி)பீடத்தில், பரிசுத்தமான மனதால் நாதவடிவாகிய ஞானமயமான லிங்கத்தைத் தாபித்து, அதை அமிர்தமயமாகிய பாலாலும் மறுபடி நன்றாய் வைராக்கியமாகிய சந்தனத்தாலும் அபிஷேகஞ்செய்து, அஹிம்சைமுதலிய அட்டபுஷ்பங்களாலும்.

(2) பிராணாயாமத்திலுண்டாகிய தூபத்தாலும், புத்தியாகிய தீபத்தாலும், பிரத்தியாகாரமாகிய சோமஹவிசாலும், சுழுமுனையாகிய ஜபத்தாலும், அச்சித்தத்திற் செய்யும் பலதாரணங்களாலும், நிர்மலமான தியானத்திலுண்டான ஆபரணங்களாலும், அதற்குச்சமமான அணுவின் நிவேதநத்தாலும் எவன் பூசிக்கின்றனனோ அவன் செல்வவான் மலரகிதன்.

(3) சந்திரனினின்று பெருகுகின்ற அமிர்தமயமான நெய்யால், நாபியிலிருக்கும் குண்டத்தில் ஈசுவரவடிவமான

ஜோதியில் இரண்டற்று நின்று பரமானந்தமாவையே அறிந்து ஞானாநந்தமயமாய் விளங்கலாகிய சமாதிசெய்க.

### இதன் கருத்து.

இகபரவைராக்கியமெய்தி, இயமநியம ஆசனப்பிராணாயாம பிரத்தியாகார தாரணைகளையடைந்து, இதயகமலத்தில் பரநாதவடிவமான ஞானமய லிங்கத்தைச் சிந்தித்து அதில் அப்பரம்பொருளை கிருஷ்ணபிங்களன் ஊர்த்தவரேதன் விரூபாக்கன் என்ற வடிவமாகத் தியானித்து, பிரமரந்திரத்தையடைந்து அங்குண்டாம் சந்திராமிர்தத்தைப் புசித்து, அவண்டோன்றும் நாதாநுசந்தானஞ்செய்து, அதில் லயித்துத் தற்போதமிழந்து பரமாகாச ஸ்தானத்திலுள்ள சுவபரப்பிரகாச ஜோதியில் இரண்டற்று அதுவாய் விளங்குதலாகிய சமாதிசெய்தல் வேண்டுமென்பது.

இக்கருத்தை பூஜாஸ்தவம் அந்தர்யாகம்.

(1) हृत्पद्माख्य शिवालये मनसिजे तत्कार्णि काख्ये क्रिया ।
पीठे ज्ञानमयं विशुद्धमनसा संस्थाप्य नादात्मना ॥
लिंगं तच्च सुधामयेन पयसा संस्नाप्य सम्यक् पुनः ।
वैराग्येण च चंदनेन वसुभिर्पुष्पै राहिंसादिभिः ॥ १ ॥

(2) प्राणायामभवेन धूपविधिना चिद्दीप दानेनयः ।
प्रत्याहार मयेनसोम हविषा सौषुम्नजापेनच ॥

तच्चित्ते बहुधारणाभि रमलध्यानो द्भवैर्भूषणै ।
स्तत्साम्याणु निवेदनेन यजते धन्यस्स एवामलः ॥ २ ॥
(3) चन्द्रस्राव सुधामयेन हविषानाभिस्थ कुण्डेनलं ।
सन्तर्प्येशमयं शिवास्पद गतव्योम्निस्थिते सर्वगे ॥
कन्दोद्भूत शिवाणुनाद शिखया प्रत्यात्मसंवेदनं ।
शैवेज्योतिषियः करोतिपुरुषो मुक्तस्सएवाक्षयः ॥ ३ ॥

பதவுரை.

(1) மனதாற் செய்யப்பட்ட, இருதயகமலமென்ற சிவாலயத்தில், அதன் கர்ணிகையென்ற கிரியா(சத்தி)பீடத்தில், பரிசுத்தமான மனதால் நாதவடிவாகிய ஞானமயமான லிங்கத்தைத் தாபித்து, அதை அமிர்தமயமாகிய பாலாலும் மறுபடி நன்றாய் வைராக்கியமாகிய சந்தனத்தாலும் அபிஷேகஞ்செய்து, அஹிம்சைமுதலிய அட்டபுஷ்பங்களாலும்.

(2) பிராணாயாமத்திலுண்டாகிய தூபத்தாலும், புத்தியாகிய தீபத்தாலும், பிரத்தியாகாரமாகிய சோமஹவிசாலும், சுழுமுனையாகிய ஜபத்தாலும், அச்சித்தத்திற் செய்யும் பலதாரணங்களாலும், நிர்மலமான தியானத்திலுண்டான ஆபரணங்களாலும், அதற்குச்சமமான அணுவின் நிவேதனத்தாலும் எவன் பூசிக்கின்றனனோ அவன் செல்வவான் மலரகிதன்.

(3) சந்திரனினின்று பெருகுகின்ற அமிர்தமயமான நெய்யால், நாபியிலிருக்கும் குண்டத்தில் ஈசுவரவடிவமான

அக்கினியில் திருப்திசெய்து, சிவத்துக்கிருப்பிடமாகிய ஆகாயத்தில் இருக்கின்ற, சருவவியாபகமுள்ள சிவஜோதியில் கந்தத்திற் றோன்றுகின்ற சிவானுபூத சிகையால், பரமான்மாவைமாத்திரம் அறிதலே யெவன் செய்கின்றானோ அந்தப் புருடன் (பாசங்களினின்று) விடுபட்டவன், அவனே நழுவாதவன் என்ற சுலோகங்களிற் காண்க.

### வேறு. அந்தரியாகம் 2.

பாகியவிஷயங்களிற் செல்லாது உள்முகப்படலாகிய தேகாலயப் பிரவேசஞ்செய்து, காமம் வெகுளி மயக்கம் பொய்முதலிய துர்க்குணக்குப்பைகளை நீக்கலாகிய திருவலகிட்டு, தத்துவவிசாரமாகிய சாணத்தை அன்பாகிய நீர்கலந்து அதை எங்கும் உபயோகித்தலாகிய திருமெழுக்கிட்டு, பகவத் கல்யாணகுண கணங்களையும், அவன் அருள்வடிவங்களையுஞ் சிந்தித்தலாகிய அனந்த விபூதியென்னும் பரிவார தேவதாவணக்கஞ் செய்துகொண்டு, மூலாதார சுவாதிஷ்டான மணிபூரக அநாகத விசுத்தி ஆக்ஞையென்ற துவஜமண்டபம் நிருத்தமண்டபம் மணிமண்டபம் மகாமண்டபம் அர்த்தமண்டபம் அந்தராளமண்டபங் களைக்கடந்து சென்று, சகஸ்ரதளபத்மமாகிய விமானகமல மத்யமென்னும் கர்ப்பக்கிரகத்தை யடைந்து, அறிவை மறைக்கின்ற அகங்கார மமகாரமென்ற கதவுகளை நீக்கலாகிய திறத்தலைச்செய்து, மனமாகிய தகழியில் அறிவாகியநெய் நிறைத்து, உயிரென்னுந்திரியில் ஞானமென்னும் விளக்கேற்றி, அஞ்ஞான

இருளாகிய திரையை நீத்து, முப்பத்தாறு தத்துவங்கள் நீங்கலாகிய பூதசுத்தி, சிவதத்துவ மாக்கலாகிய தலசுத்தி, இந்திரியம் அந்தக்கரணம் குணம் வாயுக்கள் மும்மலங்கள் ஜடம் இவைகளில் வியாபிக்கும் ஜீவான்மா சிவம் எனப் பாவித்தலாகிய ஆன்மசுத்தி, தன்னைச் சிவமாகவும் தன் பார்வையைச் சிவன்பார்வையாகவும் கொண்டு பார்த்தலாகிய திரவியசுத்தி, பரமேசுரனுக்கு ஞானமே திருமேனியென்றறிதலாகிய இலிங்கசுத்தி என்ற பஞ்சசுத்திகளைச் செய்து,

ஆநந்தரூப பராசக்தியாகிய பீடத்தில் சின்மாத்திரமாகிய இலிங்கத்தில், அவன் சருவபரிபூரணனென்று நிச்சயித்தலாகிய ஆவாஹநமும், அவ்வறிவு நிலைத்தலாகிய தாபனமும், இவன் அறிவு சிவன் பூரணத்திலும் அவன் பூரணத்துவம் இவனறிவிலும் வேறின்றி அந்நியோந்நியமாய்க் கலந்திருத்தலாகிய சந்நிதானமும், இவனறிவு வேற்றிடஞ் செல்லாது ஒழிவின்றி அவனிடம் நிலைத்தலாகிய சந்நிரோதனமும் புரிந்து, விஷயக்ஷயமாகிய அவகுண்டனஞ்செய்து லக்ஷியத்தில் நிலைத்தலாகிய முத்திரையீய்ந்து, பிரமரந்திரத்தில் சுழுமுநாநாடியாகிய கலசத்திலிருந்து பெருகுகின்ற சந்திராமிர்தமாகிய பாலால் அபிஷேகித்து வைராக்கியமாகிய சந்தனம்பூசி, மனதின் நிர்மலத்தன்மையாகிய பச்சைக் கற்பூரஞ்சாத்தி, பக்தியாகிய புஷ்பமாலை புணர்த்தி,

## சொரூபத்தியானம்.

சருவகாரணனாகிய பரம்பொருளுக்கு (அங்கம், பிரத்

தியங்கம்) ஞானரூபத்துவம்--சிகை சருவவியாபகத்துவம்-முகம், இச்சாஞானக் கிரியாசத்திகள்—முக்கண், அருட்சத்தி—இதயம், ஆன்மா அகங்காரமமகாரம் நீங்கத் திருவருள்ஞானம் பிரகாசித்து நிற்றல்--திருவடி, (உபாங்கம்) பராநந்தனெனல்—திருமுடி, வேதாந்தப்பொருளாதல்-பூணூல், சருவஞ்ஞத்துவம்—சந்திரபூஷணம், தருமமனைத்துக்கு மிறையவனெனல்-இடபம், திரோபவிப்பவன்தானெனல்—பரிவட்டம், (சாங்கம்) வேதங்களுக்கு நாதனெனல்—நாற்கான்மான், மும்மூர்த்திகளுக்கு மூலந்தானெனல்-திரிசூலம் லயத்தானமா யுள்ளவன்தானெனல்—மழு, ஜனனவேரையறுப்பவனெனல்—வாள், ஒருவராலுங் கெடுக்கப்படாதவனெனல்—வச்சிரம், மாயையை வடிவாயுடையனெனல் — பாசம், சுத்தாசுத்த அத்துவாவை முயற்றுபவன்தானெனல் தமருகம், குண்டலிசத்தியை விரித்தல் ஒடுக்கலால் பிரபஞ்சத்துக்கு நிமித்தகாரணந்தானெனல்-சர்ப்பம், நாதமயமாயிருப்பவன்தானெனல்—கண்டாமணி, சங்கல்ப விகல்பமாகிய மனோதத்துவத்தை நடத்துபவன்தானெனல்-நீலோற்பலம், சருவபூதங்களையும் அடக்கியாள்பவன்தானெனல்-அங்குசம், ஆன்மாக்கள் பாசத்தை யெரித்துக் காப்பவன்தானெனல்-அக்கினி, ஆன்மாக்களுக்குக் கன்மத்துக்குரிய போகமுத்திகளைக் கொடுப்பவன்தானெனல்-வரதக்கை, ஜனனமரண பயந்தீர்ப்பவன்தானெனல்-அபயக்கை, எல்லவரையுங்

தன்னுள்வைத்துக்காப்பவன் தானெனல்-கவசம் சருவசங்கா ரப் பெருமையுடையவன் தானெனல்--அத்திரம், ஓங்காரப் பொருள்தானெனல்—கொன்றைமாலை, என்று அங்கப் பிர த்தியங்க உபாங்கசாங்கங்களைக் கற்பித்து தியானித்தலா கிய ஆபரணங்களா லலங்கரித்து,

அஹிம்சை இந்திரியநிக்கிரகம் சாந்தி தயை ஞானம் தவம் சத்யம் சம்பாவம் என்ற அட்டபுட்பங்களா லருச் சித்து, பாகியவிருத்திகள்புரைய கும்பகத்தால் மூலக்கனலை யெழுப்பிப் பிரமரந்திரத்தில் பிராணவாயு வடையச்செய்த லாகிய தூபங்கொடுத்து, பிராணன் பிரமரந்திரத்திலடைத லாற் றோன்றுகின்ற சிணு, சிணு சிணு ஓசை, மணியோசை, சங்கநாதம் வீணாநாதம் தாளநாதம் வேணுநாதம் பேரிநா தம் மிருதங்கநாதம் மேகநாதம் என்ற தசநாதங்களாகிய வாத்தியங்களை முழக்கி, பிரமரந்தரத்தில் மனம் நிலைத்த லாற் றோன்றுகின்ற ஆன்மப்பிரகாசமாகிய மின்மினி மின் னல் தீபம் பந்தம் சூரியன் சந்திரன் முதலியவற்றைப் போல் விளங்குகின்ற தீபாரார்த்தி தந்து,

பிரமரந்திரத்திற் றோன்றும் நாதத்தில்லீனமாகித் தற் போதமிழந்து செய்கின்ற ஆன்மார்ப்பணமாகிய நைவேத் யம் புரிந்து, ஞானப்பிரகாசமாம் அவனடியிற் சார்தலாகிய பாத்யமும், அவன்றிருவருளிற் சார்தலாகிய ஆசமனமும், அவன் ஆநந்தத்தில் மூழ்கலாகிய அருக்கியமும் சமர்ப் பித்து,

பிருதிவி அப்புத்தேஜசு வாயு ஆகாசவடிவமான சகல தூலசூக்குமப் பிரபஞ்சங்களும் அவன்மயமாயினவே என்று பார்க்கின்ற பார்த்திவம் ஆப்பியம் தைஜசம் வாய்வியம் வைஹாயசம் ஆகிய பஞ்சோபசாரங்களையு மியற்றி,

தியேயன் தியாதாவென்கிற தோற்றம் நீங்கிச், சகல விருத்திகளும் நழுவித் தியேயப் பொருளாகிய நிர்விகல்பப் பிரமாகாரமாகவே யாகி யதிலழுந்தி யதீதப்பட்டு, நிலைத்தலாகிய பரப்பிரம தரிசனஞ்செய்க.

அங்கம் பிரத்தியங்கம் உபாங்கம் சாங்ககற்பனையை அங்கநியாஸ மென்பாருமுளர்.

இதன்கருத்து.

இலௌகிகவிருத்தியைக் குறைத்து, காமாதி தீக்குணங்களை நீக்கி, நன்னெறியிலொழுகி(இயமம்)தத்துவசாத்திர விசாரஞ்செய்து ஜீவேசுர ஜகத்துக்களின் உண்மை யிலக்கணமறிந்து, பக்திமிகுத்து (நியமம்) நியதிகளைந்து ஆன்ம தரிசனஞ்செய்து,வைராக்கியமடைந்து பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணைகளைப்புரிந்து, நாதபிந்துக்களைத் தரிசித்து, அப்பாற்சென்று பிரமத்தை அருவமாகவும் ரூபாரூபமாகவுந் தியானித்து, சுட்டற்று அதுவாய்நிற்குஞ் சமாதியில் ஆநந்தாநுபவமடைந்து (ஆநந்தவேத்யசமாதி) நின்மல துரியத்திற் கண்டவாறே ஜாக்கிரத்திலும் எல்லாம் அதுவாகக்கண்டு சகசநிட்டையில்நிலைத்து(சஞ்சாரசமாதி)சகல விருத்திகளும் கெட்டு நிருவிகல்பப் பிரமாகாரமாகவேயாகி அதில் அதீதப்படலாகிய மோனசமாதியுங் கூறப்பட்டது.

பிரமமாகவேயாதல் என்று கூறலின் உண்மையை நன்கு விசாரித்தறிதல் வேண்டும். அங்ஙனம் விசாரியாது விபரீதப் பொருள்கொண்டு மயங்கற்க. ஒரு பிரியப்பொருளை ஆவலோடு கவனமாய் இடைவிடாது அழுந்திப் பார்க்கும்பொழுது மற்ற இந்திரியவிஷயக் கிரகணமின்றி நேத்திரேந்திரியம் அதையே கிரகிக்க தன்னைமறந்து மனம் அப்பொருளாகாரமாகவே சமைந்துநிற்றலும், வெண்படிகம்தான் சார்ந்த பொருளின் வண்ணமாய் விளங்கலும் அனைவருமறிந்த அநுபவம்: ஆதலால் உபாசகன் பிரமாகாரமாதலை அவ்வநுபவத்துவைத்தோர்ந்து தெளிக.

அக்கருத்தை.

பிரஹ. 4. 3. 21. तद्यथाप्रिययास्त्रिया संपरिष्वक्तो न बाह्यं किंचनवेदनान्तर मेवमेवायं पुरुषः प्राज्ञेनात्मना संपरिष्वक्तो न बाह्यं किंचनवेदनान्तरम् ॥

" அதாவது எப்படித்தனக்குப் பிரியமான பெண்ணைக் கூடியவன் புறத்திலுள்ள ஒன்றையுமறிகின்றிலனோ உள்ளும் அறிகின்றிலனோ இவ்வாறே இப்புருடன் பிராக்ஞாத்மாவாகிய பிரமத்தோடுகூடில் புறத்திலுள்ள வொன்றையும் அறிகின்றிலன் உள்ளும் அறிகின்றிலன்.

பிரஹ. 4. 3. 32. सलिलयेको द्रष्टाद्वैतो भवति ॥

(நீரொடு) நீர்போல ஒன்றாகிக்காண்பான் இரண்டற்றவன் ஆகின்றான் " முதலியசுருதிகளிற் காண்க,

## வேறு அந்தரியாகம் 3.

இருதயாலயத்தில் பராசத்திபீடத்தில் ஞானப்பிரகாச மாகிய லிங்கத்தை சமமாகிய திருமஞ்சனத்தாலபிஷேகி த்து, சருவபரிபூரண பாவமாகிய பரிவட்டஞ்சாத்தி, இச்சா ஞானக் கிரியைகளாகிய எக்ஞோப வீதந்தரித்து,சுத்த வித் தையாகிய சந்தனம்பூசி, பூததயவாகிய அக்ஷதையர்ப்பித்து பக்தியாகிய புஷ்பங்களாலர்ச்சித்து, அந்தக்கரணம் நான் கையுந் தூபமாய்த்தந்து, ஞானேந்திரியங்களைந்தையும் தீப மாயீய்ந்து, நிருமலமான ஜீவனை நைவேத்யஞ்செய்து, குண மூன்றையுந் தாம்பூலமாயளித்து, பிராணனை நமஸ்க்காரமா கச் சமர்ப்பித்துச் சிவார்ச்சனை புரிக.

### கருத்து.

புறக்கரணம் அகக்கரணங்களனைத்தையும் பரமேசுர விஷயத்திற் செலுத்தி அதாவது வேறு விடயங்களிற் செ லுத்தாது இதயகமலத்திற் பரமேசுரனைத் தியானிக்கவே ண்டு மென்பது.

### சவிகல்பமானதப்பூஜை.

இஃது மேற்கூறியவாறு உபாசிக்கச்சக்தியற்றவன் செய்யத்தககது. தனது சுத்தி, நன்னடை, ஆலயப், ஆலய சுத்தி, இலிங்கப், அபிஷேகம் தூபம், தீபம், நைவேத்தி யம், உபசாரம் முதலிய அனைத்தையும் தன் உள்ளத்தி லேயே கற்பித்து வேறுவிடயங்களில் மனஞ்செல்லாது நின்று முக்காலங்களிலும் பக்தியோடு பூஜை செய்தல்

சவிகல்பமானதபூஜை இம்மானதபூஜையிற் பயின்றோர் சமாதியிற் பயிலத்தக்கவராவர்.

## யோகம்.

அந்தரியாகம் என்ற யோகமும் அப்பியாசயோகம் ராஜயோகம், என்றிருபகுப்புடைத்து. அப்பியாசயோகம் மந்திரயோகம், லயயோகம், ஹடயோகம, என மூவகைப படும். மந்திரயோகம்— அஜபயோகம், ஜபயோகம், கிரியா யோகம், பக்தியோகம், என நால்வகைப்படும். லயயோகம்- நாதம் பிந்துக்களிற் சித்தம் லயித்து நிற்பது, ஹடயோகம் (ஹ=சூரியன், ட=சந்திரன்) சூரியன் சந்திரன் என்னும் பிராணன் அபானன் இரண்டையுஞ் சேர்க்கின்ற பிராணாயாம பூர்வகமாய்ச் செய்யும் அஷ்டாங்க யோகம், ஹட யோகத்துக்கு ஆசனம், கும்பகம், பந்தம், முத்திரை, நாதாநு சந்தானம் முக்கியாங்கங்கள். ராஜயோகம் சித்தபரிபாகமுடையார் செய்யும் தாரகம்சாங்கியம் அமனஸ்கமென மூவகைப்படும். அவற்றில் முன்னிரண்டும் சாதனமாயும், அமனஸ்கம் சுதருமமாயும் உள்ளன.

அஷ்டாங்கம்— இயமம், 10, நியமம் 10, ஆசனம் 5—108, பிராணாயாமம் 8—108, பிரத்தியாகாரம்— பாத முதல் சிரசீறானபதினெண் மர்மஸ்தானங்களில் தரித்தல் முதலியன, தாரணை— பூதாரணை, அப்புதாரணை அக்கினி தாரணை, வாயுதாரணை, ஆகாசதாரணை முதலியன, தியா

ளாம்— சகளம், சகளநிஷ்களம், நிஷ்களம், சோஹம் பாவனை முதலியன. சமாதி— சவிகல்பம், நிருவிகல்ப முதலியன. இனி சூரியயோகம் சந்திரயோகம் கேசரியோகம் பரியங்கியோகம் முதலியயோக பேதங்கள் பலவுள. இவற்றின் விரிவையான் தமிழில் மொழி பெயர்த்திருக்கின்ற பதஞ்சலியோக சூத்திரபாஷ்யத்திற்காண்க.

## சமாதி.

பூதகாரியசமாதி 1, விஷயலயசமாதி 2, சித்தநிரோத சமாதி 3, போதசமாதி 4, சித்தாநுவித்தசமாதி 5, விசுவரூபசமாதி 6, வியாபகசமாதி 7, விகலையசமாதி 8, சிவஞானசமாதி 9, சத்தாநுவித்தசமாதி 10, தத்துவலயசமாதி 11, சவிகல்பசமாதி 12, அநந்தவேத்யசமாதி 13, நிருவிகல்பசமாதி 14, சஞ்சாரசமாதி 15, அரூபசமாதி 16, சருவசூன்யசமாதி 17, விகல்பலயசமாதி 18, ஒழிவுசமாதி (அசம்பிரக்ஞாதசமாதி) 19, உன்னதசமாதி 20, யதார்த்தசமாதி, 21, ரகசியசமாதி 22, அறிவுசமாதி 23, ஒடுக்கசமாதி 24, மோனசமாதி 25, இது ஒரு மதம்.

இனிச்சமாதி யனைத்தும் சாலம்பம், (ஒன்றைப்பற்றி இருப்பது) நிராலம்பம் (ஒன்றைப்பற்றாதிருப்பது) என்றிரு வகையிலடங்கும். அவற்றுள் சாலம்பசமாதி ஸ்தூலத்தை விஷயமாகவுடைய சப்தாநுவித்தசவிதர்க்கசமாதி, அர்த்தாநுவித்தசவிதர்க்க சமாதி, ஞானாநுவித்த சவிதர்க்கசமாதி, விகல்பாநுவித்த சவிதர்க்கசமாதி, நிர்விதர்க்கசமாதி,

என்றும், ருக்குமத்தை விஷயமாயுடைய விசிஷ்டலிங்கா நுவித்த சவிசாரசமாதி, அவிசிஷ்ட லிங்கா நுவித்த சவிசாரசமாதி, லிங்கமாத்திரா நுவித்த சவிசாரசமாதி, அலிங்கா நுவித்த சவிசாரசமாதி, என்றும் பலவகைப்படும். (விசிஷ்டலிங்கம்=பூதம், அவிசிஷ்டலிங்கம்=தன்மாத்திரை, லிங்கமாத்திரம்=புத்தி, அலிங்கம்=ஆன்மா).

சாலம்பசமாதி-சபீஜசமாதி, சம்பிரக்ஞாதசமாதி என்றும், நிராலம்பசமாதி—நிர்ப்பீஜசமாதி, அசம்பிரக்ஞாதசமாதி என்றும் பெயர் பெறும். இந்நிராலம்பசமாதியாற் செய்யப்படுவதே அநிகேதாபாசனே. இது நான்காவதுபடி. அவ்வகுப்பிற் படித்தற்கு யோக்கியனுகவேண்டுமாறுல் பாகிய சவிகல்பசமாதியாகிய முதல்வகுப்பிலும், ஆந்தரசவிகல்பசமாதியாகிய 2-வது வகுப்பிலும், சவிசாரசமாதியாகிய 3வது வகுப்பிலும், பயின்று தேரவேண்டும்: அங்ஙனமின்றி முதலினே நிராதாரசமாதிசெய்யலா மென்பது நெடுங்கணக்குப் படியாது நூல்களை வாசிக்கலாமென்னலையும், காலின்றி யோடலாமென்னலையும் ஒக்கும்.

வித்தைகள்.

இனிவேதோபநிஷத்துக்களிற் கூறப்படும் உபாசனைகள் வித்தைகள் என்னப்படும். அவ்வித்தைகள் பிரமவித்தை காமியவித்தை யென்றிருவகைப்படும. பிரமவித்தை மோக்ஷத்தைத்தருவதும் காம்யவித்தை சித்திகளைத்தருவதும் பிரமவித்தைக்கங்கமாவதும் ஆம்.

## பிரமவித்தை.

1. ஈசாவாசிய வித்தை
2. பரமபுருஷவித்தை
3. சத்வித்தை
4. ஆநந்தமயவித்தை
5. அந்தராதித்ய வித்தை
6. ஆகாசவித்தை
7. பிராணவித்தை
8. பரஞ்சோதிவித்தை
9. பிரதர்த்தனவித்தை
10. சாண்டில்யவித்தை
11. நாசிகேதவித்தை
12. உபகோசலவித்தை
13. உத்தாலகாந்தரியாமிவித்தை
14. அக்ஷரபரவித்தை
15. வைசுவாநரவித்தை
16. பூமவித்தை
17. கார்க்யக்ஷரவித்தை
18. சத்யகாமவித்தை
19. தகரவித்தை
20. அங்குஷ்டப்பிரமிதவித்தை
21. மதுவித்தை
22. சம்வர்க்கவித்தை
23. அஜாவித்தை
24. ஜோதிஷாம்ஜ்யோதிவித்தை
25. பாலகிவித்தை
26. மைத்திராயிவித்தை
27. சதுர்முகவித்தை
28. உசஸ்திகஹெளா வித்தை
29. பஞ்சாக்கினிவித்தை
30. ஆதித்யமண்டலஸ்தசத்யப்பிரமவித்தை
31. அக்ஷிஸ்தசத்யப் பிரம வித்தை
32. ஸ்ரீமத்ந்யாசவித்தை

## காம்யவித்தைகள்.

1. உத்கீதோபாசகவப்ரணவ வித்தை
2. கிருத்ஸ்நோத்கீதவித்தை
3. ஜைஷ்ட்யசிரைஷ்ட்யபிராணவித்தை
10. பிரணவேபரோவரீயஸ்த்வாதி திருஷ்டிவித்தை
11. பிரணவேஹிரண்மயத்வாதிவிசிஷ்டபகவத்

| | |
|---|---|
| 4. பிராணவாஸஸ் த்வதிருஷ்டி வித்தை | திருஷ்டிவித்தை |
| 5. சாந்தோக்கிய புருஷவித்தை | 12. நாமப்பிரம திருஷ்டிவித்தை |
| 6. தைத்திரீயபுருஷவித்தை | 13. வாசிப்பிரமதிருஷ்டிவித்தை |
| 7. ஹாநோபாயசிந்தனவித்தை | 14. ஜீவே பிரமதிருஷ்டிவித்தை |
| 8. மநச்சிதவாக்சிதாதி வித்தை | 15. உத்கீதாதாவாதித்யாதிதிருஷ்டிவித்தை |
| 9. பிரணவேரசதத்வாதிதிருஷ்டிவித்தை | முதலியன பல |

இவ்வித்தைகளனைத்தும் அதீதம், அரூபம்,ரூபாரூபம், ரூபம்என்ற நான்குபாசனையிலடங்கும். இவற்றின் விரிவை யான் தமிழில் மொழிபெயர்த்திருக்கும் பிரமசூத்திர ஸ்ரீகண்டபாடியத்திற் காண்க.

இங்ஙனம் தேவோபாசனை வேதாகமங்களில் உபாசகர்களின் சித்தபரிபாகத்துக்கொத்தபடி பலவாறு விரிக்கப்பட்டுளது. சுருக்கிக்கூறில் சித்தம் விஷயங்களிற் செல்லாமலும் அந்தர்விருத்தியிற் சலிக்காமலும், காற்றில்லாததீபம் போல் நிலைத்துத்தியேயப் பொருளைமாத்திரம் பற்றிநிற்பது சமாதி. அது சாலம்பம் நிராலம்பமென் றிருவகைப்படும். நிராலம்பம் அமனஸ்கயோகிகள் செய்யத்தக்கது. சாலம்பம் சப்தாநுவித்தசவிகல்பம், திரிசியாநுவித்த சவிகல்பம், நிருவிகல்பம், என மூவகைப்படும்: அவை ஆந்தரம் பாகியம்

என்ற இருபகுதியால் ஆறுவகைப்படும். பாகிய சவிகல்பம் ஆந்தரசவிகல்பத்துக்குச் சாதனமாகின்றது அவை வருமாறு.

## ஆந்தர சப்தாநுவித்த சவிகல்பசமாதி.

பிரமோஹம், சிவோஹம்முதலிய சப்தங்களைப்பற்றி, பிரமத்தில் சித்தவிருத்தியை நிலைக்கச்செய்தல். மந்திரங்களைப்பற்றி அல்லது உள்ளெழும நாதத்தைப்பற்றிச் சித்தம் நிலைத்தலும் சப்தாநுவித்த சவிகல்பமாம்.

## ஆந்தர திரிசியாநுவித்த சவிகல்பசமாதி.

தியானத்தில் நிலைத்தபொழுது ஆன்மதரிசனமுண்டாகின்றது. அந்த ஆன்மாவைப்பற்றியாதல், உள்ளே தோன்றும் பிந்துவாகிய ஒளிகளைப்பற்றியாதல் அல்லது அப்பால் தோன்றும் பஞ்சாகாசங்களில் விளங்கும் சித்கலைகளைப் பற்றியாதல் சித்தம் நிலைத்தல்.

## ஆந்தர நிருவிகல்பசமாதி.

அந்தர்முகமாகிசித்தம் நாதபிந்துகலைகளைப்பற்றுதுகடந்து சென்று விருத்திகள் நீங்கி பிரம்மத்தைப்பற்றி நிற்பது.

## பாகிய சப்தாநுவித்த சவிகல்பசமாதி.

பிரணவமுதலிய மந்திரங்களையாவது பகவந்நாமங்களையாவது உபாம்சு அல்லது வாசகமாகஜ் ஜபஞ்செய்து அதிலெழும் ஒலியைப்பற்றிப் பிரம்மத்தில் சித்தம் நிலைக்கச் செய்தல்.

## பாகியதிரிசியாநுவித்த சவிகல்பசமாதி.

சூரியன் அக்கினி முதலிய வடிவங்களைப்பற்றி மனம் பிரமத்தில் நிலைக்கச்செய்தல். ஆன்மார்த்த லிங்கமுதலிய வடிவங்களைப்பற்றி பிரமத்தில் மனம் நிலைக்கச்செய்தலும் இச்சமாதிவகையிற்படும்.

சூரியன் முதலிய வடிவத்தில் மனோவிருத்தியை வைத்துப் பயிலல்யோகத்தில் கேசரி பூசரி மத்திமை, ஷண்முகி, சாம்பவிமுதலிய முத்திரைகளில் மனம் நிலைத்தற்காகப் பார்வையை ஒவ்வோரிடத்துவைத்துப் பயில்வதுபோன்றது.

## பாகியநிருவி கல்பசமாதி.

நேத்திரங்களைத் திறந்திருந்தும் பாகியவிஷயங்களில் மனஞ்செல்லாமல் அவலம்பித்திருக்கின்ற சூரியன்முதலிய வடிவம் பற்றலும் நழுவித்திடிய யப்பொருளாகாரமாகச் சித்தம் பரிணமித்து நிற்றல்.

பாகியசவிகல்பசமாதிகள் ஆந்தரசவிகல்பசமாதிகளுக்குச்சாதனமாகின்றன. இஃதறியாத கிறித்துவர்முதலிய சிலமதத்தினர் கடவுளைச் சருவவியாபகனென்றறிந்து தியானிக்கின்றோமென்று வாய்ப்பேச்சுப் பேசுகின்றனர். செயலில் கிறித்துவர் பரமண்டலங்களிலிருக்கின்ற பிதாவென்றும், முகம்மதியர் ஏழாவது வானத்தில் அறு சென்கிற சிம்மாதனத்திலிருக்கின்ற ஹக் என்றும், ஓரிடமும் உருவமும் சங்கல்பித்தே தியானிக்கின்றனர். சருவவியாபகத்துவத்தைப் பற்றியவர் இடம் உருவங்களைப் பற்றுவாரேனன். அவர்கள்

நூல்களங்ஙனங் கூறுவானேன். சருவவியாபகப் பொருளை த்தியானிக்கும்வழியிதுவியாபகத்துவத்தில் மனம்பற்றப் பயில்வது இவ்வாறு என்று குறித்துவர் நூல்கூற்றிலேயே அப்படியாகில் அவரெப்படியதியற்றச் சக்தியுடையராவர். உண்மையை ஊகிக்குங்கால் சருவவியாபகப் பொருளையது சந்தானஞ் செய்யுஞ்சமாதிக்கு வியாபகசமாதியென்று பெயர். அது சமாதியொழுங்கில் 7-வதுபடி, அதற்குமுன்னர் 6-படியும் அதன்மேல் 18 படிகளுமிருக்கின்றன. முதற்படி. இன்னதென்றறிந்து அப்பியாசியாதவன் எப்படி 7வதுபடியிலுள்ள அப்பியாசம்புரிவன். ஒரு உருவப்பொருளில் மனம்நிலைக்கப்பயிலாதவன் எல்லாப்பொருளிலும் நிறைந்துள்ள சருவவியாபகத்வம் என்னும் அகண்டமான அருவத்தில் மனத்தை நிலைக்க வைப்பதெப்படி? இச்சமாதி சித்தித்தாற் பலன் இரணியகருப்பதரிசனம் அதாவது இருந்தவிடத்திலிருந்து ஞானநேத்திரத்தால் சகலாண்டங்களையுந் தரிசித்தல். இச்சமாதியும் ஆலம்பசமாதியிற்பட்டதேயன்றி நிராலம்ப சமாதியிற்பட்டதன்று. பூர்வபக்ஷிகளதுணரார் போலும்.

இடைவிடாது பாகியவிஷயங்களிற் சென்றுழலும் மனதை ஒரு திரிசியவடிவத்தில் நிறுத்திப்பயின்று பின்னர்ஞானசட்சுவுக்கு விஷயமான வடிவத்தில் நிறுத்திப்பயின்று, அதன்பின் சூக்குமத்தில் (அருவத்தில்) நிறுத்திப்பயின்றவன் அதீதத்தில் பயிலச்சக்தியுடையவனாவனன்றி துவக்கத்திலே எங்ஙனம் அதீதோபாசனை செய்யவல்லவனாவன்.

அன்றியும் பாகியகிரியாநவித்தசவிகல்பசமாதியின் பேதத்திற்பட்ட பகிர்லக்ஷியமாகிய உருவழிபாட்டுக் குப யோகமாகிய தாபராலயம் அதீதப்பிரமதரிசனஞ் செய்கின்ற யோகமாகிய அந்தரியாக பூஜையின் கிரமத்தை யுணர்த்தற் கறிகுறியாயு முளது. அதில் அப்பூஜை நிகழுமிடமாகிய புருடாகிருதியுடைய தாபராலயமும் அதில் பூஜிக்கப்படும் பொருளைக் குறிக்கும் சிவலிங்கமும், அவன் பெருமையையும் கல்யாணகுணங்களையும் விளக்குகின்ற அங்கம் பிரத்தியங்கம் உபாங்கம் சாங்கம்களையுடைய விக்கிரகங்களும், அவனை யுபாசிக்கும் மார்க்கத்தைக் குறிக்கும் அபிஷேகம் அருச்சனை தூபதீபநைவேத்யமுதலியனவும் ஏற்பட்டுள்ளன. ஆதலால் தாபராலயப்பாகிய விஷயங்களிற் செல்லும் மனத்தை யொடுக்கி யுபாசனையிற்பயிலச் செய்தற்கும், உள்வழிபாட்டின் தத்துவங்களையுணர்ந்து அவ்வுயர்ந்த வுபாசனையிற் பயிலச் செய்தற்கும் சாதனமாயுளது.

## தாபராலயம் (சயநாகிருதி)

"நடமாடக்கோயில் நம்பன்" என்று கூறப்படுகின்ற அடியவர் சரீராகிருதியாகிய "படமாடக்கோயிற் பரமன்" வீற்றிருக்கும் தாபராலயத்திற் புருடாகிருதியாவது-கருப்பக்கிரகம்-சிரசு, அந்தராளம்-முகம், கருப்பக்கிரக நிலைத்தம்பங்கள்-கண்கள், அந்நிலைமேலுள்ள நாசிகை-நாசி, அர்த்தமண்டபத்திலுள்ள இருபக்கத்துவாரங்கள் (பலகணிகள்) செவிகள், அர்த்தமண்டபம்-கழுத்து, மஹாமண்டபம்-மார்பு

வயிறு, மணிமண்டபம் அதிலுள்ள மணி-நாபி, துஜஸ்தம்பம்-இலிங்கம், ரிஷபம்-அண்டம், பலிபீடம்-குதம், கோபுரம்-பாதம், கருப்பக்கிரகத்தைச் சூழ்ந்திருக்கும் மாலிகாமண்டபம்-மாலை, பிராகாரவீதி-விலாவுக்கும் கைகளுக்கும் இடைவெளி, மூன்றாவது பிராகாரம்-தோல், நான்காவது பிராகாரம்--கைகள், துவாரமாகியவாயில்--இரண்டுபாதத்தின் இடைவெளி, கோபுரப்பக்கங்கள் பாதப்படங்கள். இது அடியார் திருக்கோலம்-இனிக்கோபுரம் விமானம் நின்றதிருக்கோலம். தண்டாகிருதிப்பிரகாராந்திரத்தில்துவஜத்தைத் தேகத்திலுள்ள வீணாதண்டம்போல் மூலாதாரமுதல் பிரமரந்திரம் வரைக்கும் மேல்நோக்கிச்செல்லும் பிரமநாடி என்னலும் விமானத்தை சகஸ்ராரமாகிய கமலாகாரமாகக் கொள்ளலுமுண்டு. *

---

* நிர்வசனபத்ததி (நிகமக்ஞான சிவாசாரியரியற்றியது.)

गर्भग्रहेपु मूर्ध्नामुखर्द्धेवक्षःस्थलं भवेत् । स्नपनमंटपनाभिःस्यान्नृत्तमंटपजानुकम् । आस्तानमण्टपंजंघे महागोपुरपादुकम् ॥

"கருப்பக்கிரகம்=சிரசு, அர்த்தமண்டபம்=மார்பு, ஸ்நபனமண்டபம் (=மஹாமண்டபம்) கொப்பூழ், நிருத்தமண்டபம் (ரசமண்டபம்=ஆறுகால் மண்டபம்) =முளந்தாள், ஆஸ்தானமண்டபம்=கெண்டைக்கால், மகாகோபுரம்=பாதம்."

இவ்வாறு ஆலயத்தைச் சுருக்கிப் புருஷாகிருதியாகக் கூறும் மதாந்தரங்களுமுள

## நின்ற திருக்கோலம்—கோபுரம்.

பாதபந்தம், பத்மபந்தம், பத்மாலயம், பத்மாசிரயம், பத்மபுஷ்கலம், பிரதிபந்தம், பிரதிக்கிரமம், பிரதிகந்தரம், பிரதயபலகம், பீடவர்க்கம், உபானம்—பாதம், ஜகதி—கணைக்கால், குமுதம்-முழங்கால், கந்தரம்—தொடைநீளம், ஸ்ரீகண்டபட்டிகை(மகாபட்டிகை,)இடுப்பு, வேதிகை--கொப்புழ், ஸ்தம்பம் (பாதகதோரணம், தாடிகை, கும்பபாலிகை, வீரகண்டம்,கபோதிகை)வயிறு:உத்தரம்—ஸ்தநம், கபோதம்(அலங்கிருதம், சித்ரதரங்கிணி, வாஞ்சிதம்.துலாநுமார்க்கம், ஜயதி) மார்பு, பிரஸ்தரம்-புயம், வேதி—கழுத்து, கண்டம்-கண்டம், நீவ்ரபட்டம்-உதடு, மஹாநாசி (அநுநாசி)மூக்கு, சந்த்ரபிம்பம்-கண், ஊர்த்வகம்பம்-நெற்றி, பத்மம்-தலை, ஸ்தூபி-சிகை, உத்தரகோபுரத்துவாரம் - பிரமரந்திரஸ்தானம், அந்தராளகோபுரம்-புருவமத்தியஸ்தானம் ஆம்.

இத்தகையதண்டாகிருதியாகிய புருடவடிவாம் கோபுரம் அப்புருஷாந்தரியாமியாகிய பரமேசுரனைத் தியானிக்கப்படலால் தூலலிங்கமென்னப்படும்.

சயனபுருஷாகிருதியாகிய தாபராலயத்திலுள்ள தாமரைத்தடாகம்-இருதயகமலம், மடப்பள்ளி ஜாடராக்கினி, கருங்கல் செங்கல்-என்பு, சுண்ணச்சாந்து-மாம்சம், இராஜசபை, தேவசபை, நிருத்தசபை, கனகசபை, சிற்சபைகள் முறையே அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆநந்தமயகோசம் என்னப்படும்.

இப்பஞ்சகோசங்களைப் பஞ்சப்பிராகாரங்கள் என்றும் இரசம் இரத்தம் மாமிசம் மேதை என்பு மச்சை சுக்கிலம் என்ற சப்ததாதுக்களை ஏழுபிராகாரங்கள் என்றும் ஸ்தூல சூக்கும காரணசரீரங்களை மூன்று பிராகாரங்கள் என்றும் ஒரு பிராகாரமிருக்கில் அதில் இவை அந்தர்ப்பூதம் என்றும் கூறுவாருமுளர்.

## ஆலயதரிசனத் திருக்குறி.

காயபராலயத்தில் மூலாதாரமாகிய துவஜமண்டபம், சுவாதிட்டானமாகிய நிருத்தமண்டபம், மணிபூரகமாகிய மணிமண்டபம், அநாகதமாகிய மஹாமண்டபம், விசுத்தியாகிய அர்த்தமண்டபம், ஆக்கினையாகிய அந்தராளமண்டபங்களில் ஆங்காங்குள்ள பரமேசுவரவிபூதியாகிய தேவதாரூபங்களைப் பூசித்துக்கடந்து சென்று சகஸ்ரதளபத்மமென்னும் விமானகாலமத்தியாகிய கருப்பக்கிரகத்தில் சூக்கும லிங்கத்தை அபிஷேகம் அருச்சனை வாத்தியம் தூபம் தீபாராத்தி நைவேத்யஞ்செய்து பூசித்துத்தரிசித்தல் யோகி தனது சரீரத்திலுள்ள ஆராதாரங்களில் தாரணைசெய்து கடந்துசென்று சகஸ்ராரகமலத்தில் சருவஜகத்காரணமாகிய பரநாதவடிவாம் ஞானலிங்கத்தை யோகத்திலுண்டாம் சந்திராமிர்தம், பிராணயாமம், நாதர், பிந்துக்களாகிய, அபிஷேகம், தூபம், வாத்தியம், தீபாராத்தி இயற்றி ஆத்மார்ப்பணமாகிய நைவேத்யஞ்செய்து தரிசிக்கவேண்டுமென்பதைக் குறிக்கின்றது.

திருவாசி—மூலலிங்கம், உத்சவலிங்கமாகிய விக்கிரகங்களைச் சூழ்ந்துநிற்கும் திருவாசி அவ்வடிவங்கள் பிரணவாகார மென்றுணர்த்துகின்றது. (பிரணவம்=நாதவடிவாம் பிரமம்.)

திருவிளக்கு-காண்பானையும் காட்சிப்பொருளாகிய பிரமத்தையும் விளக்குந்தன்மையுடையது திருவிளக்கு. அது சரீராலயத்தில் மனம் என்னுந்தகழியில் அறிவாகிய நெய்யை நிறைத்து, உயிரென்னுந்திரியில் (பிராணவாயுவாகிய காற்றை நிறுத்தி அஞ்ஞானமென்னும் இருள் நீங்க) ஞானமென்னும் ஒளியையேற்றிப் பிரமத்தைத் தரிசிக்கவேண்டுமென்னலைக் குறித்துநிற்கின்றது:

தேவாரம்.

உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுடம்பெனுந் திரிமயக்கி
யிடர்படு ஞானத்தீயா லெரிகொள விருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

திரை-கதவுதிறக்கப்பட்டும் இலிங்கத்தைத் தெரியாமல் மறைப்பது திரைச்சீலை, அது நீக்கப்பட்டபொழுது சிவலிங்கம் தோன்றுகின்றது. இது சமாதியில் அகங்கார மமகாரங்கள் நீங்கிநிற்கினும் அஞ்ஞான இருளாகிய திரை நீங்கியபொழுதே பிரமதரிசனம் உண்டாமென்று குறித்து நிற்கின்றது.

நந்திதெரிசனம்—பலிபீடத்தைக்கடந்துசென்று முதலில் நந்தியைதரிசித்துப் பின்னர் ஆலயத்தினுட் பிரவேசித்துச் சிவலிங்க தரிசனஞ்செய்தல் ஆலயதரிசன விதி. இஃது சிவலிங்கம் பதி நந்தி பசு பலிபீடம் பாசம் ஆதலால் பாசத்தை நீத்துச்சென்று உள்முகப்பட்டு பசுவாகிய ஆன்மதரிசனஞ்செய்து அதன் அந்தரியாமியாகிய பிரமதரிசனஞ் செய்யத்தக்கது என்பதைக் குறிக்கின்றது.

நந்தி பரமகுருவாதலால் குருதரிசனமடைந்தாரே பிரமதரிசன மடையத்தக்கவராவர் என்பதைக் குறிக்கின்றது என்பாருமுளர்.

கபாடங்கள்—இரு கதவுகளையுந் திறந்து நீங்கில் சிவலிங்க தரிசனமுண்டாகின்றது அவ்விரண்டும் பொருந்தியபொழுது லிங்கத்தை மறைத்துத் தரிசனஞ்செய்யவொட்டாமற் றடுக்கின்றன. ஆதலால் இவை அகம் அகங்காரம் மமகாரம் என்ற இரண்டால் மூடப்பட்டபொழுது பிரமந் தரிசிக்கப்படமாட்டாது. அவை நீக்கப்படில் பிரமதரிசனஞ் சித்திக்குமென்பதைக் குறிக்கின்றன.

நைவேத்யம்—உட்கொண்டு திருப்தியடைந்து தன்மயமாக்கிக்கொள்ளப்படுவது அன்னம், உபாசனையால் தன்னை (ஈசுவரனை) திருப்தியடையச் செய்விக்கின்ற ஆன்மாவை ஏற்றுத் தன்னுட்கொண்டு தன்மயமாக்குவதால் ஆன்மா நைவேத்ய மென்னப்படுகின்றது.

பஞ்சோபசாரங்கள்—ஷோடசோபசாரமு மிதிலடங்கும். பார்த்திவோபசாரம்=பிருதிவி சம்பந்தமானது-கந்தம், புஷ்பம், பணிகாரம், அன்னம், தாம்பூலம் முதலியன கொடுப்பது. ஆப்பியோபசாரம்=அப்புச் சம்பந்தமானது-பால் தயிர் பானகம், பாத்தியம், ஆசமனம், அர்க்கியம், பானீயம் முதலியன கொடுப்பது. தைஜஸோபசாரம்-தீச்சம்பந்தமானது பொன்முதலிய லோகம், இரத்தினங்களாற் செய்யப்பட்ட ஆபரணங்கள் தீபங்கள், கண்ணாடி முதலியன சமர்ப்பிப்பது. வாயவ்யோபசாரம்=வாயுசம்பந்தமானது தூபம், சத்திரம், சாமரம், மயில்விசிறி முதலியன சமர்ப்பிப்பது. வைஹாயஸோபசாரம்=ஆகாசசம்பந்தமானது, மணியோசை, மந்திரம், வேதகானம் நிருத்தம், கீதம், வாத்தியம், தோத்திரமுதலியன அர்ப்பிப்பது. சருவஜகத்தையும் ஜகத்திலுள்ள பொருள்களையும் சுவாதீனமாயுடையனும் சருவஜெகத்ரூபியாயும் உள்ள சருவஜகத்காரணனை பிள்ளைகள் பிதாவின் பொருளைக்கொண்டு பிதாவைத் திருப்திசெய்வித்தல்போலப் பஞ்சபூத சம்பந்தமான பொருள்களால் உபசரித்தல் இயற்றுவானது அன்பைக்குறிக்கின்றது. அப்பொருள்களனைத்தும் அவனைப் பூஜித்துபசரித்தற்காயினவேயாயினும் கிரிசியா திரிசியங்களாகிய அவையனைத்தும் அவன் வடிவாகக்கண்டு விஷமபாவனைகளை நீத்து சகசநிட்டையில் அல்லது விசுவரூபோபாசனையிற் றேரவேண்டுமென்னலையுங் குறிக்கின்றன. இவற்றின் விரிவைக் காரணுகமமுதலிய

மூலாகமங்களிலும் தேவாரம் திருமந்திரம், சதாசிவரூபம் பதினோராந்திருமுறை தத்துவப்பிரகாசம் முதலிய நூல்களிலும் ஆங்காங்குக் காண்க.

## அப்பியாசயோகம்.

இனிப்பிரகாராந்தரத்தில் ஆலயோபாசனை அப்பியாசயோகத்துட்பட்ட மந்திரயோகத்தின் பிரிவாகிய பக்தியோகத்துட்பட்ட தென்னல் பிரசித்தம். அப்பியாசயோகம் மந்திரம், லயம், ஹடம், என மூவகைப்படும். லயயோகம் ஹடயோகங் கள் முற்கூறப்பட்டன. மந்திரயோகம்—அஜபம் ஜபம் கிரியை பக்தியென நான்கு வகைப்படும்.

## அஜபயோகம்.

ஒருநாட் சூரியோதயமுதனாழிகை துவக்கி மறுநாள் அக்காலம்வரை நாழிகை 60 ல் ரேசகபூரக கும்பகரூபமாய் இயல்பில் நிகழ்ந்துகொண்டிருக்கும் பிராணவாயுவின் சூரியன் சந்திரன் சூனியமென்ற அக்கினிகளின்கலைகள் 21600 அவற்றை ஷெ 60 நாழிகை சலனமின்றி ஓரிடத்தில் நிகூநிதனுயிருந்து மூலாதாரத்தின் கணேசனுக்கு 600, சுவாதிட்டானத்தில் பிரமாவுக்கு 6000, மணிபூரகத்தில் விஷ்ணுவுக்கு 6000, அநாகதத்தில் ருத்திரனுக்கு 6000, விசுத்தியில் ஆன்மாவுக்கு 1000, ஆக்ஞேயத்தில் பரமாத்மாவுக்கு 1000, ஸஹஸ்ராரத்தில் குருவுக்கு 1000, ஆக அர்ப்பிக்கவேண்டும் இயல்பான அம்ஸகாயத்திரி மந்திரத்தால் சமர்ப்பிப்பது ஆதலால் அஜபமெனப்படும்.

ஜப யோகம்.

ருஷி, சந்தசு, தேவதை, பீஜம், அங்கந்யாசம், கரந்யாசம், சகிதயாய் விதிப்படி வேதமந்திரங் களையாவது, சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் முதலிய மதசம்பந்தமான தேவதைகளுக்குரிய மந்திரங்களையாவது, சித்திகளுக்குரிய மந்திரங்களையாவது ஜபிப்பது.

கிரியா யோகம்(சம்ஸ்காரங்கள்.)

அவ்வவர்க்குரிய விதிப்படி வேதாகமமந்திரங்களோடு செய்யப்படுகின்ற ஸ்மார்த்தகருமமெனப்படும் பிராமகருமங்கள் = கர்ப்பாதானம் 1, பும்ஸவனம் 2, சீமந்தம் 3, ஜாதகருமம் 4, நாமகரணம் 5, அந்நப்பிராசனம் 6, சௌளம் 7, உபநயநம் 8, பிரஜாபத்தியம் 9, சௌமியம் 10, ஆக்நேயம் 11, வைசுவதேவம் 12, ஸ்நாதகம் 13, விவாகம் 14. சிரௌதகருமங்கள் என்னப்படும் தெய்வகருமங்கள் = பிரமயஜ்ஞம் 1, தேவயஜ்ஞம் 2, பிதுர்யஜ்ஞம் 3, மானுஷ்யயஜ்ஞம் 4, பூதயஜ்ஞம் 5, ஆகிய பஞ்சமஹாயஜ்ஞம் 5. அஷ்டகாசிராத்தம் 1, அந்வஷ்டகாசிராத்தம் 2, பார்வணசிரார்த்தம் 3, சிராவணி 4, ஆக்கிராயணி 5, சைத்திரி 6, ஆசுவயுஜி 7, ஆகியபாகயஜ்ஞம் 7. அக்கினி ஆதானம் 1, அக்கினிஹோத்திரம் 2, தர்சபூரணமாசங்கள் 3, ஆக்கிரயணம் 4, சாதுர்மாசியம் 5, நிரூடபசுபந்தம் 6, சௌத்ராமணி 7, ஆகிய ஹவிர்யஜ்ஞம் 7. அக்கினிஷ்டோமம் 1, அத்தி

யக்கிஷ்டோமம் 2, உக்தியம் 3, ஷோடசி 4, வாஜபேயம் 5, அதிராத்திரம் 6, அப்தோரியாமம் 7, ஆகிய சோமசமஸ்தை 7. ஆகசம்ஸ்காரங்கள் 40. கர்ப்பாதானமுதல் பதினுன்குடன் அந்தியேஷ்டி 1, சபிண்டீகரணம் 2, உ-ம் சேர்த்து ஷோடசகரும மென்பாருமுளர்.

## வைதீக மதத்தவர் நித்திய கருமங்கள்

ஸ்நாநம், ஸகளீகரணம், அங்கந்யாசம், பிராணுயாமம், அம்ருதீகரணம், சந்த்யாவந்தனம், மார்ஜ்ஜனம், அகமர்ஷணம், சதாசிவத்தியானம், காயத்திரிஜபம், தர்ப்பணம், சூரியபூஜை, பூதசுத்தி, சூக்ஷ்மதேகசுத்தி, ஸ்தூலதேகசுத்தி, அந்தர்யாகம், ஸ்தாநசுத்தி, திரவியசுத்தி, மந்தரசுத்தி, லிங்கசுத்தி, பீடார்ச்சனை, ஆவாஹனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டநம், தேனுமுத்திரை, பாத்தியம் ஆசமனீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், அர்ச்சனை, நைவேத்தியம், பானீயம், ஜபம், ஸ்தோத்திரம், நித்தியாக்கிகாரியம், சண்டேச்வரபூஜை, கபிலபூஜை முதலியன. முற்பட்ட பிராதஸமுத்தாநம் ஸௌசம் தந்தசுத்தி பிற்பட்ட போஜனம் சயநங்கள் யாவருஞ்செய்யத்தக்க அவசியகருமங்களேயாயினும் அவற்றிலும் பகவத்தியானம் ஆசமனம் ஈசுரார்ப்பணம், முதலியன செய்யப்படுவதால் வைதீகர்க்கவைகளும் பக்திக்குக் காரணமான கருமங்களேயாகின்றன.

## பக்தியோகம்.

சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், சேவை(தரிசனம் அர்ச்சனை, தாஸ்யம், வந்தனம், கைங்கரியம், சக்கியம், ஆத்மநிவேதனம் எனப்பத்துவகைப்படும்.

சிரவணம்—பரமேசுரனது கல்யாணகுணங்களையும் பெருமைகளையும் அவனடியார்க்கருளிய முறைகளையும் கேட்பது(=புராணம், இதிகாசங்களின் சிரவணம்.)

கீர்த்தனம்—பரமேசுரனது திருநாமங்களைக் கரதாளமிட்டுப்பாடுவதும், பக்கவாத்தியத்தோடு இராக தாளத்துடன் பஜனைசெய்வதும் கீர்த்தனங்கள்பாடி ஆநந்தக்கூத்தாடிப் பரவசமடைவதும்ஆம்.

ஸ்மரணம்—பகவந்நாமங்களை வாசிகரூபமாய் இடைவிடா துச்சரித்துக்கொண்டிருப்பது.

சேவை—ஆலயத்திற் செய்யத்தகாதகுற்றங்களை யொழித்து பயபத்தியோடு சென்று ஆங்குள்ள உபாசனவடிவைச் சருவஜகத்காரணன் வடிவென வணங்கித் தரிசித்தல்.

அர்ச்சனை—வேறுவிடயங்களில் மனஞ்செல்லாது அன்போடு பத்திரபுஷ்பங்களால் பகவந்நாமங்களைக் கூறியருச்சித்தல் அல்லது அருச்சிக்கச்செய்வித்தல்.

தாஸ்யம்—திருக்கோயிலிற் றிருவலகிடல், திருமெழுக்கிடல், மலர்கொய்தல், மலைத்தார்மாலை கண்ணி இண்டைகளாகச்சமைத்திசனுக்கீதல், திருவிளக்கிடல், நந்தந

வனமுண்டுபெண்ணல், அடியார்பணிபுரிதல், தூபமிடல், முதலியபணிகளியற்றல்.

வந்தனம்—திரியங்க, பஞ்சாங்க, அஷ்டாங்க, நமஸ் காரங்களை விதிப்படி பலதரம் பக்தியோடு புரிதல்,

கைங்கரியம்—பரமேசுராராதனத்துக் குபயோகமான ஆலயம் மண்டபம் தடாகம் இரதம் முதலியவற்றை யியற் றல் ஜீரணோத்தாரணஞ்செய்தல், பக்தி, யோகம் ஞானங் களை விளக்கும் வேதம், ஆகமம் அதன் சம்பந்தமான நூல் களை பிரசித்தப்படுத்தல் புதுப்பித்தல் முதலியன செய்தல் ஆகியபணிகளை உண்மைப்பக்தியோடு தன் திரவியத்தால் செய்தல் செய்வித்தல் யாசித்துச்செய்தல் செய்யத்தூண்டு தல் முதலியன.

ஸக்கியம்—சகலலௌகிககாரியங்களையும் விட்டு இடை விடாது பரமேசுரனுக்குரிய பணிகளையே செய்துகொண்டு அவனையே கதியாயடைந்திருப்பது

ஆத்மநிவேதனம்—லௌகிகப் பிரவர்த்திகளனைத்தை யுமொழித்து மனதை யொருவழிப்படுத்தித் தன்னைப் பரமே சுரனுக்கர்ப் பணஞ்செய்து அதாவது இடைவிடாதவனையே சிந்தித்தாநந்தித்திருப்பது. இதனை பரம ஏகாந்த பக்தி என் றும் அநந்நியபக்தியென்றும் கூறுவர்.

## அப்பியாசயோகத்தின் கருத்து.

அப்பியாசயோகமென்பது பரமேசுரனை யுபாசித்தற் குச் சிறந்த மார்க்கமாகிய ராஜயோகத்துக் கதிகாரி யாதற்

குரிய அப்பியாசங்களைச்செய்து மனம் நிலைத்து ஒருமைப் படப் பயிலுமார்க்கம். அஃது ஆறுவகுப்புகளாக வாக்கப் பட்டிருக்கின்றன. ஆறுவகுப்பிலும் படித்தவன் சர்வகலா சாலைப் பிரவேசப்பரீக்ஷைக்கு (Matriculation) யோக்கியனாவதுபோல இவ்வாறு வகுப்பிற் படித்துத் தேறினவனே ராஜயோகத்திற் பிரவேசிக்க யோக்கியனாவன். முதலாவதிரண்டாவது முதலிய வகுப்புகளிற் படியாதவன் மேல்வகுப்பிற் பிரவேசிக்க யோக்கியனாகாததுபோலப் பக்தியோகம் கருமயோகங்களிற் பயிலாதவன் மேல் யோகங்களிற் பிரவேசிக்கத் தக்கவனாகான் என்பது திண்ணம். இவண் 1 பக்தியோகம் 2 கிரியாயோகம் 3 ஜபயோகம் 4 அஜபயோகம் 5 ஹடயோகம் 6 லயயோகம் இவை அப்பியாச யோகங்களாதலால் ராஜயோகத்துக்குச் சாதனமான ஒழுங்கானபடிவாகக் கூறப்பட்டன.

முதல்வகுப்பாகிய பக்தியோகத்தில் சிரவணம் கீர்த்தனம் ஸ்மரணம், சேவை, அர்ச்சனை, தாஸ்யம், வந்தனம் கைங்கரியம், சக்கியம், ஆத்மநிவேதனம் ஆகிய செயல்களில் அடிக்கடி பயில்பவனுக்கு ஆஸ்திகபுத்தியும் ஈசுரபக்தியும் பலப்படுகின்றன.

இரண்டாவது வகுப்பாகிய கிரியாயோகத்தில் பிராம கருமம் பதினான்கு, சிரௌதகருமம் இருபத்தாறு ஆக 40 சம்ஸ்காரங்களால் தேகசுத்தி சித்தசுத்தி ஆன்மசுத்திகளை யடைகின்றனர். அன்னவர் ஞானவிசாரத்துக் கதிகாரிக

ளாகின்றனர். ஆதலாலிக்கருமங்கள் ஞானத்துக்கங்கமெனப் படுகின்றன. இக்கருமங்களில் பரமேசுர சிந்தனையும் ஸ்தூலோபாசனையாகிய ஆராதனையும் அடிக்கடி நிகழ்வதால் லௌகிக வாசனைகள் குறைந்து வைதிகவாசனை முதிர்ந்து சித்தம் பரமேசுரனைப் பற்றுகின்றது.

நித்தியகருமங்கள் பரமேசுர சிந்தனையையும் பரமேசுரோபாசனையையும், அகங்காரம் மமகாரங்கள் கெட்டுத் தற்போதமிழந்து பிரமோபாசனை செய்தற்குச் சாதனமாகத் தன்வடிவைச் சிவசொரூபமாகப் பார்த்தலையும், தன்னில (ஆத்மாவில்)பிரமோபாசனை செய்தலையும், செயலெல்லாந் தனதென்னு முனைப்பற்றுச் சிவச்செயலாய்க் காணும் அநுபவத்தையும் தினந்தினம் பயிலும் பாடங்களாகப் பயக்கின்றன. இப்பாடம் பலிக்கவே நித்தியாநித்தியவஸ்து விவேகம் பிறந்து பாகியவிருத்தியில் வெறுப்பும் அந்தரவிருத்தியில் விருப்பும் உண்டாகின்றது

மூன்றாவது வகுப்பாகிய ஜபயோகத்தில் மனம் நின்று நின்று பழக சமதமங்களாகிய அகக்கரண புறக்கரண தண்டங்கள் தலையெடுக்கின்றன.

நான்காவது வகுப்பாகிய அஜபயோகத்தில் சமதமங்கள் பலப்படுகின்றன.

ஐந்தாவது வகுப்பாகிய ஹடயோகத்தில் சித்தம் நிலைக்கின்றது.

ஆறாவது வகுப்பாகிய லயயோகத்தில் மனம் லயித்துத் தற்போதம் நழுவத் தொடங்குகின்றது.

இத்தகையபரிபாக முடையவன் ராஜயோகத்திற் பிர வேசித்துத் தாரகசாங்கிய யோகங்களாகிய அதன் அங்கங் களிற்றேர்ந்து அமனஸ்கயோகத்தில்(=நிராலம்பசமாதியில்) அதிதோபாசனை செய்யச் சக்தனுவன். அங்ஙனமன்றித் தொடக்கத்திலே யெங்ஙனம் அதிதோபாசனை செய்யத்தக் கவனுவன். ஆகானென்பது திண்ணம். ஆதலால் பக்தியோ கத்தினுட் பிரிவாகிய ஆலயதரிசனமும் பரமேசுரோபாச னைகற்கும் பாடசாலையில் முதல்வகுப்பென்பதும், முதல் வகுப்பிற் படியாதவன் 7-வது வகுப்பிற் படிக்க யோக்கிய னுகானென்பதுந் தெளிவு, துவக்கத்திலே 6-வது 7-வது வகுப்புகளிற் பிரவேசிப்பவர் முற்ஜென்மங்களில் மற்ற வகு ப்புகளில் பயின்றவரென்றுணர்க.

இனி பரமேசுரனை யுபாசிக்கும் ஞானசம்பந்தமுடைய பாதங்கள் பொதுவகையால் சரியை கிரியை யோகம் ஞான மென நான்கு. சரியை=தாதமார்க்கம்--ஆலயத்தில் திருவல கிடல் முதலியன: அடியவர் பணிபுரிதல் முதலியன. இவை அடிமைபோலப் பணிபுரிதல். கிரியை=புத்திரமார்க்கம்= சௌராதிசண்டாந்த சிவபூஜைபுரிதல்: அக்கினிகாரியஞ் செய்தல். இது பெற்றூனைப் புத்திரன் தொழுதல்போல் பூஜி த்தல். யோகம்=சகமார்க்கம்=பாகியவிடங்களிற் செல்லாது மனதையொடுக்கி யோகம்புரிதல். இது தோழனைப்போல் பூஜித்தல். ஞானம்=சன்மார்க்கம்=தற்போதமிழந்து பரத் தில் அதீதப்பட்டுபாசித்தல். இது உண்மைவழிபாடு இவை உபாசகரின் பரிபாகத்துக்கேற்ப அநுட்டிக்கும் சிறப்புவ

கையால் ஒவ்வொன்றும் நந்நான்காகப் பதினாறுவகைப்படும் அவை வருமாறு.

## 1. சரியையிற் சரியை.

பீஜமந்திரமின்றி ஆசமனஞ்செய்து திருநீறணிந்து இருதயமுதலிய மந்திரங்களாற் சடங்கநியாசஞ்செய்து, மார்ஜ்ஜநம் (பதினொரு மந்திரத்தால் ஜலத்தைச் சிரசிற் புரோக்ஷித்தல்) அகமருஷணம் (பாவம் நசித்ததாகப் பாவித்து ஜலத்தை விடுவது) இயற்றிப்பின் முன்போலாசமனம் புரிந்து, உரியமந்திரங்களால் சிவன், சிவை, கணபதி, குகன், குரு, ஆதித்தன், இருடிகள், மனிதர், பூதங்கள், பிதிர்கள் இவர்களுக்குத் தருப்பணஞ்செய்தல் (தருப்பணம்=திருப்திசெய்விப்பது)

## 2 சரியையிற் கிரியை.

ஆலயத்தில் சாயைமிதித்தல் முதலிய குற்றங்கள் நீங்கி விதிப்படி பிரதக்ஷிணஞ்செய்து உடையவரைத் தரிசித்து நமஸ்கரித்தல் திருவலகிடல் திருமெழுக்கிடல் நந்தனவனம் வைத்தல், புஷ்பமெடுத்து மாலை, இண்டைமுதலியன வமைத்துச் சிவபிரானுக்குச் சாத்தல் அடியார்க்கடிமை செயல்.

## 3. சரிகையில் யோகம்.

சதாசிவமூர்த்தி வடிவமாதைப் பீடாதாரசத்திமுதல் மேற் சுத்த மாயையளவாகவுள்ள விந்துமயநதை அக்கினிவடிவமும், பதுமராக ஒளிபோலும் வண்ணமுமுடைய தாகவும், அதைப் பிரதக்ஷிணஞ் செய்யும்பொழுது ஒருகாற் பாதா

ளத்தில் வலம் வருவதாகவும், ஒருமுறை பூமியில் வலம்வருவதாகவும் ஒருதரம் ஆகாயத்தில் வலம்வருவதாகவும் அதாவது பாதாளம் பூமி ஆகாயமே ஆலயமாக வலஞ்செய்வதாகவும் பாவித்து, அந்த அக்கினிசொரூபத்தில் மனம்பற்றித் தியானிப்பது.

## 4. சரியையில் ஞானம்.

கொல்லாமை, புலனடக்கல், பொறை, உண்மையன்பு, தியானம், நற்றவம், மெய்ம்மை, எல்லாச்செயலும் சிவன்பணியாக வறிதல், இவ்வெட்டும் பரமேசுரனுக்கு மலர்போலப் பிரியத்தைச் செய்யத்தக்கன. இவ்வெட்டுத் தன்மைகளுடையனாகிச் சதாசிவமூர்த்தி அவனடியவர், அவனாலயங்களை அவனாகக்கண்டு தியானஞ்செய்திருத்தல்.

## 5. கிரியையிற் சரியை.

பீஜங்கூட்டி ஆசமனஞ்செய்து *திருநீறுதரித்து, பதினொரு மந்திரத்தால் அங்கநியாசம் கரநியாசங்கள் செய்து, மார்ஜ்ஜனம் அகமர்ஷணம், இயற்றி, காயத்திரி பஞ்சப்பிரமம் மூலமந்திரம். சதாசிவம், மனோன்மணி சத்தி, கணபதி, குகன், தேவர் மந்திரங்களால் தர்ப்பணஞ்செய்து, குரு

---

* திருநீறணிதல். அகச்சமயமம் அகப்புறச்சமயம், அந்நிய தேசமதங்களுக்கும் பொது. இதனுண்மையை இராஜமன்னார்குடி பிரம ஸ்ரீ மஹா மஹோபாத்தியாயர் ஸ்ரீ தியாகராஜதீக்ஷிதரவர்கள் வடமொழியிலியற்றிய விபூதிருத்திராக்ஷ தாரணநிரூபணத்தின் தமிழ் மொழிபெயர்ப்போடுசேர்த்து யானச்சியற்றிய பூதிருத்திராக்ஷதாரணகண்டனத்திற்காண்க.

இருஷி மனிதர் பூதங்கள் பிதிர்கள் மாதாக்கள் முதலியர்க்கும் அவ்வவர்க்குரிய மந்திரத்தால் தர்ப்பணஞ் செய்து ஜெபித்துத் தோத்திரித்தல்.

## 6. கிரியையிற் கிரியை.

சௌராதி சண்டாந்தஞ்செய்யும் ஆன்மார்த்த பூஜை. அது சூரியபூஜை பூதசுத்தி சூக்குமதேகசுத்தி ஸ்தூலதேகசுத்தி அந்தர்யாகம் ஸ்தானசுத்தி திரவியசுத்தி மந்தரசுத்தி இலிங்கசுத்தி பீடார்ச்சனை ஆவாஹநம் ஸ்தாபனம் சந்நிதானம் சந்நிரோதனம் அவகுண்டநம் தேனுமுத்திரை பாத்தியம் ஆசமனம் அருக்கியம் புஷ்பதானம் தூபம் தீபம் அர்ச்சனை நைவேத்யம் பானீயம் உபசாரம் ஜபம் ஸ்தோத்ரம் அக்கினிகாரியம் சண்டேசபூஜை முதலிய முக்கியாங்கங்களையுடையது. அது பிரகாராந்தரத்தால் இலயாங்கம் போகாங்கம் என்றிருவகைத்து.

## 7. கிரியையில் யோகம்

இரண்டுவகைப்படும். 1. ஆன்மதத்துவம் பிரகிருதியிலும், வித்தியாதத்துவம் மாயையிலும், சிவதத்வஞ் சுத்தமாயையினும் தோன்றினவடைவே யொடுங்குவதாகவும், உயிர் சிவன்றிருவடியிற் கூடினதாகவும் அறிவாற்றிபாணித்தல்.

2. பிராசாதத்தியானம் பிராசாதம். மேதைகலைமுதலிய 16.

1. மேதைகலை—மூலாதாரத்தைஆதாரமாகக்கொண்டு ருதிவி நிவிர்த்திகலை சுவாதிட்டானத்தில் அண்டத்திலு

ள்ளது பிண்டத்திலுமுள்ளதாகப்பாவித்து தீச்சுடர் வடிவாக நகாரத்தால் பதினாறு மாத்திரை தியானித்து அம்மேதைகலையழிந்த தாகத்தியானித்து மேற்சென்று.

2. அற்கீசகலை—அப்பு பிரதிட்டாகலை மணிபூரகத்தில் மின்வடிவாக எட்டுமாத்திரை மகாரத்தால் தியானித்து அற்கீசகலையழிந்ததாகத்தியானித்து மேற்சென்று.

3. விஷகலை—தேயு வித்தியாகலை அநாகதத்தில் சிகரத்தால் மின்னொளிவடிவாக நான்குமாத்திரை தியானித்து, ஒழித்து மேற்சென்று.

4. விந்துகலை—வாயு சாந்திகலை விசுத்தியில் வகாரத்தால் விளக்கொளிவடிவாக இரண்டுமாத்திரை தியானித்து ஒழித்து மேற்சென்று.

5. அற்கெந்திகலை—ஆகாயம் சாந்தியாதீதகலை யகாரம் புருவமய்யம் அதீதாவத்தை ஆக்கினையில் சூரியப்பிரகாசமாக ஒருமாத்திரை தியானித்து ஒழித்து

இக்கலைகளுக்குரிய மந்திரம் பதம் புவனம் கருவி மண்டலம் இதழ் மலம் வடிவம் குணங்கள் தெய்வம் முதலியன விரிந்தநூலிற்காண்க.

6. அதன்மேல் மூன்றங்குலம் நிரோசாதகலை புகைநிறம் அரைமாத்திரை தியானித்து

7. அதன்மேல் மூன்றுவிரல் நாதகலை மாணிக்கவொளிகால்மாத்திரை தியானித்து.

8. அதன்மேல் உச்சியில் நாதாந்தகலை மின்னற்கொடி போலொளி அரைக்கால் மாத்திரை தியானித்து.

9. அதன்மேல் நாலங்குலம் சத்திகலை நூறுகோடி சூரியப்பிரகாசம் ஆக மாகாணிமாத்திரை தியானித்து.

10. அதன்மேல் நான்கங்குலம் வியாபினிகலை நாறாயிரம் பாலசூரியர்களைப் போன்றதாக அரைமா அரைக்காணி மாத்திரை தியானித்து.

11. அதன்மேல் ஒரங்குலவெளியில் சமனைகலை நூறாயிரம் உச்சிக்காலசூரியர்போன்றதாக காணிமுந்திரிகைமாத்திரை தியானித்து.

12. அதன்மேலோரங்குலத்தில் உந்மனைகலை இருள்வடிவு போன்றதாக அரைக்காணிக்கீழரை மாத்திரை தியானித்து அதன்மேல் மாத்திரையின்றி மனமிறந்து தியானிப்பது.

13. வியோமரூபினிகலை-நீலநிற ஆகாயம்போன்றது

14. அநந்தைகலை-கண்ணாடிஒளி போன்றது.

15. அநாதைகலை—நீலக்கடல் போன்றது

16. அநாசிருதைகலை--நூறாயிரகோடி சந்திரப்பிரகாசமுடையது.

இத்தியானம் விடுத்த பின்னர் நின்மலஜாக்கிரம் நின்மலசொற்பனம் நின்மலசுழுத்தி நின்மலதுரியம் நின்மலதுரியாதீதத்தைப் பொருந்திப் பிரமசாக்ஷாத்காரம் பெற்றிருத்தல்.

இது பஞ்சகலைப்பிராசாதம், அட்டகலைப்பிராசாதம் தசகலைப்பிராசாதம், துவாதசகலைப்பிராசாதம் சோடசகலைப் பிராசாதம், என்றைவகைப்படும்.

## 8. கிரியையில் ஞானம்.

இது மூன்று வகைப்படும் அவற்றுள் 1-வது. இறைவனைச் சூக்குமாக்கரத்தால் யிதயத்திற்பூஜித்து, பிரணவத்தால் மூலாதாரத்திலக்கினியையெழுப்பி ஹோமஞ்செய்து புருவமத்தியில் தியானித்தல்—

2-வது—தியானத்தால் காயமாகிய கோவிலுள் மனமாகிய அடிமையால் சத்தியமாகிய திருவலகு திருமெழுக்கிட்டு, ஆன்மாவை லிங்கமாக்கி, பத்தியாகிய பாலும் நெய்யும் அன்பாகிய திருமஞ்சனமும் அபிஷேகித்து, கொல்லாமை முதலிய அட்டபுஷ்பஞ்சாத்தி சமாதியாகிய பூஜைசெய்தல்

3-வது காணப்படுவதும் காணப்படாததும் ஆகிய பிரபஞ்ச வடிவனைத்தையும் சத்திவடிவாகவும் அவற்றின் உள்ளுயிர் சிவமாகவும் கண்டு தியானித்து, எங்கும் எப்பொழுதும் (இரவும்பகலும்) நழுவாது அத்தியானத்தில் நிலைத்தல்.

## 9. யோகத்திற் சரியை.

கண்டமளவும் விரல்செலுத்திப் பித்தம் கபம்வாங்கல் ஜலத்தை யுள்ளேவாங்கல் விடல், பிரணவத்தால் ரேசக பூரக கும்பகமியற்றி உத்தூளநஞ்செயல், அன்னங்குறைத்தல் உப்பு புளிப்பு கைப்புகளைமாற்றல், கறிகளை நீக்கல், இயமம்

நியமம் புரிதல், சமஹிதாமந்திரத்தால் சிவனை மனதிற்றியானித்தல்,

## 10. போகத்திற் கிரியை.

பத்மாசனமுதல் நாற்றெட்டாசனங்களிலொன்றிலிருந்து அமுதபபிராணாயாமமுதலிய நாற்றெட்டிலொரு பிராணாயாமம் புரிதல,

## 11. யோகத்தில் யோகம்.

நிராதாரயோகம். அது ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை யுள்ளடங்கவொடுக்கி, பிராணாதி வாயுக்களியங்காமற் கும்பித்து, மனத்தைச சலியாமனிறுத்தி, மூலாதாரமுதலாராதாரங்களையுங்கடந்து மேலேறி, ஆகாயத்திலுள்ள சந்திரகலையோடு அக்கினிசேர்தலா லுருகிவரு மமிர்தத்தை உடலினிறைத்து, அகாராக்கரத்தாற் பரம்பொருளைத் தியானித்து, அத்தியானுகாரமாய்க் கரைந்து இரண்டற்றுத் தூங்கல்,

## 12. யோகத்தில் ஞானம்.

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் ஒளி (நாசிநுனி புருவமய்யம் விளக்கொளி மின்னொளி விந்துவொளி உள்ளொளி) சூரியம் அக்கரங்கள் விந்து நாதங்கள் முதலியவற்றி லொன்றைப்பற்றித் தியானித்து அவ்வடிவாகி, மனமும் வாயுவுமடங்கி வேறொன்றிற் சலியாது அறிவுமயமாய் ஊண் உறக்கங்களினும் பேதியாமல் ஒன்றுபட்டு நிற்றல்.

## 13. ஞானத்திற் சரியை.

முன்னிரவில் சூக்குமவுடலில் யானெனதென்னுந்தன்மையோடு புசிப்பித்த முறைமையும், பின் தூலதேகத்திற் கூடினதையும் ஓர்ந்து, சுத்தஜலத்தில் முகஞ்சுத்தித்துப், பஞ்சாக்கரத்தால் நீறுபூசி முப்பத்தாறு தத்துவங்களும்சுத்தமானதாகப்பாவித்து ஆசமித்து, பஞ்சாக்கரத்தால் அங்கநியாச கரநியாசஙகள் செய்து, பிரமாமுதல் அஷ்டமூர்த்திகளுக்குந் தர்ப்பிப்பது.

## 14. ஞானத்திற் கிரியை.

மானதஸ்நாநஞ்செய்து, தத்துவங்கணீங்கலாகிய பூதசுத்தி, சிவதத்துவமாக்கலாகிய தலைசுத்திசெய்து, விழுந்த பூவும், வடித்தநீரும் வைத்துக்கொண்டு சந்நிதியிலிருந்து, பஞ்சாக்கரத்தை மாறி நியாசம் செய்து, பஞ்சாக்கரத்தாலர்க்கியங்கற்பித்து, வித்தையேபீடமாகத்தியானித்து,தெற்குத்துவாரத்தில் இந்திரியங்கள் அந்தக்கரணங்கள் குணங்கள் பிராணன் ஆணவம் மாயை கன்மம் இவைமயக்கஞ்செய்யும் ஜடம், இவற்றில் வியாபிக்குமுயிர் சிவனருள் என்று தியானித்தலாகிய ஆன்மசுத்தி புரிந்து, பரமாநந்தத்தில் தற்போதமிழந் தழுந்தித் தூங்குவதாகிய அந்தரியாகமியற்றி, அது நீங்கியபின் தன்னைச் சிவனாகத் தியானித்துத் தன்பார்வை சிவன்பார்வையாகக் கொண்டு பூஜாதிரவியங்களைப் பார்த்தலாகிய திரவியசுத்தி யியற்றிப், பின் கணபதி சரசுவதி மகாலக்ஷுமி நந்தி கங்கை மகாகா

ளர் யமுனையாகிய துவாரபாலகர்களைப் பூசித்து உட்புகுந்து, வடகிழக்கு முதலக்கினி மூலைவரை சமயகுரவர் சந்தானகுரவரைத் தியானித்து, ஆசனங்கற்பித்து சதாசிவமூர்த்திமுதலிய சப்தகுருக்களைத் தியானித்து, பஞ்சாக்ஷரத்தாலே விசேஷார்க்கியங் கற்பித்து, சுதந்தரமில்லாத பரதந்திரன்றானென்று தியானித்து, சிவலிங்கத்தைக்கையிலேந்தி பஞ்சாக்ஷரத்தால் பரிவட்டம் திருப்பள்ளித்தாமங்களித்து, ஞானமே திருமேனியென்ற பாவனையாகிய இலிங்கசுத்திசெய்து, அபிஷேகஞ்செய்து, திருவொற்றுடைசாத்தி மந்திராதி ஆறத்துவாக்களே பீடம் பராசத்தி வடிவமாகிய ஞானாக்கினியே இச்சகளலிங்கம் ஆன்மாக்களுக் கறிவுக்கறிவாய் நிற்கும் பரமகுருவாகிய ஞானவெளியே அதில் வியாபித்துள்ள பரம்பொருள் என்று பாவித்து, அருச்சனைபுரிந்து, அவ்விலிங்கத்துக்கு யானென்னும் அகங்காரம் கெட்டுநிற்றலாகிய பாதம், அவண்டிகழும் ஆநந்தமாகிய திருமுகம் ஆன்மா ஆநந்தத்தழுந்தலாகிய திருமுடிகற்பித்துத் தியானித்து,பாத்தியம் ஆசமனம் அர்க்கியந்தந்து, மலர்சாத்தி, களபம் அணிந்து, மாலை இண்டைதரித்து, சோடசோபசாரங்களையும் அறிவாற்செய்து, கொள்வானும் கொடுப்பானும் புசிப்பானும் புசிப்பிப்பானும் புசிப்பும் நீ, எல்லாம்நீ, நீ பசுபாசங்களின் வேறாயிருப்பவனல்லை அவையல்லை எல்லாமுன்செயல் எனக்கெனச்செயலில்லை சிவோஹம் (சிவன்நான்) என்றுதியானித்துபாசித்தல்.

## 15 ஞானத்தில் போகம்.

சிவனுக்கு நமஸ்காரம் என்ற பொருளுடைய பஞ்சாக்ஷரம் பஞ்சப்ருகம், பஞ்சகலை, பஞ்சேந்திரியம், பஞ்சாவத்தை பஞ்சகிருத்தியம், பஞ்சமூர்த்தி முதலேந்தாகச் சொல்லப்பட்டவைகளனைத்துக்கும் மூலகாரணப் பொருளைக் குறிப்பதென்றும், எழுத்துகள் சத்தி அதன்பொருள் சிவபரப்பிரமம் ஆம் என்றும், அதின் முதலெழுத்துச் சிவம், இரண்டாவது சத்தி, மூன்றாவது உயிர், நான்காவது திரோதானம.ஐந்தாவது மலம் இவற்றைக்குறிக்கும் அக்கரங்களென்றும், சிவனால் சத்தியும் அதனால். ஆன்மாவும் ஆன்மாவைப்பற்றிப் போகங்காட்டும் திரோதமும் அதனால் மலமும் நடக்குமென்றும் அறிந்து பதியை முதலாக்கொண்ட ஞானபஞ்சாக்கரத்தால் தியானித்து ஆணவமலம் நீங்கி திரோதங்கடந்து ஆன்மாவைக்கண்டு ஞானத்தைத் தரிசித்துச் சிவத்திற் கலத்தல்

## 16 ஞானத்தில் ஞானம்.

புறச்சமயம் 24 அகச்சமயம் 24 இவற்றில் வேறுபட்ட சமயவாதம் 8 ஆக 56 யும் அயல்தேச மதங்களையும் விசாரித்துணர்ந்து அவை உண்மையுயர் ஞானநெறியொடு முற்றும் பொருந்தாததும் சிறிது பொருந்தியதும் சிறிது பொருந்தாததும் ஆகிய கருத்துகளுடையனவேனும் நாத்திகம் ஆத்திகமதத்துக்குச சாதனமென்றும் ஆத்திகபேதங்கள்

சோபான நெறியில் பல பரிபாகிகளுக் குரியனவென்றும் தெளிந்து பல மதத்காரால் பலபெயரால் பலவாறுவணங்கப் படும் பரம்பொருளொன்றெனத்தேர்ந்து சமதிருஷ்டியடைந்துதத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் என்ற அவதரங்களடைதல் இப்பத்தும் தரிசன முறையால் முப்பதவதரமாம். அவை, 1 பஞ்சபூத தூஷணம் 2. இந்திரிய மறவுணர்தல் 3. அந்தக்கரண சுத்தி 4. கலாதிஞான நிராகரணம் 5. சுத்ததத்துவ தூஷணம் 6. தத்துவரூபம் 7. தத்துவதரிசனம் 8. தத்துவசுத்தி (பாசவகை) 9. கேவலம் 10. கேவலதரிசனம் 11. கேவலாதீதம் 12. ஆன்மரூபம் 13. ஆன்மதரிசனம் (பசுவகை) 14. ஞானதரிசனம் 15 ஞானாதீதம் 16. பரைதரிசனம். 17. பரையோகம் 18. பரைபோகம் 19. பராதீதம் (பரைவகை) 20 சாக்கிராதீதம் 21. சுத்தாவத்தை 22. சுகசொரூபம். 23. சுகாதீதம் 24. சிவரூபம் 25. பரமானந்த தரிசனம் 26. பரமானந்தயோகம் 27. பரமானந்தபோகம் 28. ஆன்மலாபம் 29. பரமானந்தமேலீடு 30. உலகழிப்பு என்பன.

இதுவே வைதிகசைவ சித்தாந்த நெறி. இது ஒரு மதம் பற்றிமற்றொன்றைக் கடியாது எல்லா மதங்களேயும் சோபானமான சாதனங்கள் அல்லது பரிவாரங்களாகக்கொண்டு ராஜாங்கத்தமர்ந்த சமரச சன்மார்க்கமாதலால் ஒரு மதக்கோளிற் பட்டதன்று. இதை உண்மை நெறியென்று

கூறுவர் மேலோர். இப்பதினாறும் நாற்பாதந்தவரும் அறாட்டித்தல்கிரமம். இவையனைத்தும் தெய்வ ஞாபகத்தையும் பத்தியையும் இடைவிடாது தேவசிந்தனையிற் பழகலையும் யோகஞான உபாசனைகளையும் பொருளாயுடையன. இவை அதீதம், அரூபம், ரூபாரூபம், ரூபம், என்ற நான்குபாசனைகளிலடங்கும். மேற்கூறியவற்றில் சோபானவழிகளிற் பயின்று தேர்ந்தோனே உண்மை வழிபாடாகிய அதீதோபாசனை புரிதற்கதிகாரியாவன் என்பதறியக்கிடந்தமை காண்க.

## முடிவுரை.

இவ்வுண்மை யோராது சோபானநெறியி லொழுகுவாரைக்கல்லை மண்ணை மரத்தை மிருகத்தை பக்ஷியை நீரை சூரியனை சந்திரனைத் தெய்வமாகத் தொழுகின்றனர். தெய்வத்தினுண்மை யிலக்கணமறியார் ஸ்நாநாதி ஆசாரங்களை மேலென்றெண்ணி ஆசாரமில்லாரைத் தீண்டாதிகழ்கின்றனர். ஆலயங்களிற்றெய்வத்திற்கென்று பல உபசாரங்களைச் செய்கின்றனர். இவற்றால் தெய்வத்துக்குப் பசுத்வத்தையும் ஜடத்வத்தையுங் கற்பிக்கின்றனர் என்கின்றனர். இங்ஙனம் கூறுபவர் இவற்றின் உண்மை யறியாரே. அஃது கூற்றுக் கீழ்ப்படி தொடங்கி யேறிச் செல்லாமல் மேல்வீட்டுக்குச் செல்லலாமென்பான் மொழியை யொக்கும்.

இதுகாறுங் கூறியபடியொழுங்கில் பிரமத்தை யடையும் நெறி சோபானமார்க்கம் (பிபீலிகா மார்க்கம்) என்னப் பெறும். சோபானமார்க்கம் மோக்ஷத்துக்குப் பரம்

பராசாதனம்! நேரிற் பிரமத்தையடையும் நெறிசாக்ஷாத் மார்க்கம். அது சாக்ஷாத்சாதனமாகிய ஞானம். அது பக்ஷி போல் நேரிற் செல்வதாதலால் விகங்கமார்க்கமெனப் படும். ஞானமடைதற்கும் சோபானமார்க்கமே சாதன மாவதால் அது அவசியம் வேண்டற் பாலது. ஆதலால் இது காறும் அப்பியாசி பயிலும் அப்பியாசமார்க்கமாகிய சோபான மார்க்கங்களையும் சாக்ஷாத்சாதனமாகிய ஞான மார்க்கத்தையும் அவற்றிற்பட்ட உபாசனைகளையுஞ் சிறிது கூறினும்.

இனி அத்தகை ஞானோபாசனையிற் றேரிய ஆரூடனி லக்கணங்கூறில் ஞானவிசாரஞ்செய்து சிந்தித்துத் தெளிவ டைந்து நின்மலதுரியாதீதத்தை யெய்தி மதவுண்டவன் டெனத்தன் வசமற்று, கரணவிகாரமும் போதவிகாரமுங் கெட்டுத்தெளிந்து,பரமாநந்த மேலீட்டில் நிலைத்து நிட்டை கூடல் ஆம். அன்னவன் விழிப்படையினும், விழிப்பு (ஜாக்கி ரம்)நிட்டையென்னும் பேதமின்றி நிரந்தரம் பரமாநந்தாநு பவ மேலீட்டினிலைத்து பிரபஞ்சமெனப்பிரமமென இருமை தோன்றாமல் கண்டதெல்லாம் சிவம், செயலெல்லாம் அவன் செயல், தானுஞ் சிவன் எனக்கண்டு துவிதமற்று நின்ம லதுரியாதீதத்தை யடைந்திருப்பன். இத்தகை ஞானி மிக்கபிரியமுள்ள சோரநாயகன் சிந்தனை மறவாத பெண் போல உலகிலெத் தொழில் செய்யினுஞ் ஜாக்கிராதி எந்த அவத்தையடையினும், பரமாநந்தாநுபவத்தில் நழுவாதி ருப்பன்.

கடல்கடந்து மற்றொருகரையடைதற்கு முதலில்தோணி துடுப்பு முதலியனவும், பின்னர் பாய்மரம் சுக்கான் நங்கூரம் திசைக்கருவி மாலுமி முதலியவற்றோடு கூடிய மரக்கலமும், அதன் பின்னர் இறங்குதோணியும் வேண்டப்படும். அக்கரையடைந்தபின்னர் அவற்றைவிடுத்து அவைகளினுதவியின்றியே ஆங்குள்ள சுகத்தையநுபவித்திருப்பன். அங்ஙனமே மோக்கமாகிய அக்கரையடையவேண்டியவன் சரியை கிரியையாகிய தோணியைப்பற்றி யோகமாகிய, மரக்கலத்தேறி, ஞானமாகிய இறங்குதோணியால் பிரமாநுபவமாகிய அக்கரையடைந்த பின்னர்த் தனக்கவ்விடமடைதற்குச் சாதனங்களாயிருந்த சரியை கிரியை யோகம் ஞானமார்க்கங்களிலும், அவற்றிற்குச்சாதனங்களாகிய தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவம் சாந்தி விரதம் கன்மயோகமுதலியவற்றினும் பராமுகனாகி அவற்றிற் பற்றுதிருப்பன். ஆதலால் அத்தகைய ஞானநிட்டையுடையார் உலகத்திருக்கினும் அவருக்கு நன்மை தீமையாகிய இருவினைகளில்லை. பரோபகாரத்துக்காக நெறிபற்றியொழுகுபவன் போன்றிருந்து வினைசெயினும் ஒருபயனைக் கருதுவதில்லை, கருதவேண்டியதுமில்லை சமயாசாரங்கள் வேண்டியதில்லை. தவம் வேண்டியதில்லை, விரதங்களும் ஆச்சிரமதருமங்களும் வேண்டியதில்லை. தியானம் வேண்டியதில்லை, சித்தசலனமில்லை, சமயவேஷதாரணங்கள் வேண்டியதில்லை. அந்தக்கரணவாதனையில்லை அவற்றையடக்கவேண்டியதுமில்லை, த

மதராசதகுணங்களையடக்கி சத்துவகுணச்செயல் புரியவேண்டுமென்பதுமில்லை, ஓர்லக்ஷியத்தில் நிற்கவேண்டியதில்லை, குலாசாரமில்லை, புண்ணியதேசம் திவ்வியக்ஷேத்திரம், புண்ணியநதி, புண்ணியகாலம், ஜெபஞ்செய்ய விருக்குந் திசை, நியமம், ஆசனம் இவற்றைப்பற்றுதலில்லை. இவர் செய்தற்கெளிய செயல் போற் செய்தற்கரிய செயல்களைச்செய்வர். இவர் பாலர் 1 உன்மத்தர் 2. பசாசர் 3. குணம்பெற்றிருப்பர். நிற்றல், நடத்தல், உறங்கல் விழித்தல், உண்ணல் பட்டினியிருத்தல், இருத்தல் கிடத்தல், சுத்தம் அசுத்தம், வறுமை செல்வம், துன்பம், இன்பம், சினம் புணர்ச்சி, விருப்பு வெறுப்பு, முதலிய விகாரமடைதற்கேதுவாகிய தம்முண்மாறுபட்டதொழிற் தன்மைகள் பலவற்றையடைந்தாலும், அவைபற்றிச் சற்றும் விகாரமடையார்.

1. பாலர்குணம்:—பசித்தபொழுது புசிப்பதன்றி இனிமேற் புசிப்புக்கிது வேண்டுமென்று தேடாதிருத்தல், பெற்றோர் சுற்றத்தார்களின் பேறு இழவிற்சந்துஷ்டியுந்துக்கமுந் தனக்கின்றி யிருத்தல், பிரயோசனங் கருதாதொரு தொழில் செய்தல்.

2. உன்மத்தர்குணம்:—ஒருதன்மையாய் வைவாரையும் வாழ்த்துவாரையும் பிரித்து நோக்காமல் தன் சௌக்கியத்தையும் பேணாதிருத்தல்.

3. பசாசர் குணம்:—பேய்பிடிக்கப்பெற்றவன் தேகத்திற் பிறர் செய்யும் இன்பதுன்பங்கள் பிடித்தபேய்க்கேயாகத் தனக்கின்றியிருத்தல்.

## திருவாசகம்

ஒன்றியிருந்தொன்று மோராங்கிருந்தடைந்து முயிர்ப்பது மாகாதே
உன்னடி யாரடி யாரடி யோமெனவுய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழுதாயென வந்தகணக்கது வாகாதே
காரணமாகுமனாதி குணங்கள் கருத்துறுமாதே
நன்றிது தீதெனவந்த நடுக்க நடந்தனவாகாதே.
நாமுமெல்லாமடியாருடனே செலநண்ணுதுமாதே
என்று மெனன்பு நிறைந்த பராவமுதெய்துவதாகாதே
ஏறுடையானெனை யாளுடைநாயகனென்னுள்புகுந்திடிலே

## திருமந்திரம்.——நின்மலாவத்தை

தானே சிவமான தன்மை தலைப்பட
வான மலமுமப்பாசபேதமு
மானகுணமும் பரான்மாவுபாதியும்
பானுவின் முன்னர் மதிபோற்படாவே.

## திருமந்திரம்——தவதூடணம்.

அத்தவும் வேண்டாங் கருத்தறிந்தாறிற்
சத்தமும் வேண்டாஞ் சமாதிகைகூடினாற்
சுத்தமும் வேண்டாந் துடக்கற்றுநிற்றலாற்
சித்தமும்வேண்டாஞ் செயலற்றிருக்கிலே.

## சிவஞான சித்தியார் சூத் 8.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு நன்மை யொடு
தீமையில்லை நாடுவதொன்றில்லைச்
சீலமில்லைத் தவமில்லை விரதமோடாச்சிரமச்
செயலில்லைத் தியானமில்லைச் சித்தமலமில்லைக்

கோலமில்லைப் புலனில்லைக் கரணமில்லைக்
 குணமில்லைக் குறியில்லைக் குலமுமில்லைப்
பாலருட னுன்மத்தர் பசாசர்குண மருவிப்
 பாடலினே டாடலிவை பயின்றிடினும் பயில்வர்.

தேசமிடங் காலந்திக் காசனங்களின்றிச்
 செய்வதொன்று போற்செய்யாச் செயலதனைச் செய்தங்
கூசல்படு மனமின்றி யுலாவனிற்றனுறக்க
 முணர்வுண்டி பட்டினியிருத்தல் கிடத்தன்
மாசதனிற் றாய்மையினில் வறுமை வாழ்வில்
 வருத்தந்திற் றிருத்தத்தின் மைதுனத்திற் சினத்தி
லாசையினில் வெறுப்பிலிவை யல்லாது மெல்லா
 மடைந்தாலும் ஞானிகடா மரனடியை யகலார்.

இத்தகை ஞானநிட்டை யடைந்தோர் நாற்றெட்டுவித மான முக்தி வாக்கியங்களானும் பிறவற்றானும் கூறப்படும் முக்திகளிற்சிறந்த பரமுக்தி தலைப்படுவர். இத்தகை ஞான மெய்தி அறிதோபாசனை செய்தற்கு வைதிகமத சம்மந்த மான நூலோதல் தானங்கள் யாகங்கள் தீர்த்தம் க்ஷேத்ரம் ஆச்சிரமம் தவம் சாந்தி விரதம் கன்மயோகம் மந்திரயோகம் ஹடயோகம் லயயோகம் முதலியனவும் இதரமதங்களும் சாதனங்களேயாயின. இவ்வுண்மை யறிந்தவர் பாகிய திரிசியானுவித்த சவிகல்பசமாதி பேதத்திற்பட்ட ஆன்மார்த்த லிங்கார்ச்சனையையும் அப்பியாசயோகத்தின் பேத

த்திலொன்ருகிய பக்தியோகத்துக்குரிய ஆலயவழிபாட்டை
யும் இகழாது அவசியசாதனங்களென்கிருர்கள்.

### அநதிகாரிகள்.

தெய்வத்தின் பெருமைகளையும் அது மனவாக்குக் காயங்களுக் கெட்டாத அதிருட்டமான அரிய உயர்பொருளென்பதையும், அதை வழிபடும் மனிதர் சிறுமையையும், அவர் ஆகாரம் நித்திரை புணர்ச்சியினும் பிறவற்றினும் பற்றியுழலும் பழக்கம் பெரிதுடையராதலால் அவருள்ளம் இயல்பில் ஓரிடத்தில் நிலைத்துநில்லாதலைதலையும் ஓர்ந்து தெரியாதவரும், கல்வி நூல் நியாய நூல் (law) கணிதம் வான சாஸ்திரம் வைத்தியம் சிற்பம் சித்திரம் நிருத்தம் வீணை மிருதங்கம் தாளம் மல்லயுத்தம் முதலிய லௌகிக வித்தைகளும் கற்றுக் கேட்டுப்பார்த்துப் பழகினாலன்றித் தாமே வாராமைபோலக் கட்டுப்படாது இடைவிடுதலையுந் தன்மையுடைய மனத்தை உலகிலரியதும் பெரியதுமான கல்விகளிற் றேர்ந்த மஹாபுத்திமான்களும் எவ்வித வித்தையாலும் புத்தியாலும் கருவியாலும் காண்டற்கரியதும் உண்டில்லையென்று தீர்மானித்தற்கு யெட்டாததும் ஆகிய ஒரு குறிகுண மற்ற பரம்பொருளை வழிபடும் தியானத்தில் நிலைக்கச் செய்தற்கு நீண்ட பழக்கமும் அப்பழக்கஞ் செய்வதற்குத் தக்க சாதனங்களும் இன்றி இயலாது ஆதலால் அவை அவசியம் வேண்டுமென்று ஆழ்ந்து கருதியுணராதவரும், இடைவிடாது சிவில் கிரிமினல் ரெவனியூ சம்மந்தமான உத்

த்தியோகம் பிறர்வழக்குப்பேசல், வழக்குக் கற்பித்துத்தரு தல், சாட்சிகளைத்தயாரித்தல், தம்மிடமகப்பட்ட கட்சிக்கா ரர் மனங்கவரப் பேசல், நடவடிக்கையெழுதல், கணக்கெழு தல் முதலிய லௌகிக முயற்சிகளிற் பயின்றவரும், இலௌ கிக நூல்களேயன்றி ஆன்மதத்துவ சாஸ்திரங்களின் மண மும் வீசப்பெறாதவரும், உத்தியோகத்தில் பணத்தில் பெரு மையில் அதிகாரத்தில் வீட்டில் தோட்டத்தில் ஆரோக்கிய த்தில் உடையில் சவாரியில் ஆகாரத்தில் படுக்கையில் போகத்தில் ஆசைவைத்து அவற்றையே பெரிதெனக்கருதி யுழல்பவரும், ஆத்திகபுத்தி முதிர்ந்து பக்திமிகுந்து பரோப காரம் தானம் யாகம் சற்கருமம் முதலியன வுண்மையிற் புரியாதவரும், மனத்தை யடக்குந்திறமையின்றிக்கண்ட பெண்களையெல்லாம் மோகித்துக்கலங்குபவரும், குரோதம் லோபம் அகங்காரம் பொறாமை முதலிய துர்க்குணங் கள் முதிர்ந்து முன்னொன்று பின்னொன்று பேசிச் செருக் கும் பிணக்கரும், நுட்பமான கருத்துகளை உள்வைத்து வைதிக நூல்கள் விதிக்கும் அநுட்டானங்களினுண்மை யறி யாது ஸ்தூல புத்தியுடைய அயல்தேச அற்ப அநுபவநூற் புலவர் கருத்தொன்றே பெரிதென்று மயங்கி அதைச் சித் தாந்தமாகக்கொண்ட சிறு கல்வியினரும், எப். ஏ. பி. ஏ. மு தலிய வகுப்புகளிற்றாம் படித்தபாடங்களிற் கண்டவிடயங் களே சித்தாந்தமென்றெண்ணித் தாம் படியாத ஆன்மதத் துவ சாஸ்திரங்களை மறுக்கத்துணியும் வெறும்பிலுக்கரும், சிட்டுக்குருவியொன்று கடல்நீரைத் தன்வாயள விவ்வள

வொண அளந்து கணிக்கத்தலைப்பட்டாலெனத தமது யோகமகிமையால் கோடானு கோடி அண்டங்களிற் சரித்து அறிந்து ஆங்குள்ள வித்தைகளையுந் தேர்ந்து பலகோடியுகம் பரமேசுரனை யுபாசித்திருந்தமகத்துக்களும் "மண்ணளந்தான் மலரோன் முதற்றேவர்க ளெண்ணளந்தின்னம் பினைக்கிலாவீசனை விண்ணளந்தானை மேலளந்தாரில்லை, கண்ணளந்தெங்குங் கடந்து நின்றானே" என்பது முதலிய உண்மையுரைகளால் பரமேசுவரன் வரைவுபடுத்தி நினைத்தற்கரியான் என்று விளக்கிய பெரும்பொருளைத் தமது சிற்றறிவால் வரைவுபடுத்தித் தியானிக்கும் மார்க்கங் குறிக்க வெளிப்போந்தவரும், உபாசனைமார்க்கங்கள் தேர்ந்த நல்லாசிரியர்பா லடைந்து உண்மையில் வழிபாட்டுவித்தை படியாத துடுக்கரும், தெய்வபக்தர்போல் வேடந்தரித்துழலும் படிறரும்,

எந்த ஆஸ்திகமதத்தையாவது உண்மையொடுபற்றி அதின்படி கடவுளை வழிபடப்புகுந்து தியானிக்கும்பொழுது தியானிப்பவர் மனம் தியேயப்பொருளில் நில்லாமல், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்ற விடயங்களினும், மண் பெண் பொன் சம்பந்தமான விவகாரங்களினும், தம்பற்றுப் பொருள் உயிர், தொழில் பந்து விடயங்களினும், சென்றுழல்வதை அநுபவத்துக்கண்டு நமது மனம் தெய்வத்தியானத்தில் நிலைக்கவில்லையே நிலைக்கச்செய்யும் வழிதெரியவில்லையே யென்று கவலையடையாத வெறும் நாதனவிவே

கிசளும், உலகவநுபவமுந் தெரியாதபாடசாலையிற் கல்வி நூல்கற்கும் வயதினும் அறிவினு முதிராத மாணாக்கரும், ஆகிய லௌகிகர் மனம் ஒருவழியில் நிலைக்கப் பழக வற்பட்டிருக்கும் உபாசனமார்க்கங்களினுண்மையை யெங்ஙனம் அறிவர்? அன்னவர் ஓரிடத்திலிருந்து தெய்வம் எங்கும் நிறைந்த அருவம் என்ற நிர்மானத்தோடு தாங்கள் கொண்டபெயரால் ஒரு நாளிகை தியானித்துப் பார்த்தால் அப்பொழுது அவர்கள் படிப்பும் புத்தியும் சாமர்த்தியமும் தாங்கருதிய பொருளில் மனம் நிலைக்கச் செய்யவுதவாமல் மனம் அலைவதைக் காண்பார். அப்போதவர் இப்பொழுது பேசப்படித்த பாடசாலைபோல மனம் நிலைக்கப் படிக்கும் பாடசாலை யொன்று வேண்டுமென்றறிவர். அங்ஙனமறியவே ஸ்தூலோபாசனை சூக்ஷ்மோபாசனைகளாகிய சோபானமார்க்கங்கள் அப்பாடசாலையிற் படிக்கும் பாடங்கள். அப்பாடசாலை வைதிகமதங்கள் எனத் தெரிந்து உண்மையில் தேவோபாசனை செய்துய்யவிரும்பி; அப்பாடம் படிக்க முயன்று சிர்ப்படுவர். தெய்வபக்தி நிரம்பி உண்மையில் அவனைத்தியானிக்கவொருப்படாத வெறுமையர் எங்ஙனம் இவ்வுண்மைகளை யறியற்பாலராவர்? ஆகார். ஆதலால் உண்மையில் தேவோபாசனைசெய்ய வேட்டவர் சோபானமார்க்கங்களைப் பின்பற்றியுய்வரென்க.

கைவல்யம்.

நூதனவிவேகியுள்ளில் நுழையாது நுழையுமாகிற்
பூதசென்மங்கள்கோடி புனிதனும் புருடனாமே.

## சமயம்.

பொதுநோக்கா லாய்க்கும்பொழுது கடவுள் உயிர்கள், உலகம், என்றமுப் பொருளுண்மை சிலர் தவிர யாவராலும் ஒப்பத்தக்கதே. அவற்றுள் கடவுள் சருவஞானமும் சருவசக்தியும் எல்லா நன்மையும் மேன்மையும் உடையவரும், எல்லவர்க்கும் பொதுவும் இறைவனுமாகிய ஒருவர். ஜீவர் பலகாரணங்களால் அறிவுதன்மை தொழில் பலவேறுபட்ட பலர். உலகும் உலகிற்பொருள்களும் பற்பல. ஜீவர்தந்தமறிவுக்கும் இயல்புக்குமேற்பக்கடவுளை வழிபடலவசியம். கடவுள் ஒரு பெயர் வடிவங்களில்லாதவராதலால் உலகிற் சிலர்தத்தம் தேசபாஷையில் அவரவர் கருதிய கருத்துக்கொத்த பெயர் தந்தழைப்பதும், தெய்வத்தை நம்பி அவரவர் நாகரிகம் புத்தி முதிர்ச்சிகளுக்குத் தக்க படிகளைப் பண்ணலும் அல்லது வணங்கலும் தியானித்தலும் ஒப்பத்தக்கதே. பிறவுயிர்க்குத் தீங்கிழையாது நல்லொழுக்கத்தில் நடந்து ஜீவகாருணியமும் தெய்வபக்தியும் உடையராய்த் தத்தம் பாஷையிற்கொண்ட தெய்வப்பெயரால் வணங்கிப் புகழ்ந்து தியானிப்பவர் யாவரும் அவரவர் நற்செயல் தெய்வசிந்தனைகளுக்குத்தக்க நற்பயனையடைவர். தீயவர்தீய செயலுக்குத்தக்க தீயபயனையடைவர். இதுவே ஆத்திக அறிஞர் அனைவரும் ஒப்பத்தக்க ஞாயமான பொது உண்மை.

இவ்வுண்மைக் கிணங்கியே ஹிந்துவைதீக சமய நூல்கள் கூறுகின்றன. அந்நூல்களை யுணர்ந்த அறிஞருமவ்வாறே யறிகின்றனர். வைதீகசைவ வைஷ்ணவ மதத்தினிற் சூழ்ந்த அறிவுடையரும் முகமமதியா திருவிளாக்கொண்டாடுகின்றனர். அவர்கள் மஜீதில் பாத்தியா முதலிய வணககஞ்செய்கின்றனர். கிறித்துவமாதாகோவிலுக்குப் பிரார்த்தனை செய்து வணங்குகின்றனர். தெய்வமென்று சொல்லி யெந்தமதத்தினர் யாசிக்கினும் உபகரிக்கின்றனர். எந்தமதத்திலிருந்து எந்தத்தெய்வத்தை யெவன்பக்திசெய்யினும் அவனைத் தெய்வபக்தனாகவே நினைக்கின்றனர். இவை வைதீகர் பொதுநோக்குக்குச் சான்றும்.

வைதீக நூல்களின் உண்மைக்கருத்தியாதெனில் உலகிலெல்லாமதத்திலுமுள்ள எல்லாஜீவாகளும் ஈசுவரனுக்குச்சமமான பிள்ளைகளே. சிலர் தப்மை சிலர் பிறா என்பதவருக்கில்லை. உலகிற் பிள்ளைகளிற் சிலர் நெடுங்கணக்குப் படிக்கின்றனர், சிலர் முதற்பாடம், சிலர் இரண்டாம்பாடம், சிலர் மூன்றாவது வகுப்பில் சிலர் ஆறாவது வகுப்பில் சிலர் எப். எ. வகுப்பில், சிலர் பி. ஏ வகுப்பில் வேறு சிலர் எம். ஏ. வகுப்பிற் படிக்கின்றனர். இவர்களுக்கு மின்சாரம் (காந்தம்) முதலியவற்றைப்பற்றிச் சொல்லும்பொழுது அவ்வவர் புத்தி நிலைமைக்குத்தக்கபடி கூறல்வேண்டும். அன்னவரும் அவ்வவர் அறிவின் நிலைமைக்குத் தக்கபடி தான் அறிந்துகொள்வர். அதுபோல் உலகி

னுள்ள ஜீவர்களும் பலகன்மம் ஜன்மம் முதலிய காரணங்களால் பலவிதமாகக் குறைந்த மிகுந்த அறிவுபேதங்களையுடையராவர். ஆதலாலவர் தத்தம் கன்மம் அறிவுக்குத்தக்க ஒவ்வொரு கொள்கை அல்லது மதம் பற்றி அவ்வதற்குரிய தேவதா உபாசனை செய்யத்தக்கராவர். வேலைசெய்தவன் வேலைக்குத் தக்க கூலியடைதல்போல எல்லாமத சம்பந்த உபாசகரும் அவ்வவர் நன்னடை தெய்வோபாசனைகளுக்குத் தக்கபடி போக லோக அபரமுத்திலோகங்களையும் ஜன்மங்களையும் அடைந்து இருவினையொப்பு மலபரிபாகம் வந்தபொழுது பரமுத்தியைத் தலைக்கூடுவர். எந்தமதமும் எந்தமதச்சார்பான உபாசனையும் பயனற்றதன்று. எந்தமதத்திலிருந்து எவவித வழிபாடுபுரியினும் அதற்குரிய பலனளிக்கும் கடவுள் ஒரே ஒருவர். பலதெய்வங்களின்று. என்பதே,

ஆதலால் பிறவுயிர்க்குத் தீங்கிழைக்குஞ் செயலொழித்து தம்மைப்போற் பிறரை நேசித்துத் தெய்வவழிபாடியற்று மெய்மார்க்கமும், இஃது மேற்படி கீழ்ப்படியென்று கணிக்கத்தக்கதாமன்றி முற்றுமிகழத்தக்கதன்று.

### தேவாரம்.

விரிவிலா வறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்தே
யெரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும்
பரிவினாற் பெரியோ ரேத்தும் பெருவேளூர் பற்றினானை
மறுவின்றன் வாழ்த்தி யுய்யும் வகையது நினைக்கின்றேனே.

### திருமந்திரம்.

ஆனசமய மது விதுநன் றெனு
மாயமனிதர் மயக்கமதுவொழி
கானங்கடந்த கடவுளை நாடுமின்
ஊனங்கடந்த வுருவதுவாமே.

### திருவாய்மொழி.

அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடைய நின்றனரே.

தமருவந்த தெவ்வுருவவ் வுருவந் தானாய்த்
தமருவந்த தெப்பேரப்பேர்— தமருவந்த
தெவ்வண்ணஞ் சிந்திப்ப திமையா திருப்பரேல்
அவ்வண்ண மகிழ்வோனாம்.

### சிவஞானசித்தி சூத். உ.

"யாதொருதெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்".

### தத்துவப்பிரகாசம்.

தாவரங்கள் சங்கமங்கள் பூதமைந்து தத்துவங்களா தாரங் கலைகளைந்து, கோவிரவு மக்கரங்க ளியந்திரங்கள் முதலாய்க் கொடியமந்திரங்கள் குணம் விந்துநாதம், யாவை யினி தொன்றினினீ யுண்டென்று லங்கே யில்லாமை குறைவு நிறைவுடையையல்லை, தேவனை யெவ்வெவ ரெப்படிச் சிந்தித்தார் சிந்தித்தவிடத் தந்தவடிவாகை திடமே.

உண்மை யிங்ஙனமிருக்கக் கிறித்துமதத்தினர் பல பாதிரிகளையும் உபதேசிகளையுஞ் சம்பளத்துக்கேற்படுத்தி கிறித்துமார்க்கமொன்றே மெய்யான ஞானமார்க்கமென்றும், மற்றுளவெல்லாம் பொய்யான அஞ்ஞான மார்க்கமென்றும், பல்லாயிரவருடங்களாயுள்ள இம்மண்ணுலகில் 1904-வருடங்களுக்கு முன் பிறந்திருந்து சிலுவையிலறைந்து கொல்லப்பட்ட கிறித்து நாதரை நம்பினுலொழிய ஆயுள் காலமெல்லாம் தெய்வமொன்றுளதென நம்பி இடைவிடாது தியானித்து பிறர்க்குத் தீங்கிழையாது நன்னெறியில் நடந்தாலும், மோக்ஷத்தையடையமாட்டார். ஆதலால் ஞானஸ்நானமென்ற கிரியை செய்து கிறித்துவ மதத்திற் பிரவேசிக்கவேண்டுமென்று பாரநூலோராத அறிவீனருக்குப் போதித்தும், அநாதப்பிள்ளைகளாகிய சிறுவர்க்குப் பணந்தந்தும், இழிந்தகுலத்தவருக்கும் வறுமையுடையார்க்கும் பல ஆசைகளைக்காட்டியும் தங்கள் மதத்துக்கிழுக்கின்றனர்.

முகம்மதியர் மற்றெல்லாத்தெய்வ பக்தர்களையும் நல்லொழுக்கிற் சிறந்தாரையும் காபர் (பாவி) என்றும், தெய்வத்துக்குறிவுக்குறைவைக் கற்பிக்கின்ற விருத்தசேதனஞ் செய்து தம்மதக்கொள்கையை யநுசரித்தோரே இஸ்லாம் (தெய்வபக்தன்) என்றும், இஸ்லா மதப்பிரவேசஞ் செய்தவர்தான் சுவர்க்கமடைவர் மற்றொருவருஞ் சுவர்க்கமடையார் என்றுங்கூறிப் பலரைத் தம்மதத்திற் சேர்க்கின்றனர்.

இந்நாட்டிலத்தகைமௌலாக்கள் அநேகம். உண்மையை ஊகிக்குங்கால் தமிழர் பகலைச் செய்பவனைக் கதிரவன் என்கின்றனர், வடமொழியார் ஆதித்யன் என்றும், இந்துஸ்தானிப்பாடையார் சூரஜ் (Suraj) என்றும், ஆங்கிலேயர் சன் (Sun) என்றும், லத்தீன்பேசுபவர் சோல் (Sol) என்றும், இவ்வாறு பல பேதமாய் பல பாடைபேசும் பலர் சூரியனொருவனையே தத்தமக்குரிய பாடையால் பல பெயராற் குறிக்கின்றனர். அன்னவர் பல ஒலிகளாற் குறிக்கினும் குறிக்கப்படும் பகலைச்செய்யும் ஒளியாகிய சூரியன் ஒன்றே யாதலால் அப்பெயரனைத்து மவனையே பற்றுகின்றன. அங்ஙனமே உலகெலாம் படைத்துக்காத்து அளிப்பதும் எல்லாராலும் வணங்கத்தக்கதுமாகிய பரம்பொருளைக்குறிப்பதற்காக உலகிற் பலபாஷைபேசும் பல மதத்தினரும் அவ்வப்பாஷையிற் பெயர்களை யமைத்து அப்பெயர்களால் அப்பரம்பொருளை வணங்குகின்றனர். எவர் எப்பெயரால் வணங்கித்தியானிக்கினும் அப்பெயரெல்லாம் உலகுக்கிறைவனு மப்பரம்பொருளொன்றையே குறிக்கின்றன. அனைத்தையும் படைத்துக் காத்தளிப்பவரும் வணங்கத்தக்கவரும் ஆகிய கடவுள் ஒருவரே: ஆதலாலவரனைவருக்கும் பொது. எல்லார் வணங்குவதும் அவனொருவனையே. உண்மையிங்ஙனமிருக்கப் பெயர் வேற்றுமைபற்றி யவரை எங்கடவுள், உங்கடவுள் என்றும், இப்பெயருடைய கடவுள் தானுயர்ந்தவர் வணங்கத்தக்கவர் வணங்கினால் பயன் கிடைக்கும், மற்ற பெயரால் வணங்கல்கூடாது

பயன்கிடையாது, என்று கூறுதல் எவ்வளவறியாமை. இங்ஙனம் கூறும் கிறித்துவர் மகம்மதியர்களின் அறிவை நல்லறிவென்று அறிவுடையார் எப்படி நன்குமதிப்பர். கிறித்துவர் இவ்வளவு நியாயமற்ற அறிவைப்போதிப்பதற்காகப் பல மிஷன்களையேற்படுத்திப் பலர்க்குச் சம்பளங்கொடுத்து அறியாமையையும் உலகி லொற்றுமை யின்மையையும் பரப்புவது உண்மைஞான விசாரணையின்மையால் உலகுக்கு விளைக்குங்கேடுகளிலொன்று. அறிவின் முதிர்ச்சியுடையவரானல் கடவுளொருவரே உளர், ஒருவருக்கு மெவ்விதத் தீங்குஞ் செய்யாது எல்லார்க்கும் இயன்ற நலஞ்செய்து கடவுளை நம்பி இடைவிடாது தியானியுங்கள், நாமபேதத்தாற் பொருட்பேதமின்று என்று ஏன் போதித்தல் கூடாது. இத்தகை உயர் ஞானமற்ற கிறித்து சமயத்தைக் கவர்ன்மெண்டுப் பாடசாலைகளிற் போதிக்கும்படி சூழ்ச்சி மிக்க காருணிய இங்கிலீசுகவர்ன்மெண்டார் இடங்கொடுத்தலை நீக்கப்பிரார்த்திக்கின்றனன்.

அன்றியும் கடவுளை வணங்கும் மார்க்கங்கள் பலவுள. அவற்றுள் ஒருவழிபாட்டையேனும் இங்ஙனம் செய்யத்தக்கதென்று ஐயமறத் தெளிவாய் அதற்குரிய லக்ஷணங்களை வரையறுத்துக்கூருது ஒரு சிறிது கூறும் இவ்வசனங்களைப் பின்பற்றி அவற்றிற்கூறிய அளவுக்கும் மனம் நிலைத்துத்தியானிக்கும் வழி யிஃதென்றறியாது, அறியாத பேதைகளிடம் தெய்வத்தைக் கண்டவர்போற் பேசி, கிறித்து

மதமே மெய்மார்க்கம் இதற்குரிய நூலே சத்தியவேதமென்று மருட்டும் கிறிஸ்துவப் பாதிரிமார் ஞானமனைத்துக்கும் பொக்கிசமாகிய வேதாகமங்கள் பரவிய கீழ்த்திசையினின்றே உலகிலுள்ள மற்ற பகுதிகளுக்குச் சிறிது சிறிது அவரவர் அறிவேற்கு மவ்வளவு தெய்வ ஞானம் பரவிற்றென்றும், அவற்றில்ஒருசிறிதேபழையேற்பாடுபுதியேற்பாடென்றதங்கள் மதநூல்களிலுள்ளன வென்றுப், அங்ஙனம் கீழ்த்திசையினின்றே ஞானம் வந்ததென்ற உண்மையைத் தங்கள் மதநூல்களே கூறுகின்றனவென்றும், வேதாகமோபநிடதங்களிற்கூறுத தேவோபாசனமார்க்கம் இவ்வுலகினெத்தேயத்திலுள்ள எம்மதத்திலுமின்றென்றும், ஆத்திகமதமென்னும் விருக்ஷத்திலொருகிளையாகிய கிறிஸ்துவமதத்தவர் எல்லாமதக்கிளை கப்பு கொப்புகளுக்கும் ஆதாரஸ்தானமாகிய வைதீக ஹிந்துமதக் கிரந்தங்களின் பெருமையோராது இகழ்தல் தமக்கே குறைவென்றும் ஆழ்ந்துணராது மயங்குகின்றனர்.

பழையவேற்பாடு எசேக்கியேல் 43—2.

“ இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வந்தது ” (1)

புதியவேற்பாடு மத்தேயு 2—1. “ கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் (ஞானிகள்) எருசலேமுக்கு வந்து ” (2)

இவற்றை யநுசரித்து பெயர்பெற்ற பெரிய அநுபவநூற்புலவர் (Great Scientist) ஆகிய டிண்டால் (Tyndal)

என்பவர் "Religion once came from the east, and from the east it must come again" சமயம் ஒருகாலத்தில் கிழக்கினின்று வந்தது, கிழக்கினின்றே மறுபடி அது வரவேண்டுமே" என்று தனது நீண்ட ஆராய்ச்சியிற் கண்டவுண்மை கூறினர்

---

(1) Ezek 43. 2. "The Glory of God came from the way of the east"

(2) Matt 2. 1. "There came wise men from the east'

*Select writings.* (Printed at the 'Examiner Press' Fort, Bombay, 1891) Page 70—71.

By the most Rev Dr. Leo. Meurin S. J. Roman Catholics' Champion "Dr. Corpenter, for instance, says in the last chapter of his Mental Physiology, that what alienates the whole scientific world from Christianity is such senseless statements of the part of its doctors as that which I have last quoted from you, which dares to deny even your own, previous admission of the Deity's omnipresence, and which makes the Rev. T. E. Slator of Bangalore (see his latest publication revised in a recent issue of the London Journal- India) and the Rev Dr. Miller Principal, Christian College, Madras, acknowledge that Christendom has yet to learn from the "Wise men" of the East, the doctrine of God's "Omnipenetrativeness" as they once learned from the "Wise men" of the East the doctrine of the infant Jesus, spiritual Greatness."

தேர்ந்தெடுத்த விடயங்கள். ரோமன்கத்தோலிக் குரு மோஸ்ட், ரெவ, டாக்டர், லியோமியூரின் எஸ். ஜெ. ஆல் எழுதப்பட்டது.

டாக்டர் கார்பெண்டர் என்பவர் உதாரணமாக தன்னுடைய மானததத்துவ சாஸ்திரம் கடாசி அதிகாரத்தில் கூறுவதென்னவெனில், சாஸ்திரஞானமுறை யாவரையும் கிறித்துமதத்தினின்று பிரித்துவிடுவதுதான் கடாசியிற் கூறியதைப்போன்ற கிறித்துவஞானிகளின் அறிவற்ற வாக்கியங்களே, அவ்வாக்கியங்கள் கடவுளின் சருவ வியாபகத்தன்மையைப்பற்றி நீர் முன் ஒப்புக்கொண்டதையுங் கூட உறுதியாய் மறுக்கின்றன. அவை பெங்களூர் ரெவரெண்ட் டி. இ. சிலேட்டர்ஐயரையும், சென்னை கிறித்துவ கலாசாலை சிரேட்டர் ரெவரெண்ட் டாக்டர் மில்லர் ஐயரையும் கிறித்துவநாடு முன்னொருகாலத்தில் சிசுவாகிய கிறித்துவின் ஆத்மஞானப் பெருமைக் கொள்கையை கீழ்நாட்டு ஞானிகளிடமிருந்து கற்றுக்கொண்டதுபோல இன்னும் கிறித்துவநாடு கடவுளின் எங்கும் நிறைந்ததன்மையின் கொள்கையை கீழ்நாட்டுஞானிகளிடமிருந்தே கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளச் செய்கின்றன.

Dr. Miller says—"India has her ideal...... ...... it is an ideal of which the world has need."

(Madras Times 12—4—1895.)

டாக்டர் மில்லர் சொல்லுகின்றார் " இந்தியா தனக்குரிய அறிவின்முடிவை யுடையது ... ... ...

அவ்வழியின் முடிவு உலகம் வேண்டுவது (உலகத்துக்குத் தேவையானது) (மதராஸ்டைம்ஸ் 12—4—1895.)

இவற்றால் கடவுளின் மகிமைகளையும் அவரை உபாசிக்கும் மார்க்கங்கள்கூறும் சமயபேதங்களையும் நன்குணர்ந்தார் கீழ்திசை ஞானிகளேயென்று சித்தாந்தப்படுகிறது. "கொல்லத்தெருவில் ஊசி விற்பார்" போன்று சமயராசிகளுக்குக் களஞ்சியம்போன்ற வேதாகமோபநிடத மார்க்கம் நிறைந்த இந்நாட்டில் எங்கும் அறியாருண்டாதலால் அறியாரை மருட்டுகின்றனர்.

இஃது கிறித்துவப் பாதிரிகளின் நியாயத்துக்கு மாறான செயலுக்கிரங்கி அன்னவர்க்கு நல்லறிவூட்டும் பொருட்டுக் கூறினும்.

அறிவிலாரால் கட்டப்பட்ட பிறவுயிர்க்குத் தீங்கிழைக்கும் மௌட்யமதக் கொள்கைகள் சில தவிர மற்றுள மத நூல்களிலெல்லாம் பல நல்லவுண்மைகள் கூறப்பட்டேயிருக்கின்றன. அங்ஙனம் பொதுமைஞானங் கூறப்பட்டிருக்கும் கிறித்துவமுதலியமதக்கிரந்தங்களைப் படிக்கும் அம்மதக் குருமார் அவற்றிலுள்ள நியாய அறிவுகளை உலகுக்குக் காண்பித்தாத் தாபித்தால் பொதுமைஞானம் பரவித்தமக் கும்தம்போன்றவர்களுக்கும் பிழைப்புக்கும் கௌரவத்துக்கும் இடமில்லாமற்போமென்றெண்ணி ஞானமான உண்மைக் கருத்துகளை மறைத்து வேற்றுமை பாராட்டும் கருத்துகளேய விளக்கிவருகின்றார்கள் போலும்.

கீழ்நாட்டு ஞானச்சாரிற் பிறந்தனவாதலால் கிறித்து முகம்மதியமதக் கிரந்தங்களினும் மேற்கூறிய மேலான பொதுமைஞானங் கூறும் வாக்கியங்களு மிருக்கின்றன. அவை வருமாறு.

புதியவேற்பாடு:—அப்போஸ்தலர் நடவடிக்கை அதி. 10. 34. "அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி தேவன் பக்ஷபாத முள்ளவரல்ல ரென்றும்"

ஷை 10. 35. "எந்த ஜனத்திலாகிலும் (எந்தஜாதியாரிலும்) அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனே அவனே அவருக்கு உகந்தவனென்று நிச்சயமறிந் திருக்கிறேன். *

---

The Acts 10. 34. "Then Peter opened his mouth; and said, Of a truth I perceive that God is no respector of persons".

10. 35. But in every nation he that feareth him, and worketh righteousness is accepted with him"

* பழையவேற்பாடு.

சங்—145. 9. "கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர். அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக்கிரியைகளின் மேலுமுள்ளது."

சங்—145. 20. "கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றித் துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.

கோரான் அத் 2 வாக் 59.

"Surely those who believe, and those who judaise, and Christians and Sabians, who-ever believeth in God and the last day, and doth that which is right, they shall have their reward with their Lord, there shall come no fear on them, neither shall they be grieved".

"உண்மையாய் நம்புகிறவர்களும் ஜூடைஸ் கிறிஸ்தவர் சாபியன்ஸ் (=விக்கிரகாராதனை முதலியன செய்பவர்) இவர்களில் கடவுளையும் கடைசிநாளையும் நம்பி நீதியைச் செய்கின்றவர்களும் கடவுளால் அவர்களுக்குரிய வெகுமதியை (=பயனை) அடைவார்கள் அவர்களுக்குப் பயமுண்டாகமாட்டாது. அவர்கள் விசனத்தையு மடையமாட்டார்கள்."

அந்தோ இத்தகைக்கருத்தை வெளியிட்டால் கிறித்துமதப் பாதிரிகளுக்கும் உபதேசிகளுக்கும் சம்பளம் யார் கொடுப்பார். இஃதன்றியும் கிறித்துவப் பாதிரிமார் சிறிய பாவஞ்செய்யினும் பெரியபாவஞ் செய்யினும் ஆயுள் காலமெல்லாம் நன்மை (புண்ணியம்) களையே புரியினும் தெய்வத்தை விசுவசிக்கினும் கிறித்துவை நம்பாதவர் பாவமன்னிப்படையாமல் நித்தியநரகடைவர் என்றும், மத். 7. 21. "என்னை நோக்கி, கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிற எவனுமல்ல, பரமண்டலத்திலுள்ள என் பிதாவுடைய சித்தத்தின்படி செய்கிறவனே பரமராச்சியத்திற் பிரவேசிப்பான்" என்று கிறிஸ்துவே கூறியதுக்கு விரோதமாய் ஆயுள்கால மெல்லாம் எத்தனைபாவஞ் செய்திருந்தினும் கிறித்து நாதரை நம்பினோர் பாவமன்னிக்கப்பட்டு மோக்ஷமடைவர் என்றும், தம்மதமே மெய்யென்றும் உயர்ந்ததென்றும் ஆதலால் தம்மதத்திற் சார்ந்தார்தாம் ரக்ஷிப்பாகிய மோக்ஷமடைவரென்றும் கூறிச் செறுக்கித்தமது நியாயமில் கொள்கையினைத்தெனை வெளியிடுகின்றனர். இனியாவதவர் உண்மையையறிந்து நியாயநெறி பேசி அவ்வழியே நடந்துய்வாராக.

விக்கிரகாரா தனத்தைப்பற்றி முன்னர் 12 வினாக்களெழுப்பிய மாணவர் சங்கத்தின் இந்துமதாபிமானிகளிற்

சிலர் தங்கள் வினாக்களனைத்தையும் நான்கு வினாக்களிற் சுருக்கியிருப்பதாயும், அவற்றுக்கு விடையிறுத்தால்போது மென்றும், இரண்டாவதுநாட் பிரசங்கத் திறுதியிற் கூறினார்கள் மூன்றாவதுநாட் பிரசங்கத்தில் விடை கூறப்பட்டது. அவை வருமாறு.

வினா:—விக்கிரகாராதனத்தால்

1. கடவுளைச் சடமாக்குதல்
2. கடவுளை ஏகதேசியாக்குதல்
3. கடவுளைப் பசுவாக்குதல்

} சம்பவிக்கின்றது.

அக்குற்றங்களைப் பரிகரித்தல்வேண்டும்

4. தற்காலத்தில் (விக்கிரகாராதனம்) கோவில்களில் நடக்கிறமாதிரியைச் சரியானதாவென்று ஞாயஞ்சொல்லிக் காத்தல்வேண்டும்; என்பன.

விடை:—(1) பொருண்மையால் உயிர் உடல் வேறாயினுங்குண வியாபகத்தால் பிரிக்கப்படாத ஒற்றுமையுடைமை பற்றி ஒருவன் உடலைக்கண்ணுற் றுயிரைக்கருதி வணங்கவில் உடலுக்கந்நியமாய் உயிர் உளதென்ற அறிவோடங்ஙனஞ்செய்தலன்றி உடலையே உயிராகக் கருதலின்று அதனால் உயிரைச் சடமாக்குதலுமின்று. அதுபோலக்கடவுள் சருவவியாபகனாதலால் பிரிக்கப்படாத ஒற்றுமைபற்றி வியாப்பியப்பொருள்களில் கண்டு வணங்கல் அவற்றின் அந்தரியாமியையேயன்றி அவன் உடலாகிய அப்பொருள்களையன்று, ஆதலாற் கடவுளைச் சடமாக்குதலின்று.

பிரஹதாரண்யம் 5, 7, 3.

'यस्य पृथिवी शरीरं यः पृथिवीमन्तरोयम यत्येषत आत्मान्तर्याम्यमृतः ।

"எவனுக்குப் பிருதிவிசரீரம், எவன் பிருதிவியை உள்ளிருந்து நடத்துகின்றனன் அவன் உனக்கு ஆன்மா, அந்தரியாமி அமிருதன்."

பிரஹ 5, 7, 4.

'यस्यापश्शरीरं योऽपारमन्तरोयम यत्येषतआत्मान्तर्याम्यमृतः ।

எவனுக்கு அப்புச்சரீரம் எவன் அப்புக்களை உள்ளிருந்து நடத்துகின்றனன் அவன் உனக்கு ஆன்மா அந்தரியாமி அமிருதன்."

நா. தேவாரம்:— "ஒன்றாயுலகனைத்துமானார்தாமே" இதுமுதலிய வாக்கியங்களாற் காண்க.

(2) வரையறுத் தோரிடத்திலுள்ள ஒரு பொருளில் இருப்பதாக உபாசித்தலின்றி எங்கும் வியாபித்து எல்லாந் தன்னுருவாயுடைய பரமேசுரனை எங்கும் உருவமனைத்தினும் வணங்குத லுண்மையால் ஏகதேசியாக்குதலின்று.

சுவேதாசுவதரம்:— 3, 16.

सर्वानन शिरोग्रीवस्सर्वभूत गुहाशयः ।

सर्वव्यापीच भगवान् तस्मात्सर्व गतश्शिवः ॥

"எல்லாமுகம் சிரம் கழுத்து உடையவன், எல்லா உயிர்களின் உள்ளக்குகையில் இருப்பவன், எல்லாவற்றையும் வியாபித்தவன் பகவன் ஆகையால் எங்கும் நிறைந்துள்ளவன் சிவன். सर्वोह्येषरुद्रः — सर्वो वैरुद्रः எல்லாம் உருத்திரனே सर्वं खल्विदं ब्रह्म இது எல்லாம் பிரமமன்று

திருவாசகம்:— "விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க."

திருமந்திரம்:— சர்வ வியாபி.

இருக்கின்ற தெண்டிசை யண்டம் பாதாள
முருக்கொடு தன்னடு வோங்கலிவ் வண்ணக்
கருக்கொண்டு எங்கும் கலந்திவன் றானே
திருக்கொன்றை வைத்த செஞ்சடை யானே,

தாயுமானவர்:— "கண்டனவெலா மோன வுருவெளியதாகவும், கருதி யஞ்சலிசெய்குவாம்." அண்டரண்டம் யாவு நீ கொண்டுநின்றகோலமே.

எவ்விடத்தும் பிரிவற நின்றியக்கஞ்செய்யும்சோதி'

(3) பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் சூரியன் சந்திரம் ஆன்மா என்ற எட்டு மூர்த்தங்களும் அவனது சரீரமென்று முன்னரே விளக்கப்பட்டுளது. மண் கல் மர முதலியவற்றாலாகிய வீடு மனிதனுக்கிருப்பிடமாதல்போல ஏழு தாதுக்களாலாய வுடலாகிய வீடு ஜீவான்மாவுக்கிருப்பிடம், சேதனவடிவமாகிய ஜீவான்மா பரமான்மாவுக்கிருப்

பிடம், ஆதலாலதன் அந்தரியாமி என்னப்படுகின்றனன். அப்பரமான்மா மேற்கூறிய சேதனு சேதனப் பிரபஞ்ச மனைத்தையும் தன திருப்பிடமாய்க்கொண்ட வியாபகத்தா லெல்லாமாயினும் பொருண்மையால் அப்பொருளொன்று மாகாமல் அப்பாற்பட்டவனு யிருக்கின்றனன்.

சுவேதாசு 3, 4. विश्वाधिको रुद्रः "(உலகம்) எல்லா வற்றினும் அதிகனுகிய உருத்திரன்" திருவாசகம். போற்றி. "முழுவது மிறந்தமுதல்வா போற்றி" "உரையுணர்விறந்த வொருவபோற்றி" முதலிய வாக்கியங்கள் உணர்த்துகின் றன. அவன் எல்லாஉலகுக்கும் நாயகன். ஆணவம் மாயை கன்மம் என்ற பாசமியல்பினீங்கிய நித்தியசுத்த புத்தமுத்தன் தன்வயமுடைய ஈச்சுரன் சுயாஞதிகரஹிதன் சருவாதி பதிஎன்பது நூல்களின் கருத்து.

சுவேதா 6. 8 नतत् समश्चाभ्यधिकश्च विद्यते "அவனுக் குச் சமானனும் அதிகனுமில்லை.

சுவேதா 6. 7.

तमीश्वराणां परमं महेश्वरं
तं दैवतानां परमं च दैवतम् ।
पतिं पतीनां पमरं परस्तात्
विदामदेवं भुवनेशमीड्यम् ॥

"ஈச்சுரர்களுக்குள் பரமனுகிய மஹேசுரனுய தேவதை களுக்குட் சிறந்தவனுகிய மஹாதேவனும், பதிகளுக்குட்

சிறந்தவனுகிய பதியும் (பசுபதி) புகழத்தக்க புவன நாயக னும் (ஈசுரனும்) அப்பாற்பட்ட பரதெய்வமாக அறிவோம்."

ஆதலால் அவனைப் பசுவாகக்கூறுதல் வைதீக சமயத் தவர் கொள்கையன்று. ஒருமனிதனைக் கௌரவப்படுத்தி வணங்குதற்காக அவன்பாதத்தில் பரிமளதைலமிட்டாட்டி புஷ்பாதிகளைக்கொண் டலங்கரித்துப் பலபண்டங்களைக் காணிக்கையாகவைத்துத் தொழுதலால் அவனை அப்பகுதி யாகிய மாம்சபிண்டமாக்கிய தாமா? ஆகாது.

பரமேசுரனைக் கௌரவப்படுத்தற்கு அவன் சரீரத்தி லொரு பகுதியில் அவனை நினைந்து அன்னை விளைப்பனவும் பல தத்துவார்த்தங்களைக் குறிப்பனவுமாகிய உபசாரங்கள் புரிதலால் அவனைப் பசுவாக்கியதாமா? பரமேசுரனை விசு வாதீதனுகவும் விசுவரூபனுகவும் சருவ வியாபகனுகவும் எல்லா வடிவங்களாகவும் ஜோதிவடிவாகவும் புருடவடிவா கவும் அம்சவடிவாகவும் முதலேவடிவாகவும் ஆநந்தவடிவா கவும் ஞானவடிவாகவும் இன்னும் அநந்தவிதமாகவும் கூறுதலால் மனிதவடிவமே அவனுக்குரிய வடிவமென்று வைதீகநூல்களின் கருத்தின்று. ஆதலால்பரமேசுரனை ஆல யத்தில் கோபுரம் இலிங்கம் பலிபீடம் முதலிய வடிவங்க ளிலும் மனிதவுருச்சம்மந்தமான வடிவங்களிலும்வணங்கு தலும் அபிஷேகம் அலங்காரம் தூபதீப நைவேத்தியம் புரிந்து புகழ்தலும் அவனைப் பசுவாக்குதலாகாது. அன்றி யும்.

தைத்திரீ:—சம்ஹிதை 4. 5. 2. पशूनांपतये "பசுக்களுக்குப் பதியின்பொருட்டு" पशुपतये "பசுபதியின் பொருட்டு" முதலிய வாக்கியங்கள் பசுவன்றென்று மறுக்கின்றமை காண்க.

(4) ஆலயங்களில் அவன் வடிவத்தோர் பகுதியில் அவனைப்பலவாறு உபசரித்து வாழ்த்தி வணங்குதல் எவ்வாற்றானும் அவனைக் குறைத்தலாகாது. அறிவிற் சிறவாதாருக்கு ஆலயம் தெய்வபக்தியிலும் பாடசாலை போன்றதென்று முன்னமேர விளக்கினோம். அபிஷேக முதலியவற்றின் உண்மைக்கருத்தை முன்னர் ஆலயதத்துவமென்ற தலைப்பின் கீழ்காண்க. பள்ளியறை முதலியவற்றின் கருத்தைப்பின்னர்ப் பன்னிரு வினாக்களுக்கு விடை கூறும் 2-ம் பாகத்திற் காண்க.

## பிரமசமாஜம்.

இனிநவீனமாய்த் தோன்றியபிரமசமாஜ கூட்டத்தார் நிஷ்களம் அல்லது அருவோபாசனையையே சிறப்பித்துக் கூறுகின்றனர். அவ்வுபாசனை கொள்ளத்தக்கதே. ஆனால் அவர் விரும்பும் அருவோபாசனை கூறுவதும், அவர் பிரமாணமாக எடுத்தாள்வதுமாகிய தைத்திரியம் சுவேதாசுவதரம் முண்டகம் இருக்குச்சம்ஹிதை முதலிய சுருதிகளினே ருபாருபோபாசனை ருபோபாசனைகளும் கூறப்பட்டிருக்கின்றன. அவைகட்குரிய பரிபாகிகளுக் கவைகளுரியன

வென்றோராது மறுக்கின்றனர். அந்தோ இவர் சில வாக்கியங்களைப் பிரமாணமாகக்கொண்டு சில வாக்கியங்களைக் கொள்ளாது விடுவதெத்துணை அநீதி. சமயம் வந்துழி அவைகளை விரித்துரைப்பேம். ஒருநூலிற் கூறும் உண்மை முற்றுங்கருதி யுணராது தமக்குவேண்டாத வாக்கியங்களை அப்பிரமாணமென ஒழிப்பவர் வாக்கியம் கணிக்கத்தக்கன வன்றாதலால் விடுக்கின்றாம், ஆயினும் சிறிது குறிப்பாம்.

தைத்திரியோ, நாராயணவல்லி पुरुषं कृष्णपिंगलं ऊर्ध्वरेतं विरूपाक्षं "புருடன் கருமை பொன்மை நிறமுடையவன் ஊர்த்தவரேதசுடையவன் முக்கண்ணுடையவன்.

முண்டகம் 3. 1. 3. यदापश्यः पश्यते रुक्मवर्णं कर्तारमीशं — "எப்பொழுது பொன்னிறத்தனும், கருத்தாவும், ஆகிய ஈசனை ஜீவன் பார்க்கின்றனனோ

ரிக்சம்ஹிதை 2. 7. 17. स्थिरेभिरंगैः पुरुरूप उग्रः "நிலையான உறுப்புகளால் பல வடிவன் உக்கிரன்.

தைத்திரியோ 4. 6. 22. नमो हिरण्यबाहवे हिरण्यवर्णाय, हिरण्यरूपाय, हिरण्यपतयेंबिकापतय, उमापतये पशुपतये नमोनम.

"வணக்கம் போற்றோளனுக்கு பொன்னிறத்தனுக்கு பொன்வடிவனுக்கு பொன்னின்றலைவனுக்கு அம்பிகை தலைவனுக்கு உமைதலைவனுக்கு பசுபதிக்கு நமஸ்காரம் நமஸ்காரம்!

சுவேதாசு 4. 21. रुद्र यत्ते दक्षिणं मुखं तेन मां पाहि नित्यं ।

" உருத்திரா எது உனது தென்முகம் அதனால் நித்தமும் என்னைக் காப்பாயாக.

தாம் பிரமாணமாகக் கொண்டுள்ள சுருதிகளிலுள்ள இதுமுதலிய வாக்கியங்களின் உண்மைக்கருத்தை உணரிக்கில் ரூபாரூபபத்தியானங் கூடாதென்னும் தம்மொழி நிலையாதென்றறிவர்.

ஈசாவாஸ்யோபநிடதம் 12.

अन्धन्तमः प्रविशन्तियेऽसंभूतिमुपासते ।
ततोभूय इवते तमोय उसंभूत्यां रताः ॥

என்ற மந்திரத்திலுள்ள संभूति ( = சம்பூதி) என்ற சப்தத்துக்கு படைப்பு= அதாவது செயற்கை விக்கிரகம் என்று பொருள்கொண்டு விக்கிரகங்களைத் தொழுவோர் கொடிய அந்தகாரத்தை அடைவார்களென்று சுருதி கூறுவதால் விக்கிரகாராதனங் கூடாதென்கின்றனர்.

ஸ்ரீ சங்கராச்சாரியசுவாமிகள் தமது உபநிஷத் பாஷியத்தில் அசம்பூதி = பிரகிருதி, சம்பூதி காரியப்பிரமம் (ஹிரணியகருப்பன்) அதாவது உற்பத்தியுடையது என்றுரை கூறியிருக்கின்றனர். சம்பூதி संभूति (= சம்பவம் = சம் என்ற உபசருக்கத்தோடு கூடிய பூ ( भू ) தாதுவினடியாய்ப் பிறந்த சொல் உற்பத்தியாவது என்ற பொருளுடையமையால் உற்பத்தி (நாசங்கள்) உடைய தேவதைகளையும் சூரியன் அக்கினிமுதலிய இயற்பொருள்களையும் குறிக்குமேயன்றிச் செயற்பொருளாகிய விக்கிரகத்தைக் குறியாது. விக்கிரகம் என்றபொருள் ஸ்ரீகண்டர் ராமாநு

ஜர் ஆநந்ததீர்த்தம் பாஷியங்களிலாவது கண்டு அல்லது அகராதிகளிலாவதில்லை, இல்லாதபொருளைக் கூறித்தம் மதத்தை ஸ்தாபித்தலெத்தனை அநீதி.

### விக்கிரகாராதனம்.

இனி விவகாரத்துக்காக அவர்கொள்கைப்படி விக்கிரகமென்று பொருள்கொண்டு விக்கிரகத்தை வணங்குபவர் மிக்க அந்தகாரத்தை அடைவர் என்று கொள்ளில் அதுவும் வைதிகமதத்தவர்க்குச் சம்மதமே. எங்ஙனமெனில், ஒருஜீவனை அவன் சரீரத்தில் வணங்கல்போல் பரமேசுரன் சருவ சரீரியாதலால் அவனை அவன் சரீரத்தில் வணங்குவது ஈசுவராராதனமேயன்றி விக்கிரகாராதனமன்று, ஈசுவரபாவமின்றி விக்கிரகத்தையே வணங்குதல் ஜீவன் நீங்கிய பிரேதத்தை வணங்குதல் போன்றது. பிரேதம் அல்லது மாம்சபிண்டத்தை வணங்குவா ரொருவருமின்று, அவற்றை வணங்குபவர் மூடர் அவர் அஞ்ஞானமடைவர் என்பது திண்ணம். அங்ஙனமே ஈசுரபாவமின்றி விக்கிரகத்தை வணங்குபவர் அந்தகாரத்தை யடைவாரென்பதிற் றடையின்று. வைதிகமதத்தவர் ஆலயோபாசனையில் சிவாலய தரிசனம் சிவகைங்கிரியம் சிவதரிசனம் சிவார்ச்சனை சிவப்பிரசாதம் ஈசுரோபாசனை சுப்பிரமணிய சேவை அம்பிகை தரிசனம் கணபதிதரிசனம் விஷ்ணுஆலயம் விஷ்ணுசேவை பகவதாராதனம் என்று வழங்கலும், வணங்கும் காலத்திலும் சிவா! சங்கரா! பரமேசுரா! மஹாதேவா! முருகா! குகா கணேசா! பரமேஸ்வரீ! கோவிந்தா! ராமா! கிருஷ்ணா! முதலிய நாமத்தால்விளித்து அவனைத்தியானித்து வணங்கலன்றி கல் மண் மரம் செம்பு அல்லது அவற்றின் உருவங்களைக் கல்லே! மண்ணே! மரமே! செம்பே! கல்லுருவமே! செம்பு விக்கிரகமே! ஆண்விக்கிரகமே! பெண்விக்கிரகமே! என்று

விளித்து அல்லது தியானித்து வணங்குவாரின்றி அங்ஙனம் வணங்கல் மரபுமன்று ஆதலால் அங்ஙனம் விக்கிரகத்தையே வணங்குபவர் அந்தகாரத்தை யடைவதுண்மையேயே "प्रतिमास्वप्रबुद्धानां பிரதிமைகளில் (ஈசுரன்) அறிவிற் சிறவாதார்க்கு" என்றஸ்மிருதி வாக்கியமும் விக்கிரகத்திற் பரமேசுரனை வணங்குவதைக் கூறிற்றன்றிப் பிரதிமையை வணங்கலைக் கூறிற்றில்லை. ஆதலால் விக்கிரகத்தை வணங்குபவர் மஹாமூடர் அதியந்தகாரத்தை யடைபவர் என்பது எமக்குஞ் சம்மதமே.

இனி அம்மந்திரத்தின் உண்மைப்பொருள்தான் யாதெனில்.

ये=எவர்கள் असंभूतिं பிரகிருதியை उपासते உபாசிக்கின்றார்களோ (ते = அவர்கள்) अन्धन्तमः மிக்க அஞ்ஞான இருட்டை (அல்லது தமலோகத்தை) प्रविशन्ति उ பிரவேசிக்கின்றனர் ये उ எவர்கள் संभूत्यां உற்பத்தியுடையதில் (= பிறப்பு இறப்புடைய தேவதைகள் சூரியன் அக்கினி முதலிய இயற்பொருள் இவற்றில்) रताः விருப்புடையர் ते = அவர்கள் ततः முற்கூறியதைக் காட்டிலும் भूय इव நிச்சயமாய் மிகுந்த तमः இருட்டை प्रविशन्ति பிரவேசிக்கின்றனர்

संभूति காரியப் பிரமமாகிய ஹிரணியகருப்பன் என்பதும் உற்பத்தியுடையது என்ற பொருள்பற்றியே.

## கருத்து.

ஜடமாகிய பிரதானத்தையே பிரமமென்றுபாசித்தலையும் தோன்றியழியும் தேவதைகளையும் சூரியன் முதலிய பொருள்களையுமே பிரமமென்றுபாசித்தலையும் புரிவோர் அந்தகாரத்தை அடைவர் என்பது.

இதனால் எந்தத் தேவதைகளையும் பொருள்களையும் சருவப் பிரபஞ்சகாரணனை பிரமத்தின் (மூர்த்தம்) வடிவமாகப்பாவித்துபாசித்தல் கூடும்: அவற்றையே பிரமமெனல் கூடாது: என்று விளக்கி உற்பத்தியற்ற பிரகிருதியையும் உற்பத்திநாசமுடைய பிரமா விஷ்ணு ருத்திரன் இந்திரன் முதலிய தேவதைகளையும் சூரியன் முதலிய பொருள்களையும் பிரமமென்பார் மதம் கண்டிக்கப்பட்டது. ஆனால் அவ்வடிவங்களில் அல்லது எவ்வடிவங்களிலும் பிரமத்தை யுபாசிக்கலாம் என்பது உள்ளுறை பொருள் "अग्नौ देवो द्विजातीनां அக்கினியில் தெய்வம் இருபிறப்பாளர்க்கு" என்ற ஸ்மிருதிவாக்கியமும் அக்கினியில் பாமேசுரனை உபாசித்தல் கூறியதேயன்றி அக்கினியைத்தெய்வமாக வணங்கல் கூறிற்றில்லை. இங்ஙனம் உண்மைப்பொருளுணர்ந்துய்வார் அறிஞரென்க.

ஸ்மிருதி.

कर्मौदेवो द्विजातीनां, मुनीनांहृदि दैवतं ।
प्रतिमास्वप्रबुद्धानां, सर्वत्र समदर्शिनां ॥

மொழி பெயர்ப்பு.

தீயிற் றெய்வ மிரு பிறப்பார்க்கு
முனிவர்கட்குள் ளத்தில் முன்னோன்
உருக்களி லோ தியிற் சிறவார் தங்கட்
கெங்கணு மொத்த பார்வை யினர்க்கே.

முதற்பாகம் முற்றிற்று.

# பிழைதிருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 15 | 13 | தன்மைகருந ம் ... | தன்மைகளும் ... |
| 24 | 9 | நியயமும் ... | நியாயமும் ... |
| | 16 | From ... | Form ... |
| | 22 | கொள்பவரும் .. | சொல்பவரும் ... |
| 29 | 18 | உபாஸனயில் ... | உபாசனையில் ... |
| 30 | 3 | வியாபாரங்களும் ... | வியாபாரங்களும் ... |
| | 15 | ஜெந்துக்களுாிணுலும் .. | ஜெந்துக்களுரிணுலு ... |
| | 19 | எழியன் .. | எளியன் ... |
| 31 | 17 | விஸ்வரூபோபாசனை .. | விசுவரூபோபாசனை ... |
| 33 | 18 | புளு .. | புழு ... |
| 35 | 7 | திமிங்சலம் .. | திமிங்கிலம் ... |
| | 15 | புளு . | புழு ... |
| 37 | 22 | எழியன் . | எளியன் ... |
| 48 | 23 | அவயமற்ற .. | அவயவமற்ற ... |
| 58 | 13 | வணங்குவது .. | வணங்குவதும் ... |
| 60 | 7 | மிடறனில் .. | மிடறினில் ... |
| 61 | 19 | சோமாஸ்கந ... | சோமாஸ்கந்தர் ... |
| 63 | 6 | சைவாகமகளின் ... | சைவாகமங்களின் ... |
| | 11 | पूजाम .. | पूजामा ... |
| 64 | 6 | சோமாஸ்கந்தமுதலிய .. | சோமாஸ்கந்தர் முதலிய ... |
| 65 | 21 | பண்ணிேெணு ... | பண்ணிேைணு ... |
| 73 | 1 | ब्रह्म .. | ब्रह्मा ... |
| 76 | 25 | 26. அறிவேத ... | அறியும் அறிவே ... |
| 80 | 2 | கண்டஸ்தூலாபாசனை ... | கண்டஸ்தூலோபாசனை .. |
| 86 | 5 | பரனுதத்தை .. | பரநாதத்தை ... |
| 87 | 3 | மூர்த்தியிலோடுக்கி .. | மூர்த்தியிலொடுக்கி ... |
| 88 | 15 | पद्माख्य . | पद्माख्य ... |
| 94 | 21 | அதுவாகாக்கண்டு .. | அதுவாகக்கண்டு ... |
| 95 | 21 | ஒன்றுகிகாண்பான் .. | ஒன்றுகிக்காண்பான் ... |
| 105 | 23 | மாபு ... | மார்பு .. |

# பிழைதிருத்தம்.

| | | | |
|---|---|---|---|
| 107 | 16 | புருஷைடாந்தரியாமி ... | புருஷாந்தரியாமி ... |
| 109 | 13 | உடமபெனு ... | உடம்பெனு ... |
| 111 | 9 | வாய்வியோபசாரம் ... | வாயவ்வியோபசாரம் ... |
| 112 | 10 | ஜயம் ... | ஜபம் ... |
| 113 | 13 | பிரஜாபத்தியம் ... | பிராஜாபத்தியம் ... |
| | 14 | வைஸ்வதேவம் ... | வைசுவதேவம் ... |
| | 18 | அஷ்டாசிராத்தம் ... | அஷ்டகாசிராத்தம் ... |
| 115 | 4 | எனபத்து ... | எனப்பத்து ... |
| 116 | 3 | இரியாங்க ... | இரியங்க ... |
| | 20 | என்றும் ... | என்றும் ... |
| 117 | 13 | படிளாக ... | படிகளாக ... |
| | 18 | பக்திபும் ... | பக்தியும் ... |
| | 23 | அடைசின்றனர் ... | அடைகின்றனர் ... |
| 118 | 16 | புரக்கரண ... | புறக்கரண ... |
| 123 | 8 | மின்னெருழி ... | மின்னொளி ... |
| 126 | 23 | உறக்யகளினும் ... | உறக்கங்களினும் ... |
| 131 | 18 | அரை ... | அவர் ... |
| 132 | 3 | விகங்காமார்க்கம் ... | விகங்கமார்க்கம் ... |
| 133 | 17 | நெறியற்றி ... | நெறிபற்றி ... |
| 135 | 7 | நண்ணுதுமாதே ... | நண்ணுதுமாகாதே ... |
| 136 | 7 | வருமை ... | வறுமை ... |
| 137 | 14 | இடைவிடதலையும் ... | இடைவிடாதலையும் ... |
| 140 | 7 | நாளிகை ... | நாழிகை ... |
| 142 | 13 | எல்லாஜ்ஜீவர்களுட ... | எல்லாஜீவர்களும் ... |
| 143 | 20 | வறிஞர்கள் ... | வறிவிஞர்கள் ... |
| | 23 | மருவிஞன் ... | மருவினான் ... |
| 144 | 7 | தமதமதறிதறி ... | தமதமதறிவறி ... |
| 155 | 1 | 2, 7, 8, cast ... | East ... |
| | 25 | spritual ... | Spiritual ... |
| 158 | 14 | resputor ... | respector ... |
| 163 | 18 | परमं ... | परमम् |
| | 19 | पमरम् ... | परमम् |
| 167 | 7 | ஈசாவஸ்யோபநிடதம் ... | ஈசாவாஸ்யோபநிடதம் ... |